உ

ஸ்ரீராமஜெயம்

ஸ்ரீமகாபாரதவிலாசம்

# சூது - துகிலுரிதல்

இயலிசை நாடகமென் முத்தமிழ்
வல்லவராகிய

இராயவல்லூர்
இராமச்சந்திர கவிராயரால்
இயற்றப்பட்டது

இதில் நூதனபடங்களுஞ்சேர்ப்பிக்கப்பட்டு
இஃது

ஆறுமுகதேசிகரால்

பரிசோதித்து

திருத்தணிகை.

சித்தையாரவர்களது

வாணிவிலாச அச்சுக்கூடத்தில்.

பதிப்பிக்கப்பட்டது.

1887 ௵



வியாசர்.



அர்ச்சுனன்



திரௌபதை.

உ

ஸ்ரீகிருஷ்ணசகாயம்

# ஸ்ரீ மகாபாரதவிலாசம்.

## சூது - துகிலுரிதல்,

### விநாயகர்தோத்திரம்

வெண்பா-இ-ம்-சங்கராபரணம்

ஓதுமகாபாரதத்தி லுள்ளபடிநாடகமாய்ச்
சூது துகிலுரியுஞ் சொல்லவே-ஆதரவாய்ச
தஞ்சமென்றிரங்குமெங்கள் தர்மவேழமாமுகனார்
கஞ்ச மஞ்சுஞ் செஞ்சரணங் காப்பு

### முருகர் தோத்திரம்

விருத்தம்-இராகம்-தோடி

சரவணபவனேபோற்றி சங்கரன்மகனேபோற்றி
அரிதிருமருகாபோற்றி ஆறுமாமுகனேபோற்றி
திருவளர்குகனேபோற்றி செங்கைவேலவனேபோற்றி
கரிமுகற்கிளையவெங்கள் கந்தனேபோற்றிபோற்றி

### சிவபிரான் தோத்திரம்

விருத்தம்-ஆனந்தபைரவி

திங்கள்செஞ்சடையாய்போற்றி திரிபுரமெரித்தாய்போற்றி
மங்கையோர்பாகாபோற்றி மான்மழுதரித்தாய்போற்றி (றி
துங்கவெண்விடையாய்போற்றி துலங்குமுக்கண்ணாபோற்
எங்கள்நாயகனேபோற்றி யீசனேபோற்றிபோற்றி

### மகாவிஷ்ணுதோத்திரம்

விருத்தம்-இராகம்-பைரவி

ஆரணப்பொருளேபோற்றி அகிலநாயகனேபோற்றி
பாரளந்தவனேபோற்றி பாண்டவர்தூதாபோற்றி
வாரணமழைத்தபோது வந்துகாத்தவனேபோற்றி
காரணவஸ்துவான கண்ணனேபோற்றிபோற்றி

உமையவளுக்கும்-இலட்சுமிக்கும்-சரஸ்வதிக்கும்-தோத்திரம்

விருத்தம்-இ-ம்-காம்போதி

திருவள்ருலகம்போற்றுஞ் சிவகாமித்தாயேபோற்றி
மருமலர்க்கமலமேவு மாதுலட்சுமியேபோற்றி
மருவளர்க்கலைகள்சொல்லி மகத்தானமதுரவாக்கு
தருஞ்சரஸ்வதியேயுந்தன் றாளிணைக்கமலம்போற்றி

தரு-தோடையம்-இ-ம்-ஆனந்தபைரவி- அடதாளசாப்பு

விநாயகர்தோத்திரம்-தரு-இ-ம்-பைரவி

நீதாசரணம்விநோதாசரணம்
ஆதாரமாங்கண நாதாசரணம்

நீதேதுமில்லாம-லிந்தத்தமிழுக்குத்
திருவருள்செய்து-தினங்காக்கவேணுஞ்
சிவசங்கரி-யுலகங்களை-யுதவுந்தனி-யுலவுந்தருள் (நீதா)

சுப்பிரமணியர்-தோத்திரம்.

துய்யாசரணமென்னையாசரணம்
மெய்யானவேல்முரு-கையாசரணம்
ஒய்யாரமாமயி-லேறிவந்தேயேழை
உரைக்குந்தமிழுக்-குதவிசெய்யவேணும்
ஒருமாங்கனி-யதுகொண்டிட-உலகந்தனை-வலம்வந்திடும் (துய்)

பரமசிவன்தோத்திரம்

ஏகாசரணம்-விவேகாசரணம்
வாகானதோகையோர்-பாகாசரணம்
பாகானவிந்தத்-தமிழுக்குதவிசெய்து
பாலிக்கவேணுங்கிர்பை-பாலிக்கவேணும்
பணியுந்திகழ்-மதியும்புன-லருகுந்தனை-சடைதங்கிய (ஏகா)

உமையவள்தோத்திரம்

மாலிசரணம் கபாலிசரணம்
சீலிவிசாலத் திரிசூலிசரணம

நானிலந்தனிலிந்த நாடகம்பாடவென்
னுளிலிருந்துநீ நன்மைதரவேணும்
நவகண்டமு-மதிரும்படி-நடனம்புரி-பதபங்கய (மாலி)

விஷ்ணுதோத்திரம்

நந்தாசரண முகுந்தாசரணங்கோ
விந்தாசரணார விந்தாசரணம்
எந்தாயிதற்கொரு விக்கினமுமில்லாம
லின்னருள் தந்துநீ முன்னிற்கவேணும்
இடமங்கையா-ருடனிங்கித-முடன்மங்க-மடர்கின்றிடும் (நந்த)

சரஸ்வதிதோத்திரம்

வாணிசரணஞ்சொல்-வேணிசரணமிந்தி
ராணிசேர்புத்தகபாணிசரணம்
வாணுதலாலே சரஸ்வதியேயிந்த
வண்டமிழ்ச்சொல்லநல் வாக்குத்தரவேணும்
மலர்தங்கிய-பிரமன்றிரு-வுளமிங்கிர்த-முடனேமகிழ் (வாணி)

## மங்களம்.

தரு-இ-ம்-அசவேரி-திரிபுடைதாளம்

பல்லவி

மங்களம்-ஜெய-மங்களம்-சுப-மங்களம்-மங்களம்

அநுபல்லவி

துங்களிளம்பிறையுந் தங்குஞ்சடைமுடியும்
தேசுலாவுநாகா பாணமுங்கொன்றையும்
வாசமேவுமெய்ஞ் ஞானதிபனென்னுந்
சித்தர்கள்தவ முத்தர்கள்தத்துவ
கித்தர்கள்புரி சுத்தர்கள்பரவிய
கிரிகயனவிலாச மெய்யோர்க்கும்
மலைமகளொனுமா துமைபார்க்கும் (மங்க)

சரணங்கள்

செகமேல்வருமாயை யனைத்துக்
தவாமலவலைகஞான மளிக்கும

மருதேசிகனுக விருக்கும்
குருநாதன்செல்வேன் முருகர்க்குஞ்
சிறுபிறைசிதல்குற மகவள்ளிக்குஞ்
சுராபதிதருமகள் தெவ்வயானைக்குஞ்
திசைமுகனுக்குங் கலைகமளுக்குந்
திருமகளுக்கும் முயல்வண்ணனுக்கும்
சிறுலாவுசூதாடல் துகிலுரிதலைப்
பேருலாவுநன் றுடகமுனைசெய்த
செந்தமிழ்க்கவிராமச் சந்திரன்தனக்குஞ்
சந்ததமாய்ப்பாட மனங்கொண்டதர்க்கும்(ஜெயம்)

விநாயகர்வரும்-பொது-விருத்தம்-இ-ம்-தோடி

அந்தமுமாதியாகியருமறைபொருளுமாகி
விந்துவுநாதமாகி மெய்ப்பொருடானேயாகும்
இந்துவேணிபளித்த விறைபொருமுதல்வனை
கந்தமாமலர்த்தாள்திவ்விய கணபதிவருகின்றாரே

விநாயகர்வருகிற-தரு-இ-ம்-பூரிகல்யாணி-ஆதிதாளம்

பல்லவி

தர்மவிநாயகர்தாமிதோவந்தார்-அருள்புரிந்திட
தர்மவிநாயகர்தாமிதோவந்தார்

அநுபல்லவி

நன்மைசேர்சென்னை முத்தியாலுபேட்டையில்
வன்னியர்வீதியில் வந்துகுடிகொண்ட

வல்லபைப்பெண் மணவாளர் நல்ல
கல்விதருங்கிர்பை யாளர்-எழில்

வானகத்தினில்-மேவுமுக்கிய-தேவருக்குமே-யாவருக்குநல்

வளமிகும்வல-கலைபயின்றிட
வளமிதங்கின-னருள்சார்ந்திதோ (தர்ம)

சரணங்கள்

மங்கையுமையருளங்குச பாசர்-கருணைவிலாசர்
மல்லன் மருகுழல் வல்லமைப்பிராணேசர்
தங்கும்பலகலைதந்தருளும் நேசர்-கோடிசூரியப்பிரகாசர்

தஞ்சமென்றோரிட நெஞ்சந்தனிலவாசர்

பொங்குகஜமுககுரானே வாட்டிய
பூரணவெற்பினிற்பாரதந் தீட்டிய
ஐங்கரனேகல்லமுடிசெய் நாட்டிய
ஔவைக்கிக்கைலாயத்தைக் காட்டிய

ஆகமெய்ச்சதுர் வேமெய்ப்பொரு
ளாயிருட்டபவர் தூயசிறப்பவர்
அங்குமிருப்பவ ரெங்குமிருப்பவ
ராணைமுகத்தவர் மோனமிகுத்தவர் (தர்ம)

## கட்டியக்காரன்வருகிற-பொது-விருத்தம்.

இராகம்-சங்கராபரணம்

மட்டில்லாக்கீர்த்திபெற்ற மதிகுலக்கொழுந்தோனிந்த
அட்டதிக்கெல்ல காக்கு மடல்பெருமா சர்கோமான்
திட்டமாயடக்கும்வீமன் துரியமகாராசன்வாசற்
கட்டியக்காரன்வந்து களரியிற்றோன்றினனே

கட்டியக்காரன்வருகிற-தரு-இ-ம்-சங்கராபரணம்

மிசுரதாளம்

பல்லவி

வாசற்கட்டியக்காரன்வந்தான் மக
ராசன்துரியோதன ராஜாசகெம்பீர (வாசற்)

அநுபல்லவி.

தலையிற்பொன்னுருமாலை துலங்க-கையிற்
சமுதாடபளபளென் றிலங்க-வாகு

வலயங்களிருதோளில் தரித்து-சரிகை
வஸ்திரவல்லவாட்டு விரித்து

சரணங்கள்.

வளுவாய்ச்சல்லடந்தட்டி-வரிசையாய்க்கச்சைகட்டி.

வலதுகையில்மீசை முறுக்கி-வந்த
மறுமன்னர்பயப்பட வுறுக்கி

மகுமண்டலாதிபதிகள்வந்தெதி ரடிபணிந்திடவிறன்முகுந்தள
மதிகுலந்தனில்வருதுரந்தர துரியனென்றிடு பகிபன்வந்திடு
சமயமிதுவெகு சமயமிதுவென சபையிலனைவரும்புகழஇதமுள

வாசற்கட்டியக்காரன்

(வசனம்) அகோதெப்படி யென்றால் யேகசக்கிராதிபதியான சந்திரவம்ச உதாரகுணன ராசபயங்கர ராசகெம்பீர ராசமார்த்தாண்டராசபரமேஸ்வர ராசாதிராசன் துரியோதனமகாராசன் கொலுவுக்கு வருகிறார் பட்டவர்த்தனர்மகுடவர்த்தனர் சகலதேசத்து ராசாக்களெல்லோரு மெச்சரிக்கை ஆரடாகொலுவாசற்காரரே சீக்கிறமாய்க்கொலுவை அலங்காரம்பண்ணும்பிள்ளாய்

பொது-விருத்தம்.

ஒளிகடல்சூழுமிந்த வுலகெலாமொருகுடைக்கீழ்
இலகவேயாளவல்ல ராசாதிராசனான
வலுமையில்மிகுந்தவீரன் மகாதுரியோதனன்றன்
குலவியவழகின்மிக்கக் கொலுவுக்குவருகின்றானே

(வ-ம்.) அகோதெப்படியென்றால் பாண்டவர்கள்செய்த இராசசுயாகத்துக்கு துரியோதனாதிகள் போயிருந்த படியினாலே அவர்களிடத்திலேநடந்த சிறப்புகளனைத்தையுந் துரியோதனமகாராசன்பார்த்துபொறாமையினாலே மனந்தளர்ந்துஅஸ்தினாபுரம் வந்துசேர்ந்து எவ்விதத்திலேயும் பாண்டவர்களை மோசஞ்செய்து அவர்களுக்குக்கொடுத்த இராச்சியத்தையும் செல்வத்தையும்பறிக்கவேணுமென்று ஆலோசனைசெய்யும்படியாய் துரியோதனமகாராசன் கொலுவுக்குவருகிறவிதங்காண்க.

துரியோதனாதிகள்வருகிற-தரு-இராகம்-தோடி-ஆதிதாளம்

பல்லவி

ராசாதிராசன் மகாராசன் துரியோதன
ராசமார்த்தாண்டன்வந்தான் கொலுவிருக்க

ருடணேயாசுசெய்ய
தீ ன் துரியோதன மகாராசன்வருகிறார்
சனங்களே எச்சரிக்கை

துரியோதனன்-கடவுளைத்துதிக்கும்-விருத்தம்

தக்கவோரண்டாண்ட சராசரமென்றையுந்தந்து
மிக்கவேயளித்துக்காக்கு மேன்மைமுத்தொழில்நடாத்தி
பக்குவமுடையனான பாதத்தைப்பெற்றோர்க்கெல்லாம்
கைக்கனிபோல்விளங்குங் கடவுள்செஞ்சரணம்போற்றி

துரியோதனன்சொல்-விருத்தம்

பஞ்சபாண்டவர்களுக்குப் பாதிநாடளித்ததாலே
மிஞ்சினார்கெர்வங்கொண்டார் வீரமும்பலமும்பெற்றார்
எஞ்சலில்லாதராச சுயாகமுஞ்செய்தாரின்னங்
கொஞ்சநாட்சென்றாலிந்த குவலயமுழுதுங்கொண்டார்

(வ-ம்.) கேட்டீர்களோ இராசராசயங்களே பாண்டவர்களுக்கு நாம்பாதிநாடு கொடுத்தபடியினாலே கெர்வத்தினாலும் வீரத்தினாலும் செல்வத்தினாலு மிஞ்சிப்போனார்கள் ஒருவராலுஞ்செய்ப் போகாதஇராஜசூயாகமுஞ்செய்தாக வின்னங்கொஞ்சநாட்போனால் இந்தஉலகமெல்லாம் அவர்களே கைக்கொள்ளுவார்கள் இனி என்னசெய்யப் போகிறேன் இராசாக்களே

கர்னன்-துரியோதனனுக்குச்சொல்விருத்தம்

மன்னவன் தருமராச மகாராசன்சூயயாகம்
இந்நிலந்தனிற்செய்தாற்போ லெவர்செய்துகீர்த்திபெற்றார்
இன்னுமங்கவர்க்கொப்பாக வொருவருமுலகிலில்லை
துன்னுமிவ்வுலகையெல்லாந் துசங்கட்டியவரேயாள்வார்

(வ-ம.) கேளுந் துரியோதனமகாராசனே தருமராசன்செய்த ராசசுயாகத்தைப்போல ஆர்தான் செய்யப்போறார்கள் அவர்களுக்குச் சமானமாகயாரைச் சொல்லலாம் இன்னஞ் சிலநாளைக்குள் உலகமெல்லா மவர்களே யாள்வார்கள்போலத் தோற்றுது உங்கள் கீர்வாக மிப்படியிருந்தா லென்னசெய்யலாந் துரியோதனமகாராசனே

சகுனி-துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்

எழுருவபணிலைத்தா லெருதுமச்சினங்கொண்டாடும்
பாரிக்கேள்கொட்டாவிட்டால் பகர்பிள்ளைப்பூச்சியாகும்
கரிபசிசெஞ்சமமா குகைக்குள்ளேபொதிங்கக்கண்டால்
விரிபஞ்செலுத்தியானை மேல்விழுந்தடித்திடாதோ

(வ-ம்,) கேளும் என்னுடைய மருமகனான துரியோதன மகாராசனே உழுகிறவன் இளப்பமானால் எருதுமச்சினங்கொண்டாடா தாழ்டிங்கியிருந்தால் பாண்டவர்கள் அடித்தது ஆட்டந்தான் பிடித்தது பெண்டுதான் துரியோதனமகாராசனே.

துற்சாதனன்-துரியோதனனுக்குச்சொல்விருத்தம்

செழிப்பு—னவர்பெற்ற செல்வமும்புகழுங்கண்டு
பழிப்புடனீயிருக்கும் பருவமுமெண்ணிப்பார்த்தால்
வழிப்படுங்கதிரோன்முன்னே வன்பகல்மழுகினாற்போல்
இழிப்படுஞ்சந்திரன்போ டிருக்குதுன் செங்கோலண்ணே

(வ-ம்.) கேளும் அண்ணாவே தருமபுத்திரர்கள் பெற்றிருக்கிற செல்வத்தையும் கீர்த்தியையு முன்னையும்பார்த்தால் பகற்காலத்திலே சூரியன்முன்னே மழுங்கிப்போன சந்திரன்போலிருகின்றது உன்னுடைய செங்கோல் அண்ணே இதற்கென்னசெய்யலாம்.

துரியோதனன்-துற்சாதனனுக்குச்சொல்விருத்தம்

ஆமிதுமெய்தான்தம்பி யடங்கினுமிருந்தோமானாற்
பூமியைமுழுதுந்தர்ம புத்திரனேயரசுசெய்வான்
தாமிஷஞ்செய்தாற்பின்பு சாதிக்கக்கூடாதந்த
நேமமாமைவர்செல்வம் நீந்தவோருபாயஞ்செல்லாவீ

(வ-ம்.) ஆம் துர்ச்சாதனா இனி நாம் சும்மாயடங்கியிருந்தால் பூமியெல்லாம் பஞ்சபாண்டவர்களே யாள்வார்கள் இனி நாம் சும்மா யிருக்கலாகாது தர்மபுத்திராதிகளை எந்தவிதத்திலேயும் வெல்லும்படிக்கு ஒருபாயத்தைத் தேடிச்சொல்லுங்கள் பார்ப்போம் சபையோர்களே,

துற்சாதனன்-துரியோதனனுக்குச்சொல்விருத்தம்

குஞ்சரங்குதிரைதோற் கொல்வதற்குபாயமுண்டு
நஞ்சினையீட்டிக்கொல்ல நமக்குள்ளேசமர்த்துமுண்டு
வஞ்சனையாலேகொல்ல மாமனார்சகுனியுண்டு
பஞ்சபாண்டவரைக்கொல்ல பாரமோசொல்வாயண்ணே

(வ-ம்) கேளும்அண்ணாவே ஆனையின்பேரிலும் குதிரையின்பேரிலும் ரதத்தின்பேரிலும் யேறிக்கொல்லுகிறதற்கு அனந்தம் உபாயமுண்டு விஷங்களையூட்டிக்கொல்லுகிறதற்கு நமக்குள்ளே சாமார்த்தியமுண்டுவஞ்சனை துரோகஞ்செய்து கொல்லுகிறதற்கு சகுனிமாமனுண்டுபாண்டவர்களை வெல்லுகிறது வெகுபெரிதாய்ச்சொல்லவேண்டாம்அண்ணே

துன்னியபாண்டவர் சின்னஞ்செய்தார்களே சகுனிமாமா அந்த
துற்சனத்தப்போ துணைத்தனம்வந்ததே சகுனிமாமா
மன்னவனென்றெண்ணி மதியாமற்போனாரோ சகுனிமாமா - என்
மரியாதைசெய்துவணங்காதிருந்தாரோ சகுனிமாமா
பஞ்சவரோளிதம் பண்ணதும்போதாமல் சகுனிமாமா அந்தப்

பட்டிதுரோபதைஎன்னைப்பார்த்துநகைத்தாளே சகுனிமா
கொஞ்சமாயெண்ணிக் குலுங்கநகைத்தாளே சகுனிமாமா - அந்த
குக்கச்சிமிக்கியென் வெட்கங்கெடுத்தாளே சகுனிமாமா
நீலிபழிக்க நிலத்திலிருந்தேனே சகுனிமாமா அத்தை
நினைக்கநினைக்கநெருப்பாயெரியுதே சகுனிமாமா

வேலிக்குமுட்போட காலுக்குதைக்குதே சகுனிமாமா - அந்த
வெஞ்சினந்தீர்ந்திடவேளைக்கிடைத்ததே சகுனிமாமா
எத்துகளுஞ்சூது வித்தைகளுங்கற்ற சகுனிமாமா என்னை
எப்படியாகிலும் ஈடேற்றவேணுமென் சகுனிமாமா
குந்திசைபாண்டவர் குடியைக்கெடுத்தாலென் சகுனிமாமா உன்

குலதெய்வமாய்வைத்துக்கும்பிட்டிருப்பேனுன் சகுனிமாமா
சொக்கட்டான்பாண்டவர்தோத்திடநீசெய்தால் சகுனிமாமா உன்
துணையாகவைத்துநான்சொன்னபடிகேட்பேன் சகுனிமாமா
கைக்குக்கண்ணாடி என்கண்ணுக்குக்கண்ணேஎன் சகுனிமாமா -
காத்தாலும்நீகளை சேர்த்தாலுநீயேயென் சகுனிமாமா.

பொது விருத்தம்

இப்படிதன்மனத்தி லிருந்திடும்பொறாமையெல்லாம்
ஒப்புடன்துரியன்சொல்ல உளமதுமகிழ்ந்துகேட்டு
தப்புறுசகுனிமுன்னே சாற்றியமந்திரத்தை
அப்புறமெவருங்கேட்கச் சொல்லுவான்சொல்லுவானே

சகுனி-துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்

மண்டபமொன்றுண்டாக்கி
வரவழைத்துக்காண்பித்து மகிழப்பேசி
உண்டுமுதலானபின்புபொழுதுபோக
வொருதாஞ்சூதாடுவமென்றுரைத்தோமானால்
தண்டிவருந்தருமனும்பின் வாங்கமாட்டான்
சபைதனிற்சூதாடுதற்குச் சம்மதிப்பான்
வண்டினலாயாடியபேர்தென்சமர்த்தால்
வாழ்வையெல்லாமவர்தோற்க வகைசெய்வேனே

(வ-ம்.) கேளும் என்னாசைமருமகனான துரியோதனமகாராச
னேநான்சொன்னபடி ஒருசபாமண்டப முண்டாக்கினியோ

யானால் அதனைக்காணும்படியாய்ப் பாண்டவாளையழைப்பித்து போசனாதிகள்செய்தபின்புபொழுதுபோகவேண்டுமென்று ஒரு ஆட்டம்சொக்கட்டானாடவேண்டுமென்றால் தருமராஜனும்சம்மதிப்பான் அப்போது பந்தயம்வைத்தாடுங்காலத்திலே அவர்கள்நாடுநகரம் ஆனைசேனைபண்டிபண்டாரம்பொக்கரோசனை இதுமுதலாகியதெல்லாம் உனக்கே வரும்படியாய்க் கெலித்துத்தருகிறேன் பாரும் என்சமர்த்தைதுரியோதனமகாராசனே

துரியோதனன்-விதுரனுக்குச்சொல்விருத்தம்

மிகுதிறல்சிறியதந்தை விதுரனேநின்றாள்போற்றி
சகுனியென்மாமன்சொன்ன தந்திரவுபாயத்தாலே
நகும்புகழவர்நாடு நகரமுநாமேகொள்ள
தகுந்தகுமிதுவுமக்குச் சம்மதிதானோசொல்வீர்

(வ-ம்.) சரணம்சரணம் விதுரமகாராசனே என்மாமனானசகுனிசொன்னவுபாயத்தினாலே பாண்டவர்களுடையசெல்வத்தை நானேயனுபவிக்கப்போகிறதுபோலேதோணுது அதுஉனக்குச்சம்மதிதானோ தெரியச்சொல்லுமையா

விதுரன்-துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்.

பாதிநாடளித்தபின்பு பறித்திடநினைத்துவஞ்சு
சூதினால்வெல்வோமென்று சொல்வதுதருமந்தானோ
நீதியோநிறையோஐயோ நீசொல்லுங்கொடியவார்த்தை
காதினுங்கேட்கலாமோ கனவினுநினைக்கலாமோ

(வ-ம்.) கேளுமப்பா துரியோதனமகாராசனேபாண்டவர்களுக்குப்பாதிநாடுகொடுத்தோமே இப்போதவர்களைஇங்கேயழைப்பித்துகபடமார்க்கமாய்ச் சொக்கட்டானாடச்செய்து மறுபடியும் அவர்களுக்குக்கொடுத்துவிட்டநாட்டை அபகரித்துக்கொள்ளுகிறதுதருமமா இதுநீதியா அரி அரி இந்தவார்த்தையை காதிலுங்கேட்கப்போகாது கனவிலும்நினைக்கப்போகாது துரியோதனா

துரியோதனன் விதுரனுக்குச்சொலவிருத்தம்

தீதாகவெனதுவாழ்வையுஞ் சிறப்பையுங்கொடுத்துத்தாங்கள்
மீதாகநினைக்குந்துஷ்ட விரோதிக்குக்கொடுத்தநாட்டை
வாதாடிபறித்துக்கொள்ள மனுநீதியிருக்கமேலுஞ்
சூதாடிபறித்துக்கொண்டாற் தோஷமென் அனாய்கலாமோ

(வ-ம்) ஆகா ஆகா நன்றாய்ச்சொன்னீர் பிழைத்துப் போகட்டுமென்று பாதிநாட்டைக்கொடுத்தால் அதைவைத்துக்கொண்டு

(வ-ம்) கேளுமப்பா துரியோதனா பாண்டவர்களும் நம்மளும் ஒருவருக்கொருவர் சண்டைசச்சரவுபட்டால்மற்றராசாக்களெல்லாம்பழிப்பார்கள் நடக்கிறகாரியத்தைச்சொன்னால் சொன்னசொல்லுக்கேளாமல்வஞ்சனையாசொன்னேனென்றுசொன்னால் இனிநான்வேறென்ன சொல்லப்போகிறேன் துரியோதனா.

துரியோதிரன்விதுரனுக்குச்சொல்விருத்தம்

துன்னியகபடுஞ்சூதுந் துற்புத்திதர்ம்மமெல்லாம்
என்னிடத்தினிலேதானே யிருக்குதுமெய்தான்மெய்தான்
சொன்னசொல்மறுத்துவிட்ட துஷ்டனானகையாலே
பொன்னடிகமலம்போற்றி பொறுத்துக்கொண்டேகுவீரோ

(வ-ம்) அப்பா சிற்றப்பா அந்தமட்டிலேபோதும் என்னிடத்திலேகபடமுஞ்சூதும் துற்புத்தியும் அதர்ம்மமுங் குடிகொண்டிருக்கிறது பெரியோர்கள்சொல்லப்பட்டவார்த்தையை தள்ளிவிடப்பட்டதுதுஷ்டத்தனமுமிருக்கிறது ஆகையால்என்குற்றத்தையெல்லாம்பொறுத்துக்கொள்ளவேண்டும் சரணம்சரணம் எழுந்திரும்போய்வாரும் போய்வாரும்.

விதுரன்திரியோதனனுக்குச்சொல்விருத்தம்

ஆன்றதோருன்குடிக்கு அஷ்டமச்சனிபோல்வந்து
தோன்றியசகுனிமாமன் துற்புத்தியாலேயுந்தன்
என்றனன்வரசும்வாழ்வு மிழந்திடக்காலம்வந்தால்
ஊன்றியபெரியோர்வார்த்தை யுறைக்குமோவுறைத்திடாதே

(வ-ம்) அடாதுரியோதனா உன்னுடையகுடிக்கு அஷ்டமச்சனிபோல்வந்துவாய்த்த சகுனியினுட துற்புத்தியிற்உன்னுடைய செங்கோலும் வாழ்வும் இழந்துபோகிறதற்கு காலம்வந்து சேர்ந்ததானால் கல[illegible]என்வார்த்தை உன்செவிக்கேற்குமா ஏற்காது மற்றதெல்லாம் அ[illegible]னுபவிக்கவேணும் துரியோதனா.

பொது-விருத்தம்.

விதுரனுங்கொலுவைவிட்டு வெகுண்டுமேபோனபின்பு
கதிர்முடிவேந்தன்று[illegible]வம கபடுசெய்சகுனிதானும்
சதிசெய்யுந்தம்பிதுச்சா தனனுமற்றவருங்கூடி
கிதிதருமண்டபத்தை நிர்மிக்கத்தொடங்கினாரே

துரியோதிரன் துற்சாதனனுக்குச்சொல் விருத்தம்.

தம்பிதுச்சாதனாநீ தாமிஷமாயிராமல்
கம்பிதசித்திரசிற்பங் களைவிசித்திரமுந்தோய்ந்த

வும்பருமகிழத்தக்க வொருசிற்பசாரிதன்னை
நம்முடகொலுவுக்கிப்போ நளினமாயழைப்பிம்பாயே

(வ-ம்) அடாதம்பிதுற்சாதனா இப்போதாமிஷமாயிராமல் சிற்பசாஸ்திரமெல்லாம் நன்றாய்கரைகண்டவனாக ஒருசிற்பசாஸ்திரியையழைப்பியும் தம்பிதுற்சாதனா.

துற்சாதனன்சொல் வசனம்

அப்படியே யழைப்பிக்கிறேன் அண்ணா.

துற்சாதனன்சேர்வைக்காரனுக்குச்சொல்-விருத்தம்.

ஆரடாசேர்வைக்காரா அதிசீக்கிரமாகவோடி
பாராடாபுகழைப்பெற்ற பார்த்திபனழைத்தானென்று
சாரமாஞ்சொந்தசிற்பா சாரியையிட்சணத்தில்
சீருடன்கொலுவுக்கிப்போ சீக்கிரமாய்வரச்செல்வாயே

(வ-ம்) ஆரடாசேர்வைக்காரா ராஜாதிராஜனான துரியோதனமகாராஜன அழைத்தானென்று நம்முடையசிற்பசாரியை இந்தட்சணங்கொலுவுக்கு வரச்செய்யும்பிள்ளாய் சேர்வைக்காரா.

சேர்வைக்காரன்சொல்-வசனம்.

அப்படியே வரச்செய்கிறேன்-சுவாமி

சேர்வைக்காரன் சேவகனுக்குச்சொல்-கவி

மற்புயவீரா சிற்பனையிப்போ
ஒப்புடனழைத்துக்கொப்பனவாடா

(வ-ம்) ஆரடா சேவகர்சிற்பசாரியை அதிசீக்கிரத்தில் அழைத்து (வாடா

பொதுவிருத்தம்.

விதித்தமுன்னாலும்பூண்டுவிபூதியட்சதையுமிட்டு
துதித்தநீர்க்காவிச்சோமன் சொ[illegible]னுடுத்திநன்றாய்
மதித்திடுஞ்சிற்பநூலு[illegible]டனற்பலகையேந்தி
சதித்திடுஞ்சபையில்விஸ்வ[illegible]கர்மனும்வருகின்றானே

கட்டியக்காரன்சொல்-வசனம்.

அகோவெதப்படியென்றால் இராசாதிராசனான துரியோதனமகாராஜன்கொலுவுக்கு சிற்பசாஸ்திரி வருகிறவிதங்காண்க.

விஸ்வகர்மன்வருகிற-தரு-சங்கராபரணம்-ஆதிதாளம்

பல்லவி

இசையும்பாரிலெட்டுத் திசையுங்கீர்த்திபெற்ற (விசுவ

சரணங்கள்

வேதியரெல்லோருஞ் செய்கின்றதொழில்களும்
வேள்வியு மென்னாலே
மேதினியாள்கின்ற வேந்தர்கைசெங்கோல்
விளங்குவ மென்னாலே
தீதில்லாநாலு வைசியர்களுஞ்செய்யுஞ்
சீவன மென்னாலே
திரமானசூத்திரர் யாவரும்போற்றிடும்
செல்வமு மென்னாலே
பூதலமீதில் தேவாலயமானதும்
புனல்சேர்தடாகப் பிரதிஷ்டைக ளானதும்
சோதிதருமரிடமாளிகை யானதும்
சூக்ஷாதிசூக்ஷ துணைகளுங் டானதும்
எல்லா மென்னாலே-உலகம்
ஏழு மென்னாலே
தாதவிழ்மாலை குருகுலபாண்டவர்
தப்பிப்பிழைத்திட்டதந்திர மென்னாலே
ஆதலாலுள்ளதுசொன்னேன்சொன்னேன் காணும்
ஓதினேன்பொய்யல்லவுற்றுப்பார்க்க வேணும்-விசுவ

சிற்பன்திரியோதனனுக்குப்போற்றிவிருத்தம்.

மன்னர்கள்மன்னுபோற்றி மகுடாபிஷேகாபோற்றி
கன்னல்வில்மதனுபோற்றி கண்டகர்மிண்டாபோற்றி
பொன்னணிமார்பாபோற்றி பூச்சக்கிரவர்த்திபோற்றி
என்னையிங்கழைத்தசேதி யியம்புவீர்போற்றிபோற்றி

(வ-ம்) சரண[ம்] [ச]ரணம் இராசமார்த்தண்ட இராசவுத்தண்ட ராசகெம்பீரா தே[வ]ரீர் யடியேனையழைப்பித்தகாரியம் அருளிச் செய்யவேணும்சுவாமி

துரியோதனன்-சிற்பாசாரிக்குச்சொல்-விருத்தம்

சிற்பனேகேளாய்நல்ல சித்திரவிசித்திரமா[க]
அற்புதமாகயாரு மதிசயப்படுவதாக
உற்பனமண்டபத்தா னொன்றிங்கேசெய்யவேண்டும்
விற்பனமாகச்செய்தால் வெகுமதிசெய்வேன்பிள்ளாய்

(வ-ம்) வாரும்சிற்பாசாஸ்திரி இங்கேமகாஉன்னதமாக ஒருசபாமண்டபஞ்செய்யவேண்டும் அந்தப்படிசெய்தால் உனக்குநல்ல வெகுமதிகள்செய்வேன்பிள்ளாய்

# சூது துகிலுரிதல்.

சிற்பாசாரி-துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்

மூவருமெச்சமற்ற முனிவருமெச்சவானிற்
றேவருமெச்சவெங்கள் தேவரீருமெச்ச
யாவருமெச்சநல்ல வெழில்மண்டபத்தைச்செய்வேன்
தாவறுமெனதுசிற்சமர்த்தைநீபாருஞ்சுவாமி

(வ-ம்)கேளுஞ்சுவாமி மும்மூர்த்திகளும் முனிவர்களும்தேவர்களும்மற்றவர்களுந்தாங்களும்மெச்சும்படியாய்ச் சபாமண்டபஞ்செய்கின்றேனென்னுடையசாமார்த்தியத்தைப்பாருஞ்சுவாமி

துரியோதனன்-துற்சாதனனுக்குச்சொல்-விருத்தம்

அருமைதுற்சாதனுகே ளாசாரியனதுக்கேற்ற
மருவியவெள்ளிபொன்னு மாணிக்கமுதலாயுள்ள
பெருநவரத்தினங்கள் பின்னும்வேணதுகளெல்லாம்
ஒருகுறைவந்திடாம லொருமிக்கக்கொடுத்திடாயே

(வ-ம்) தம்பிதுற்சாதனு சிற்பாசாரிகேட்டவெள்ளிபொன்மாணிக்கமுதலான நவரத்தினங்களும்மண்டபத்துக்கிசைந்தசாமான்களும்குறைவில்லாமல் கொடுப்பாய் தம்பிதுற்சாதனு

துற்சாதனன்-சொல்-வசனம்

அப்படியே கொடுக்கிறேன் என் அண்ணாவே

சிற்பாசாஸ்திரி-மண்டபஞ்செய்துவந்துசொல்-விருத்தம்

செகமையாயுலகுசெங்கோல் செலுத்தியமன்னர்மன்னு
முவ்விதயுலகுமெச்ச முழுநவரத்தினத்தால்
ஒவ்வியசித்திரமாக உன்னிதமிகவேநல்ல
திவ்வியமண்டபந்தான் செய்திதோமுடிந்ததையா

(வ-ம்) கேளும் இராசாதிராசபரமேஸ்வரா தேவரீருத்தரப்படிக்குமகா உன்னிதமாக சபாமண்டபஞ்செய்துமுடிந்ததுசுவாமி

துரியோதனன் சகுனிமுதலானவர்களுக்குச்சொல்விருத்தம்

தந்திரசகுனிமாமா தம்பிதுற்சாதனுசூழ
சுந்தரகர்ணவீஷ்ம துரோணரோ சொல்வேன்கேளீர்
விந்தையாய்ச்செய்துவந்த வியன்புறுமண்டபத்தை
புந்தியில்மகிட்சிகொள்ளப் போயுடன்பார்ப்போம்வாரீர்

(வ-ம்) கேளும்என்சகுனிமாமா தம்பிதுற்சாதனு கர்ணராசனே ஐயாவீஷ்மரே துரோணாச்சாரியரே நாமெல்லோரும் சிற்பசாஸ்திரிசெய்தமண்டபத்தைப்போய்ப்பார்ப்போம் வாரீர்சபையோர்களே

சபையோர்வசனம்

அப்படியேபோவோம் துரியோதனமகாராசனே

துரியோதனன்சொல்-ராகம்-தருமி-சங்கராபரணம்-அடதாளம்

பல்லவி

அதிசயத்தைப்பாரும்பாரும்-இந்த-அதிசயத்தைப்பாரும்பாரும்

சரணங்கள்.

சகுனிமாமாயிங்கே வாரும்-சிற்பா
சாஸ்திரிசெய்ததைப் பாரும்
பளிங்கினாற்றூணுக ளமைத்தான்-மேலே
பவழத்தாற்பொதிகை வைத்தான்
இளங்கிளிபச்சையாற் செய்தான்-அதி
னிடைக்கிடைதங்கத்தகட் பெய்தான்
வச்சிரக்கொடுங்கையைச் சேர்த்தான்-அதின்
வரம்பெலாம்பொன்னினை வார்த்தான்
உச்சிதபச்சையைச் ஞழைத்தான்-அதி
ஞோரமெல்லாமிரத்ன மிழைத்தான்
கொததுசித்திரவேலை யடித்தான்-நான்
குறித்தபடியே முடித்தான்
இத்தனையுமெத்த தொல்லைகா
மிதைப்போலெங்கும்பார்த் தில்லை (அதிசய)

துரியோதனன்-சகுனிக்குச்சொல்-விருத்தம்.

சகுனியென்மாமாசிற்பா சாஸ்திரிகெட்டிக்காரன்
புகலும்நாம்நினைத்தாப்போலப் பொருந்தமண்டபத்தைசெ
திசமுமெற்றம்பிவாடா சிற்பசாஸ்திரிக்குவேணு (ய்தான்
வெகுவநிதியெல்லாந்தந்து மேன்மையாயனுப்புவாமே

(வ-ம்) கேளுமென்சகுனிமாமா இந்தசிற்பசாஸ்திரி மெத்தக் கெட்டிக்காரன் நாம்நினைத்தபடியே வெகுசட்டதிட்டமாய் மண்டபத்தைச்செய்தான் அடாதம்பிதுற்சாதனா இந்தசிற்பசாரிக்கு வேணுமென்ற வெகுமதியெல்லாங்கொடுத்துச் சந்தோஷமாயனுப்பும்தம்பி துற்சாதனா.

துற்சாதனன்சொல்-வசனம்.

அபபடியேகொடுத்து அனுப்புகிறேன் அண்ணாவே

துரியோதனன்-சகுனிக்குச்சொல்-விருத்தம்

மண்டபமுடித்தவாறு மனதினில்நினைத்தவாறு
தண்டகப்பாண்டவாளை சூதினால்வெல்லும்வாறும்

கொண்டவன்பிதாவுக்கித்தை கூறியேயவர்கையோலை
அண்டியேபாண்டவர்க்கு அனுப்பிடவேண்டும்வாரீர்

(வ-ம்) கேளும்என்சகுனிமாமா நாம்மண்டபம் கட்டினதும்ப ஞ்சபாண்டவர்களைச் சூதினாலேவெல்லவேண்டுமென்று நினைத் திருக்கிறதும் இதுகளையென்பிதாவாகிய திருதராட்டிரமகாராச னுக்குச்சொல்லி அவர்கைபடஓலையனுப்பிபாண்டவர்களை அழை ப்பிக்கவேண்டுமே ஆனபடியினாலே என்பிதாவினிடத்துக்குப் போவோம்வாரீர்.

சபையோர்கள்சொல்-வசனம்.

அப்படியேபோவோம்வாருந்துரியோதனமகாராசனே

துரியோதிரன்-திருதராட்டிரனுக்குப்போற்றி-விருத்தம்.

என்னையின்றவனேபோற்றி யென்னையாண்டவனேபோற்றி
என்னையுமுளகையாள வெழில்முடிதரித்தாய்போற்றி
என்னையீடேற்றவேண்டி யாதொன்றுந்தடைசொல்லாமல்
என்னுள்ளேநினைத்துவந்த வெண்ணத்தைமுடிப்பாய்போற்றி

திருதராட்டிரன்-துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்.

ஐயனேவாடாயெந்தனழகுகண்மணியேவாடா
வையகமுழுதுங்காக்குமன்னர்மன்னவனேவாடா
துய்யதோர்குருகுலத்துத் துரைகள்ரத்தினமேவாடா
செய்யசெங்கோல்செலுத்துஞ் செல்வனேவாடா

(வ-ம்) மகனேதுரியோதனா என்சுவாமிஉன்னுடனேகூடயார வந்திருக்கிறார்களப்பா(அய்யாதுரோணாச்சாரிவந்திருக்கிறார்)தெ ண்டந்தெண்டமையா உட்காருங்கள் வீஷ்மாச்சாரிவந்திருக்கிறா ர்சரணம்சரணமையா உட்காருங்கள் கர்ன்னமகாராசன் வந்திருக் கிறார்வாடாஅப்பா எங்கள்சகுனியாமாவந்திருக்கிறார் அப்படியா அப்படியாஅத்தான் வாரும்வாரும் எங்களத்தானிருக்கும்போது எங்களுக்கென்னகுறைச்சல்ஒருகுறைச்சலுமில்லையே

துரியோதனன் திருதராட்டிரனுக்குச்சொல்-விருத்தம்.

வல்லபிதாவேசித்திர மண்டபமொன்றுண்டாக்கி
எல்லையிற்பாண்டவரை யெத்துசெய்தழைத்திக்காட்டி
தொல்லைதருஞாடியைவர் துரைத்தனம்பறித்துக்கொள்ள
ஒல்லையில்நாங்கள்நல்ல யோசனைசெய்தோமையா

(வ-ம்) கேளும்என்பிதாவே நவரத்தினகசிதமாகிய ஒருமண்ட பமுண்டாக்கி பாண்டவரையழைத்துக்காண்பித்து சூதாடும்படி யாய்ச்செய்து அவர்கள்வாழ்வையெல்லாம்பறித்துக்கொள்ளயோ சனைசெய்திருக்கிறோமையா,

திருதராட்டிரன்--விருத்தம்

ஒசந்துபோனார்களைவ ரொடுங்கினார்மக்களென்று, இராசந் திராப்பகலுமையோ வேக்கங்கொண்டடிவயிற் [illegible] சந்து கொண்டழுதுகொண் டேபிரட்டல்கொண் [illegible], அ சைந்துநித்திரையில்லாமலேயோநான்றவிக்கின் [illegible]

(வ-ம்) அடாஎன்கட்டிமகனே பாண்டவர் [illegible] உயர்ந்து போச்சுதென்று திகில்விழுந்து ஏக்கங்கொண்டு அடிவயிற்றைப் பிசைந்துக்கொண்டு அழுதகண்ணீருஞ்சிந்தையுமாயிருக்கிறேன் அன்னமுண்டா நித்திரையுண்டா நீங்களிந்தயோசனை செய்தது சரிசரிதரும் ஆ-ஆ.

இதுவுமவன்சொல்-விருத்தம்.

உடந்தையாம்நீங்கள்செய்த யோசனைபடிக்குத்தானே
நடந்ததேயானாலிப்போ நமக்கிணையொருவருண்டோ
அடர்ந்திடுபாண்டவரை யதோகெதியாக்கிநீயே
கடந்துலகாண்டாலெந்தன் கண்கள்வந்தாற்போலப்பா

(வ-ம்) மகனே துரியோதனா நீங்கள்செய்த யோசனைப்படிக்கு தெய்வகடாட்சத்தினாலே - அப்படியேவந்தால் உலகத்திலேநம க்குயெதிருண்டோபாண்டவர்களை யோட்டிவிட்டு ஒருத்தனுமே இந்தஉலகத்தையாள்வையேயானால் எனக்குப்போனகண்கள் தி ரும்பிவந்தார்போலல்லவா இந்தயோசனை ஆர்சொன்னார்களப்பா மகனே.

துரியோதனன் திருதார்ட்டிரனுக்குச்சொல்விருத்தம்

போர்செய்வோமென்றுகர்ணன் பொருந்துமென்றுரைத்தான்
சீர்செய்யுமற்றுள்ளோருஞ் செய்யலாமென்றுசொன்னார்
சூர்செய்யுஞ்சூதாலேவர் குடியைநான்கெடுப்பேனென்று
போர்செய்யுஞ்சகுனிமாமன் பிரமாணிக்கமாகச்சொன்னார்

(வ-ம்) கேளும் பிதாவேகர்ணமகாராஜன் சண்டையினால் வெ ல்லவேண்டுமென்று சொன்னார்தம்பிதுச்சாதனனும்மற்றபேரு மப்படியேசெய்யமென்று சொன்னார்கள் அதுகூடாதென்றுஎங் கள் சகுனிமாமன்சொன்னது சூதினால் பாண்டவரை ஊரைவி ட்டு ஒடும்படியாய் செய்கிறேனென்று பிரமாணிக்கமாய்ச் சொ ல்லியிருக்கிறாரையா.

திருதராட்டிரன்சகுனிக்குச்சொல் விருத்தம்

உச்சாயபாண்டவரை யோட்டிவிட்டவர்கள்தன்னை
வைச்சாலுமுந்தன்பார மாய்த்தாலுமுந்தன்பாரம்

# சூது துகிலுரிதல்.

பிச்சாணபிள்ளையேயென் பிள்ளையும்பிள்ளைதானும்
மச்சானுன்வருளிருந்தால் வையகமநனேயாள்வான்

(வ-ம்) ஐய்மச்சானே நானுள்ளபடியே சொல்லுகிறேன் அந்தப பாண்டவாளை ஓட்டுவிட்டு எங்களைபூமியில்வைத்தாலு மூத்தன் பாரந்தான்மாய்த்தாலு மூத்தன்பாரந்தான் என்பிள்ளைகள் கள்ளங்கவடு சூதுவாது தெரியாதபிள்ளைகள் என்பிள்ளைகளல்ல உன்பிள்ளைகள் எப்படியாகிலும் இவர்களை முன்னுக்குவரும்படியாய்ச் செய்யவேணும்அததானே.

சகுனிதிராட்டிரனுக்குச்சொல்-கவி

அத்தானுனையல்லால் மற்றாரினியமுண்டோ
இத்தாரணியெல்லாம் எத்தால்வெல்வேனே

திருதராட்டிரன்-துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்

பெருத்ததொட்டிலையுமாட்டி பிள்ளையுங்கிள்ளிகூட
இருத்தமாயிருப்பாரந்த திருடனைநம்பவேண்டாம்
வருத்தமேன்சகுனிமாமன் வார்த்தையைகடந்திடாமல்
கருத்துடனடந்துகொண்டாற் கடைதேறிப்போவாயப்பா

(வ-ம) கேளும் துரியோதனனுநம்மிடத்திலே பிள்ளையையுங் கிள்ளிதொட்டிலையும் ஆட்டுகிறவர்போலிங்குமங்குமா யிருப்பவர்களுண்டு அந்ததிருடனை நம்ப வேண்டாம்உன்சகுனிமாமன்சொன்னபடிநடந்துகொண்டாயேயானால் கடைத்தேறிப்போவாய் மகனேதுரியோதனா

துரியோதிரன்-திருதராட்டிரனுக்குச்சொல்-விருத்தம்

மந்திரிமுனிவர்சொன்ன வார்த்தையைமறந்திட்டாலும்
தந்திரமாமன்சொல்லை தடுப்பேனோதடுக்கமாட்டேன்
சுந்திரபாண்டவரை சூதிக்கினில் வரவேசொல்லி
வெந்தையேயுன்கையோலை யெழுதியேயனுப்புவீரே

வ-ம, கேளும்பிதாவே சாமனுக்கிரகசாமர்த்தியரான மகாத்துமாக்களுடைய வார்த்தையைத் தடுத்தாலும் என்சகுனிமாமன் சொல்லைதடுக்கமாட்டேன் இப்போதுபாண்டவாளைவரச்சொல்லி உன்கைஓலையாக எழுதியனுப்பவேண்டும் பிதாவே

திருதராட்டிரன்சொல்-விருத்தம்.

நல்லதப்படியாகட்டும் நாளைபதினைத்திற்குள்ளே
வல்லபாண்டவர்களிங்கே வந்திடச்செய்கிறேன்யான்
சொல்லுந்துற்சாதனனீ அதனையனுப்பிவைத்து
வில்லினிற்வலுமைபெற்ற விதுரனைவரச்செய்வாயே

(வ-ம்.) கேளுமப்பா துரியோதனு உன்சொற்பிரகாரம் நாளைய த்தினத்திற்குள்ளே பாண்டவர்களிங்கே வரும்படிசெய்கிறேன் அப்பா துற்சாசனு சீக்கிரமாய் ஒருதூதனையனுப்பிவில்லினில் வல்லவனுனஎன் தம்பி விதுரனையழைத்துவரச் சொல்லடா துற் சாதனு.

துற்சாதனன்சொல்-வசனம்

அப்படியே அழைப்பிக்கிறேனையா

துற்சாதனன்-சேவகனுக்குச்சொல்-கவி

பேசியவீரா-வீசியேயோடி
பூசியவிதுர-ராசனையழைப்பாய்

(வ-ம்,) ஆரடா தூதாங்கள் சிறியதகப்பனுன விதுரமகாராஜனை யழைத்துக்கொண்டுவாடா.

சேவகன்-வ-ம் அப்படியே அழைத்துவருகிறேன் சுவாமி

திரிதராட்டிரன்சொல்-விருத்தம்

மக்களே சகுனியெந்தன் மைத்துனு துரியாகாவு
மிக்கவேயிந்தசேதி வெளிப்படப்போகுதப்பா
அக்கரைப்பாண்டவாள்வந்த கப்படுந்தனிலுநீங்கள்
பொக்கெனக்கிணற்றில்கல்லை போட்டாப்போலிருங்களப்பா

(வ-ம.) கேளும்என்மகனே துரியோதனு அப்பாகர்ணு துற்சா தனுசகுனிமச்சானே இங்கேஆலோசனைபண்ணினது வெளிப்ப ட்டால்மோசம்மோசம் பாண்டவாள்நம்மிடகையி லகப்படுகிறத ன்னிலும்கிணற்றிலே கல்லைப்போட்டாப்போ லிருங்கள் போய் வாருங்கள்.

திரியோதனன்சொல்-வசனம்.

சரணஞ் சரணஞ் அப்படியேபோயிருக்கிறோமையா

சேவகன்விதுரனுக்குச்சொல்-விருத்தம்

துதிபெறுவிதானசூராபோற்றிவிற்றருமனுவின்வேதாபோற்றி
சதிபெறுமறநெறிதாதாபோற்றி மதிமிகுவிதுரமகிபாபோற்றி

வ-ம் சரணஞ் சரணம் விதுரமகாராசனே சுவாமி பராக்கு

விதுரன்-சேவகனுக்குச்சொல் கவி.

வீரியசூரா காரியமென்ன
சீருடனுன்னை யார்வரவிட்டார்.

வ-ம். ஆரடாதூதாஉன்னையாரனுப்பிவித்தார்சொல்லும்பிள்ளாய்

சேவகன்-விதுரனுக்குச்சொல்-விருத்தம்.

அத்தனே...ளரிந்தனரவிந்தபாதம்போற்றி
இத்திசைமுழுதும்போற்று மிலங்குமுன்றமையனை

வித்தகன்திருதராட்டிர வேந்தனுருனையிப்போது
மெத்தவுமாவலாகவிரவுடன்வரச்சொன்னூரே

(வ-ம்.) கேளுமையாவிதயமகாராசனேராஜாதிராஜராஜபரமே ஸ்பரராராஜமாத்தாண்ட உத்தண்டகோலாகலமான திருதராட்டிர மகாராசன்தங்களைஅழைத்துக்கொண்டுவரச்சொனனூர்சுவாமி

விதுரன்வருகிற-தரு-இ-ம்-புன்னாகவராளி-மிசுரதாளம்.

பல்லவி.

சத்தியவிதுராசன்வந்தான்—படைசுற்றம்பிடை சூழ
புவிமுற்றும்புகழ்படைத்த (சத்ய)

சரணங்கள்

ஒருவருமெதிரில்லா வில்லான்-இந்த
உலகமுழுகினுமொருபொய்யுஞ் சொல்லான்
விரகுள்ளபேர்கள்முன் னில்லான்-மேலும்
மெய்யானபொருளல்லால் வீண்பொருள்கெல்லான்சத்ய
தருமத்தைமாவாத சீலன்-ஒன்றும்
தவறில்லாக்கலைபெற்ற சர்ச்சனர்க்கனுகூலன்
அருமைப்புகழினில் விலாசம்தினம்
அனைவர்க்குந்தயாளன்ஆப்தபரி பாலன் (சத்ய)
வந்தவன்றன்னை யெள்ளாமல்
மாயவார்த்தையென்றுமறுவார்த்தை விள்ளாமல்-இது
சந்தேகமேதுங் கொள்ளாமல்
தமையனழைத்தவற்குத்தடைசொல்லிதள்ளாமல் சத்ய

விதுரன்-திருதராட்டிரனுக்குப்போற்றி-விருத்தம்.

வண்ணெலாம்புகழு மகிபனேபோற்றி
கண்ணெலாமுலவாக்கரண்டலனேபோற்றி
எண்ணெலாம்படைத்த விறைவனேபோற்றி
தண்ணெலாபோற்றுமென் தமையனேபோற்றி

திருதராட்டிரன் விதுரனுக்கு வாழ்த்து-கவி

கதிரார்முடிசேர்சதுராவாழி
மதுராமிர்தசொல் விதுராவாழி

விதுரன்சொல்-கவி.

மின்னியேகடுவேல் வேந்தர்கள்வேந்தே
மின்னிலமுதல்வர் மதிகுலவரசே
தன்னமையானசபைதனிலிப்போ
என்னையுமழைத்த தியம்பிடுவீரே

திருதராட்டிரன்-விதுரனுக்குச்சொல-விருத்தம்.

விதுரனேகேளாய்நீதான் விக்கினஞ்சொல்லவேண்டாம்
மதுரமாமோலையொன்று வாகுடனெழுதித்தாரேன்
இடமுடனேதுகொண்டே யிட்சணம்நீதான்சென்று
மகமுடன்பாண்டவாளை பரிவுடனழைத்துவாராய்

வ-ம், கேளும்தம்பிவிதுராநீயாதொருதடையுஞ் சொல்லாமல் பாண்டவாள்இவ்விடம் வரும்படியாய்ஒருவோலை எழுதித்தருகிறேனதைஎடுத்துக்கொண்டுபோய் பாண்டவர்களை அழைத்துவரவேணுந்தம்பி.

விதுரன்-வசனம்.

அப்படியே அழைத்துவருகிறேன் அண்ணாவே

திருதராட்டிரன்-இராயசக்கணக்கனுக்குச்சொல்-கவி

பொழுதுபோமுன்னே தொழுதராயசனே
பழுதிலாவோலை யெழுதடாநீதான்

இராயசன் சொல் (வசனம்) அப்படியேயெழுதுகிறேன் சுவாமி

இராயசக்காரன்-ஓலைஎழுதிவாசிக்கும்-விருத்தம்.

சிரஞ்சிவிபாண்டவர்க்கு செயங்கள்மென்மேலுமுண்டாம்
வரஞ்செறிதம்பிமார்கள் மண்டபமொன்றுசெய்தார்
நிரஞ்சனமாகவந்து நீங்களும்பார்க்கவேண்டும்
தரஞ்செறிவிதுரன்பின்னே தடையின்றேவருகுவீரே

திருதராட்டிரன்-வசனம்.

ஆடாஇராயசக்காராஇவ் வோலைசெந்திரிகைப்போட்டுஎங்கள்தம்பிவிதுரராசன்கையில் கொடும்பிள்ளாய்.

இராசக்காரன் (வ-ம்.) அப்படியேகொடுக்கிறேன்சுவாமி.

விதுரன் ஓலைகொண்டுபோகும்போது-விசனப்பட்டுச்சொல்லுகி

தரு-இராகம்-நீலாம்புரி-திரிபுடதாளம். (ரஜ

பல்லவி

ஐயையோஇப்படியுஞ்செய்வாரோ துரோகம்
அரிஅரியிதைகினைந்தாலாறுமோ சோபம்

அநுபல்லவி.

ஐயையோயிது சகுனியால்விளைந்த மூலமே
அகமிகந்தகவுரவற்குயுகமுடிவு காலமோ (அய்)

சரணங்கள்

கர்னன்துற்சாதனன் சகுனிதுரியோதனன் சூது
கருதியரவக்கொடி முடிந்தகவடவஞ்ச மீது
சின்னஞ்சிறுபாண்டவர்க்கு இன்னங்கருத்தெரி யாது
திருவுளமேதுணையல்லால் திக்கொருவரினி யேது(அய்)

கத்துத்திருதராட்டிரனுக்குநாவுதக விரண்டோ
கம்பளைவைத்துகழுத்தறுக்குமன்னாயமெதைக் கொண்டோ
குத்திரஞ்செய்சகுனியிதைக்குறித்தென்ன கண்டோ
கொலைசெய்துவாழ்ந்தவர்கள் குவலயத்தின்முன்னுண்டோ.

தருமபுத்திரனுக்கிரக சாரமும்பொல்லாதோ
சதிராகதிவினைமூன் தருமமமும் நில்லாதோ
அருமையென்னைப்பாவிகளோ யகாமுமவெல்லாதே
அரிசனென்றுகொன்றக்கால் தெய்வம்நின்றுகொல்லாதோ

பாண்டவாள்தேசத்திற்கு-விதுரன்போகும்போது
தூதர்கள்முன்னோடி-தருமராசனுக்குச்சொல்லுகிற-விருத்த

தரணியிலுதித்தோர்க்கெல்லாந் தாயகமாயிருந்து
கருணையால்குளிக்கும்பஞ்ச கர்த்தனேநின்றாள்போற்றி
திருவெலாம்படைத்தவுங்கள் சிற்றப்பன்விதுராசன்
வருகிறானையாவுங்கள் மலர்ப்பதம்போற்றிபோற்றி

(வ-ம்) சுவாமிபராக்கு உங்கள்சிற்றப்பனான விதுரமகாராசன் அஸ்தினபுரத்திலிருந்து தங்களிடத்திற்குஇதோவருகிறார்சுவாமி

பாண்டவர்கள்-விதுரனுக்குப்போற்றி-விருத்தம்

காவியங்கடலேபோற்றி கார்முகத்தலைவாபோற்றி
கோவியல்முழுதுந்தேர்ந்த குற்றமற்றவனேபோற்றி
மேவியெங்களைரட்சிக்கும் வித்தகாபோற்றிதர்ம
தேவனதயானவெங்கள் சிற்றப்பாபோற்றிபோற்றி.

விதுரன்-பாண்டவர்க்கு-வாழ்த்து-விருத்தம்

மெய்வருநீதிதேர்ந்தமிகு விதரனேவாழி
கைவருஞ்சிலையில்வெற்றி கண்டவீரர்களே வாழி
பொய்வருமொழிசொல்லாத புருஷவுத்தமரேவாழி
ஐவருமவாழியெந்த னருமைமைந்தர்களேவாழி

துரோபதை-விதுரனுக்குப்போற்றி-கவி

நேமாகருணைநிதியேபோற்றிமாமா அடியார்வாழ்வேபோற்றி
பூமாதகலர்ப்புயனேபோற்றி மாமாவுன்றன்மலர்த்தாள்போற்றி

விதுரன்-துரோபதைக்குவாழ்த்து-விருத்தம்

சற்பினுக்கரசேயெந்தன் கண்ணினின்மணியேவாழி
மற்றொருருமைவர்சிந்தை மகிழ்குலக்கொழுந்தேவாழி
பொற்புறுமாதர்க்கெல்லாம் பொருந்துபூஷணமேவாழி
சொற்புகழுணர்ந்தநல்ல துரோபதைதாயே வாழி

பாண்டவர்கள்—விதுரனுக்குச்சொல்-விருத்தம்.

நீதியுநெறியுநல்ல நிலைமையும்நிகழுமன்பும்
ஓதுமிதெல்லாமுள்ள வுத்தமநின்றாள்போற்றி
தீதிலாதவனேயிந்த சிறியோரைப்பொருட்டாயெண்ணி
ஏதுகாரணமாவந்தீ ரெங்கதமேயுரைசெய்வீரோ

(வ-ம்) கேளும் எங்கள்சிறியதகப்பனான விதுரமகாராசனே எங்கள்பேரில் கடாட்சம்வைத்து வந்தகாரியமென்ன தேவரீர் சொல்லவேண்டுமையா

விதுரன்-பாண்டவர்களுக்குச்சொல்-விருத்தம்

பாலரேசொல்லக்கேளீர் பாண்டுராசனுக்குமூத்த
சீலனுன்பெரியதந்தை திருதராட்டிரமகிபன்
மேலுமுங்களையழைத்து விசையுடன்வரவேசொல்ல
வோலையுமெழுதித்தந்தா ருள்ளடிவேறேகண்டாய்

(வ-ம்) கேளும்பாண்டவர்களே உங்கள்தகப்பனுக்கு நேர்மூத்ததிருதராட்டிரமகாராசன் உங்களை அதிசீக்கிரமாயழைத்து வரச்சொல்லி ஓலையுமெழுதிக்கொடுத்தார் சிறிது உள்ளுக்குள் வினையும் நடந்திருக்கிறதுபாண்டவர்களே.

தருமர்-விதுரனுக்குச்சொல்-விருத்தம்

தகப்பனாரழைத்தனுப்ப தடையதுசொன்னோமானால்
நகைப்பரோருலகினுள்ளோர் நல்லதப்படியேபோவோம்
வகைசுபசோபனங்கள் மற்றதேதேனுமுண்டா
துகைப்படவரவேசொன்ன சூட்சியையுரைசெய்வீரே

(வ-ம்) கேளும்என்சிற்றப்பனான விதுரமகாராசனே எங்கள்பெரியதகப்பனாரைதிருதராட்டிரமகாராசன்வரச்சொன்னார்அதற்குதடைசொன்னால்உலகம்பழிக்காதா அப்படியேபோவோம்ஆகிலும் இப்போது எங்களையழைப்பித்தகாரியந்தெரியச்சொல்லவேண்டுமையா

விதுரன்-பாண்டவர்களுக்குச்சொல்-விருத்தம்

நீசெய்யும்யாகந்தனக்குவந்திருந்து
நின்புகழ்பெருமையுங்கண்டு
நெடுமுடிதுரியோதனன்கெடுசகுனி
நெஞ்சினிற்பொறாமையெண்ணி
மாசிலாப்பெருமண்டபஞ்செய்து
மகிழ்ந்ததிற்குடிபுகுந்தினத்தில்
மைந்தரோயும்மையதில்வரவழைத்து
மாயசூதாடியேயுங்கள்
தேசமுமரசுஞ்செல்வமும்பறிக்க
திருட்டுஆலோசனைசெய்து
சிறந்தவுன்பெரிய தகப்பனுக்கிதுகள்
செப்பினாவருஞ்சம்மதியாம்
ஆசையாயென்னைவரவழைத்துநீயேபோ
யவரையழைத்துவாவென்றே
யடவுடனெழுதிக்கொடுத்தவுன்பெரிய
யப்பன்கையோலையிதப்பா

தருமர்-அர்ச்சுனனுக்குச்சொல்-விருத்தம்,

தொந்தரையெவர்செய்தாலுஞ் சூதுகளெவர்செய்தாலுந்
தந்திரமெவர்செய்தாலுந் தருமமேசெயமென்றெண்ணி

# சூது துகிலுரிதல்.

அந்தமேமிகுந்ததம்பியர்ச்சுனுவாடாமூத்த
எந்தையாரனுப்புமோலை யெடுத்திதைப்படித்திடாயே

(வ-ம்) கேளடாதம்பி அர்ச்சுனு நமக்குப்பகையாளியா யிருக்கிறபேர்கள் எத்தனைதொந்தரவுகள்செய்தாலுஞ்சூதுகள்செய்தாலுங்கபடவஞ்சனைகள்செய்தாலுந்தருமமேசெயம்ஆகையால் அர்ச்சுனுநம்முடையபெரியதகப்பனுர் எழுதிவரவிட்ட ஓலையெடுத்துவாசியடாதம்பி

அர்ச்சுனன்-ஓலையைவாசிக்கும்-விருத்தம்

சிரஞ்சிவிபாண்டவர்க்குசெயங்கள்மென்மேலுமுண்டா
வரஞ்செறிதம்பிமார்கள் மண்டபமொன்றுசெய்தார்
நிரஞ்சனமாகவந்து நீங்களும்பார்க்கவேண்டும்
தரஞ்செறிவிதுரன்பின்னே தடையின்றிவருகுவீரே

தருமர்சொல்-விருத்தம்

தன்மையும்புகழநல்ல ஞானமும்வளவும்வாழ்வும்
வன்மையுமழகுநீதிமார்க்கமுங்குலமுஞ்சீரும்
மேன்மையுவிரலுமோங்கும் வெற்றியுமெய்யஞ்சார்ந்த
தொன்மையுமுடையோரையோ சூதாடநினைப்பதுண்டோ

(வ-ம்) நலமுங்கீர்த்தியும் தயாளமும்ஞானமும் செல்வமும்வலுமையும் அழகும் நீதியும் குலமும்சிறப்பும்பராக்கிரமும் வெற்றியும்சத்தியமும் உள்ளவர்கள் சொக்கட்டான்முதலான சூதுகளாடநினைப்பார்களோஇதென்னகாரணம்அரிஅரி வாசுதேவா.

பீமன்சொல்-விருத்தம்

வகையுள்ளோர்தர்மதுஷ்டர் வஞ்சகர்மானமில்லா
சுசிகாமில்லாயீனர் சூதாடநினைப்பதல்லால்
இசையுள்ளோர்சூதமாட யிசைவரோயிதனிலுந்தான்
கசிதருகள்ளுங்கொண்டு கள்ளையுங்குடிக்கலாமே

(வ-ம்) பழிக்கஞ்சாதவரும் துஷ்டரும வஞ்சனைசெய்வோரும்மானமில்லாதவரும் சுதயமில்லாதவரும் சொக்கட்டான் முதலானசூதுகளாடநினைப்பார்களேயல்லாமல் நல்லவர்கள் ஒருக்காலும் நினைப்பார்களா இதைவிட சுள்ளைசுட்டுக்கொண்டு கள்ளைக்குடிக்கிறதுமெத்தநல்லது.

தருமர்சொல்-விருத்தம்

பஞ்சபாதத்திலிந்த பகடையுமொன்றேமென்று
மிஞ்சியவேதசாஸ்திர விற்பனர்விலக்கிவிட்டார்
சஞ்சலசூதுவித்தை தனக்கெதிரிருந்தேயாட
நெஞ்சினிலென்னைத்தானே நினைப்பதுசகுனிமாமன்

(வ-ம்) அரிஅரிநாராயணு சொக்கட்டான் முதலானசூதுகள் பஞ்சபாதகத்திலே இதுவுமொன்றென்று பெரியவர்கள்தள்ளிவிட்ட இக்கசூதுவித்தையை ஆடவேணுமென்று நினைத்தால் நக்

கெதிருக இருந்துதன்னுடன் ஆடுகிறதற்கு என்னைத்தானுநினை
க்கவேண்டும் நம்முடையசகுனிமாமன்

அர்ச்சுனன்-விதுறனுக்குச்சொல்-விருத்தம்,

பொல்லாததுஷ்டரிந்த புத்தியைமனத்திற்கொண்டு
மல்லாடிக்கடுஞ்சூதாட வரச்சொல்லிஎழுதினனும்
வில்லாலுமறிவினாலு மிகுந்தசிறப்பாயிந்த
கல்லாதசிறியோர்க்குந்தன் கருத்தென்னவுரைசெய்வீரோ

(வ-ம்) நல்லது அந்ததுஷ்டர்தான் இப்படிப்பட்டதாற்புத்தி
யை நினைத்துவரச்சொன்னாலும் உம்முடைய திருவுளத்துக்குச்
சரியாயிருக்கின்றதாசொல்லுமையா எங்கள்தகப்பனான விது
றமகாராசனே.



விதுரன்



தர்மராசன்

விதுரன்-தர்மருக்குச்சொல்-விருத்தம்

வாதாடுந்துரியனுக்குச் சகுனிக்குக்கர்ன்னனுக்குஞ்
சூதாடவாகாதென்று சொன்னதுகோடியுண்டு
காதாறச்சொன்னதெல்லாங்கருத்திலில்நினைத்திடாமல்
ஏதோவுன்பிதாவைக்கண்டு வென்னையுமனுப்பினரோ

(வ-ம்) கேளுங்கள் மக்களே துரியோதனனுக்கும்சகுனிக்கும் கர்னனுக்கும் சூதாடுகிறதொழில் நீங்கள் நினைக்கவேண்டாமென்று அனந்தம் நீதிகளைச்சொன்னாலும் கேளாமல் தங்களுக்குள்ளே உன்பெரியதகப்பனைதிருதராட்டிர மகாராசனுக்குச்சொல்லி அவனைகொண்டு எனக்குத்தெரியப்படுத்தி உங்களை அழைத்துக்கொண்டுவருமபடியாய்ச்சொன்னார்கள் அப்படி இருக்குது அவிடத்தில் ஆலோசனைமக்களே.

பீமன்-தருமருக்குச்சொல்-விருத்தம்

வாவியல்வசியைநட்டு மடிந்திடச்செய்தான்முன்பு
நீவியமாளிகையில் நெருப்பிட்டுக்கொல்லப்பார்த்தான்
மேவியசூதாலிப்போ வென்றிடநினைத்தானந்தப்
பாவிதன்முகத்தைநாமும பார்த்திடலாமோஅண்ணே

(வ-ம்) ஆதியிலே சலத்தில் வசியைநட்டு கொல்லப்பார்த்தான்மேலும் அரக்கு மாளிகையிநம்மைவைத்துநெருப்பிட்டுக்கொல்லப்பார்த்தான் அதுவும் போதாமல்இப்போதுசூதாடி நம்மைப் பனுதியாக் நினைத்திருக்கிறான் அப்படிப்பட்ட மகாபாவியான துரியோதனன் அழைத்தால்நாம்போகலாமா அண்ணாவே

அர்ச்சுனன் தருமருக்குச்சொல் விருத்தம்

வழிமறைநூல்கற்றோருமறுவுதண்ணீறுமூன்று
பிழைபொறுத்திடுவதல்லாற் பின்னையும்பொறுத்ததுண்டோ
முழுதிலும்மோசம்போற முறைமைகொண்டழைத்தானந்த
வொழுவிலாப்பகைவர்தங்க ளுறவினிவேண்டாமண்ணே.

(வ-ம்) கேளும்அண்ணாவே தருமசாஸ்திரமறிந்தபேரும் தண்ணீர்மூன்று பிழைபொறுப்பதல்லால் மேலும்பொறுந்திடாதுநாம்நாள்தோறும் அவர்கள்செய்யப்பட்ட மோசத்துக்கெல்லாம் உட்படுகிறபடியினாலேஇப்போதும் அழைக்கிறார்கள் அவர்களுறவும்நமக்குவேண்டாம்நாமுமங்கேபோகலாகாது அண்ணாவே

நகுலன்-தர்மருக்குச்சொல்-விருத்தம்

விதித்தொருபாவஞ்செய்தால் மேலதையனுபவிப்பார்
பதைத்திடாதிருந்தேயின்னம் பார்த்திடுவோமென்றாலும்
உதைத்தகார்புழுகுமுன்னே வுளப்புமேபொருக்கொணாது
மதித்தவர்நட்புவேண்டாம் வருந்துயர்நமக்குவேண்டாம்

(வ-ம்) அண்ணாவே அவரவர்கள்செய்தபொல்லாங்கும்பின்னாலனுபவிப்பார்களென்றாலும் உதைத்தகால்புழுக்கிரத்துக்குநாட்செல்லும் அதுதனிலும்உளப்பு பொருத்துமுடியாது அதுபோனவர்களிடத்துக்குப்போனாலல்லதாகிலும், ஒருபொல்லாங்குவிளையும்ஆகையினால்நாமும்போகவேண்டியதில்லைஒருபொல்லாங்குங் வரவேண்டியதில்லை அண்ணாவே.

சகாதேவன்-தருமருக்குச்சொல்-விருத்தம்

பூனைவாயெலியும்வேங்கைப் புலியின்வாய்மானுங்காட்டில்
ஆனைவாய்த்தழையும்பொல்லாவரவின்தேரைபோல

மானமும்வலுவுங்கெட்டு வையகம்யிருந்துபொல்லா
ஈனமும்வருநாமங்கே யேசவொண்ணாதுசொன்னேன்

(வ-ம்) பூனைவாயில் யெலியைப்போலப்பதைத்தாலும்புலியின்
வாய்மான்போலலைச்சலும் ஆனைவாய்த் தழைபோலகுழைகளும
பாம்பின்வாய்தேரைப்போல மடித்தாலும்அனுபவிக்க வேண்டிய
தாய்வரும்ஆகையால் நாமங்கேபோகக்கூடாது அண்ணே

தர்மர்-தம்பிமார்களுக்குச்சொல்-விருத்தம்

எரிபடவண்டகோள மிடிந்தாலுமாழிபொங்கி
பிரளயம்வந்திட்டாலும் பிதாவாக்கியந்தள்ளலாமோ
வருவதுவருமெப்போதும்வருவதுவாராதென்றுந மே
திருக்கொண்டுஞ்சொல்லவேண்டாஞ்சென்றுநாம்வருகுவோ

(வ-ம்) இந்தபிரமாண்டகடாக மிடிந்துவிழுந்தாலுஞ் சத்தச
முத்திரம்பொங்கிசலப்பிரளயமானாலும் பிதாவாக்கியத்தைத்தள்
ளலாமோநாம்போகாம லிருந்தாலும் வருகிறதுவரும் வாராததுவ
ராதுநாம்எப்படியும்போய்வருவோம் தம்பிமார்கள்

தருமர்-சேர்வைக்காரனுக்குச்சொல்-விருத்தம்

பொரிபுகசேர்வைக்காரா புகழஸ்தினபுரிக்கு
பரிவுள்ளவிதுரன்பின்னே பயணமாய்ப்போகவேணும்
தரணியிலரசரோடுஞ் சதுரங்கசேனையெல்லாம்
விரிதுபேரிகைமுழங்கி விரகுடன்வரச்செய்வாயே

வ-ம் ஆடாபொற்புலிசேவைக்காராவிதுரமகாராஜாபின் அஸ்
தினபுரிக்கு போகவேணும்பிரயாணபேரிகைமுழக்கிசகலராசாக்
களும்ரதகஜதுரகபதாதிகளும் வரும்படியாய்ச்செய்யடா சேர்
வைக்காரா

(சேர்வைக்காரன் வசனம் அப்படியேசெய்கிறேன் சுவாமி.)

சேர்வைக்காரன்-தருமருக்குச்சொல்- விருத்தம்

துதிபெறுகுருகுலத்து துரைநரர்த்தினமேயுந்தன்
பதும்[illegible]பாதமபோற்றி பராக்குயெச்சரிக்கைசுவாமி
மதிபெறுநமதுதேச மன்னருமற்றுமுள்ள
சதுரங்கசேனைவந்து தனையொடுசேர்ந்தாரையா

வ-ம் கேளும்ராஜாதிராஜபரமேஸ்பராபார்க்குசகலதேசத்தாசர்
களும்வந்தார்கள் சதுரங்கசேனைகளுந்தயாராயிருக்கிறார்கள்சுவா

தருமர் அஸ்தினபுரிக்கு வருகிற-தரு-இ-ம-கல்லியாணி.

திரிபுடை தாளம பல்லவி

இராசராசன்-மதிபதி,தரணியில்-மதிபதி-தருமராசன்வந்தானே
மாசில்லாரல்லா மனுநெறிமுறையறிந்தவ சேகரன்
தேசுலாவியகுணராசயிலகு சுதாகரன்
விசுபுகழ்பாண்டுபுத்திரன்மித்திர னெவர்களும
பேசரியமனைமத்திரன் கடசித்திரன் பரிமள

வாசமிருக்காரன்-உருவில்மாரன்-அதிகுலசூரபிரபலநீரன்
வரும்பிரசண்டதிண்டிறல்மநு  நெறி
தருமகண்டமண்டலாதிபதி  மாகா(ராச

சரணங்கள்

மருமலரின்வளர் திருமருவிநெடுமாலை  நமஸ்கரித்து-நல்ல
வருகுசூரொளப்பிரபைதகதகென்னவொளிமா முடியைத்தரித்து
பொருதிலுருபுயநெனிவிணையுறுபுசகீர்த்தியைப்பொலுத்து-நல்
புதியநவமணிவடமிரமதனில்புனிதமொடு  திருத்தி
மருவலர்கலெதிர்திசைகொடுகிடுகிடென்று  தாழ
மருமகபதிகளருமையினிருமருங்கு  சூழ
அரிவையர்களெல்லாம்வெண்சாமரை  போட
வைரிகள்பலபேர்பண்பாபிசை  பாட (க்க
அற்புதம்துதிக்க-தம்பியர் கருக்கவம்பனர்துதிக்கசம்பிரமம்துதி
அந்தரமதி துந்துமிகவுரிகள்-கொம்புகள் கிறைபம்பைகள் சவுரி
வண்டிறல்செயங்கண்டுகள்  கிடுகுகள் (க்க
மங்களமிகுசங்குகள்  சவுரிகள்
ஆரபாரபேரிகை  வீர்த்தங்கிய
தாரைவீரைபூரிகை  தவுண்ட
மல்லரிபலசில்லரி  கருதிகள்
அலைகடலிடையெழுநெடு  மொலியென
அடரமழைமுகிலதர்கரு  கலியென
அகமுழங்கவிருதுகள்  பலர்சொல்
மிகமகிழ்ந்துசுபகர  குருகுல(ராச)

பாண்டவர்கள்-திருதராட்டிரனுக்குச்சொல்-விருத்தம்

சந்திரகுலத்தில்வந்த தயாபராபோற்றிபோற்றி
மைந்தாமேல்கனிவுகூர்ந்த மன்னவாபோற்றிபோற்றி
விந்தைசேர்வேந்தர்களெல்லா மேருவேபோற்றிபோற்றி
தந்தையேயுந்தன்செம்பொற் றுளினைபோற்றிபோற்றி

திருதராட்டிரன்-பாண்டவர்க்கு-வாழ்த்து-கவி

பூவிலைவரும் பூரணையுசாய்
கோவியற்கைவிற் குறைவிலாமையாய்
ஆவியானவென் னருமைமைந்தரே
மேவியநீங்கள்மென் மேலும்வாழ்கவே

துரோபதை-திருதராட்டிரனுக்குப்போற்றி-கவி.

பூமாதென்னப் பொறுமையடைத்த
சேமமாயித்த நிலம்புகழ்வெற்றி
தாமமாயர்க்குந் தலைவாயுந்தன்
மாமாயுந்தன் மலர்த்தாள்போற்றி

திருதராட்டிரன் துரோபதைக்குவாழ்த்துகவி

அருமையுமறிவுமன்பும் ஒருமையுமிகவுமுள்ள
தருமகள்கிகரதான மருமகளேவாழி

திருதராட்டிரன்-பாண்டவர்களுக்குச்சொல்-விருத்தம்

வழுவிலாமாசுநல்ல வலுமையும்வாழ்வும்சீரும்
அழகுடன்பெற்றிருக்க ளலங்காரசம்பிரமத்தை
தழுவுமென்தம்பியுங்கள் தந்தையாம்பாண்டுராசன்
பழுதறக்காணும்வாறும் பாக்கியஞ்செய்கிலேனே

(வ-ம்) கேளுங்கள்மக்களே உங்கள்தீரத்தினத்தையும்பராக்கிரமத்தையும் செல்வத்தையும் அழகையும் உங்கள்பிதாவானஎன் தம்பி பாண்டுராசன் கண்களிக்கபார்த்து சந்தோஷப்படுகிறதற்கில்லாமற் போச்சுதேஅதுதான் எனக்கொருகுறை பின்னொரு குறையுமில்லை மக்களே.

தருமர்-திருதராட்டிரனுக்குச்சொல்-விருத்தம்

தூயகீர்க்குமிழிவானில் தோன்றியமின்னல்போலும்
மாயுமிவருடல்மென்றால் வருந்துவதினியேதையா
தாயமாந்தந்தையாக தருமமாநீயிருக்க
சேயர்மெங்களுக்குச் சிந்தையிற்குறைவேண்டோ

(வ-ம்) கேளும் எங்கள்பெரியதகப்பனூரான திருதராட்டிரமகாராசனே எங்கள்வைபோகத்தை தகப்பனுகியபாண்டுமகாராசன்பார்க்கிறதற்கில்லாமற் போச்சுதென்றுசொல்ல வேண்டியதிஞல் சகலத்துக்கும்நீரோ தாயுந்தந்தையாயிருக்க எங்களுக்குவேறொருதாழ்வுண்டோபிதாவே.

திருதராட்டிரன்-பாண்டவர்க்குச்சொல்-விருத்தம்

மனமகிழ்தம்பிமார்கள் மண்டபமொன்றுசெய்தார்
கனமிகநீங்கள்வந்து காணவேவேண்டுமென்று
நினைவு[illegible]ண்டழைத்தேனப்பா நீங்களும்வந்துவிட்டீர்
இனிதுடனவரும்நீரும் மிஷ்டமாயிருங்களப்பா

வ-ம். கேளுங்கள்என்னுசைமக்களான பாண்டவர்களேஉங்களைகாண்கிறதற்கு எனக்குக்கண்ணில்லாமற்போனுலும்உங்கள் வசனத்தையாகிலும்இந்தகாதிலே கேட்கிறதற்குஎனக்குஆசையாயிருக்கிறது அதுவெல்லாமல்உங்கள்தம்பிமார்கள் ஒருமண்டபஞ்செய்தார்கள் அதைநீங்கள் பார்க்கவேணுமென்கிற ஆசையாயழைப்பித்தேன் கண்டுகலந்துபேசியருமையாயிருங்களப்பாமைந்தர்களே.

திருதராட்டிரன்-பாண்டவர்களுக்குச்சொல்-கவி

வளருசெழுமுங்கள்வரவுகண்டுநான் - உளங்களி கூர்ந்தனெ
னொருமையைமைந்தரோ-விளங்கியதாழையும்வீஷ்மர் தம்மையுங்-க
ளங்கமில்லாமற்போய் கண்டுகொள்வீரோ

# சூது துகிலுரிதல்.

வ-ம் எனைப்பிள்ளைகளைப்பார்க்கிலும்இஷ்டமானபிள்ளைகள் இங் கேவந்துவிட்டீர்களே அதேவேபோதும் வீட்டுக்குப்போவுங்கள் தாயார்காந்தாரியைமுன்னேகண்டுகொள்ளுங்கள் பீஷ்மாதுரோண ர்முதலானபேர்களையுங்கண்டுகொள்ளுங்கள் என்றுசொல்லக்கேள

பாண்டவர்கள்-வ-ம்.

அப்படியேகண்டுகொள்ளுகிறோம்பிதாவே.

பாண்டவர்கள்-காந்தாரிக்குப்போற்றி-கவி

வயமிகுவாசர்வாழ்கவேபோற்றி- ஜெயமிகுகமலத்திருவேபோற் வியமிகுமுலைவிளக்கேபோற்றி- தயைமிகுபெரியதாயேபோற்

காந்தாரி-பாண்டவர்களுக்குச்சொல்-விருத்தம்

பன்றியானதுதான்சமமா பலகுட்டிப்போட்டாப்போலே
கன்றிடநூறுபிள்ளை கணக்குடன்பெற்றேனப்பா

வ-ம, பன்றியானதுபலகுட்டிப்போட்டாப்போலே கணக்கு குநூறுபிள்ளைபெற்றேன்ஒன்றுக்காகிலும்புத்தியுண்டா திறமை யுண்டாசௌரியமுண்டா தாஷிகமுண்டாஉங்களைப்போலகீர்த் திபெற்றதுண்டா ஆருடப்பாகெட்டேனேஏதாகிலுமுண்டாஅது என்வயிறுசெய்தகொடுமைஎப்படியாகிலும்நன்றாகயிருங்களப்ப

துரோபதை காந்தாரிக்குச்சொல் விருத்தம்

இராகம்-ஆனந்தபைரவி

திறமுடன்திறமுமிக்க செல்வமுஞ்சிறப்புஞ்சீரும்
பொருவிலாவளமுநல்ல புத்திரபாக்கியமும்பெற்று
ஒருவருமிணையிலாத வுத்தமியென்றுசொல்லும்
மருவிடுபெரியமாமி மலர்ப்பதம்போற்றிபோற்றி

காந்தாரி-துரோபதைக்குச்சொல்-விருத்தம்

எருமைகள்கூடியபோ லெனக்குவாய்த்திடு
மருமகப்பெண்களென் மக்கட்கோர்வையோ
ஒருமையாயுன்னைப்போ லொருபெண்காண்கிலன்
எரியுதேயென்னசெய்வே னெழுந்திராய்பெண்ணே

வ-ம் எருமைக்கூட்டம்போலே இத்தனைபேர்மருமக்களிருந்து மென்னத்துக்கர்ச்சுது ஒருநாளிக்காவது ஒருசித்துவித்தைகள் தெரியுமா உன்னைப்போலேமருமகள் ஒருத்தி இல்லாமற்போனா ளே யென்றுஎன்வயிறெறியுது என்னசெய்வேன் எழுந்திரம்மா எழுந்திரு

தருமர்-துரோபதைக்குச்சொல்- விருத்தம்

மங்கைதுரோபதையேயுந்தன் மாமியாரிடத்திற்றானே
சங்கையில்லாமல்நீதான் சதிருடனிருந்தையானால்
துங்கமாம்பீஷ்மர்கிருபர் துரோணரைமற்றுள்ளோரை
பொங்கமாய்பணிந்துபோற்றி பொருந்தநீசவருகுவோமே

வ-மகேளும் பெண்ணே துரோபதை நாங்கள் பீஷ்மர்துரோ ணகிர்பாச்சாரியர்களைக்கண்டுவருகிறோம்அதுவரையிலும் உங்க ள்மாமியாரிடத்திலிருப்பாய்பெண்ணே

துரோபதைசொல்-வ-ம்-அப்படியேயிருக்கிறேன்சுவாமி

துரியோதனன்-சேர்வைக்காரனுக்குச்சொல்-விருத்தம்

திண்டிறசேர்வைக்காரா சீக்கிரமாகவோடி
மண்டபந்தன்னைப்பார்க்க வரச்சொன்னேனென்றுசொல்லி
எண்டிசைபுகழுகின்ற எழிற்பஞ்சபாண்டவாளை
கொண்டையிற்கொலுவிற்கிப்போகொப்பெனவழைத்துவா

வ-ம், ஆரடாசேர்வைக்காரா-இந்திரபிரஸ்தத்திலேயிருந்துவந்தபாண்டவர்கள் ஐந்துபேரையும் இந்தமண்டபத்தைப்பார்க்கானழைத்தேனென்று அதிசீக்கிரமாயழைத்துவாடா

சேர்வைக்காரன்சொல்-வ-ம்

அப்படியேயழைத்துவருகிறேன்சுவாமி

சேர்வைக்காரன்-தருமருக்குச்சொல்-விருத்தம்

மன்னர்மன்னனேபோற்றி மநுமுறைதெரிந்தாய்போற்றி
தன்னிகரில்லாய்போற்றி தருமபூபாலாபோற்றி
பொன்னின்மண்டபத்தைப் பார்க்கப்பொருந்தியுங்களையிப்
நன்னயராஜராஜனலமுடன்வரச்சொன்னார் (போது

வ-ம், இராஜாதிராஜசபரமேஸ்பரா ராசமார்த்தாண்டசத்தியராசேந்திரா சத்திபபிரபுடீகா சத்தியபரிபாலகா தர்மபுத்திரமகாராசனே சுவாமிபராக்கு துரியோதனமகாராசன் உங்களையழைத்துவரச்சொன்னார் சுவாமி.

தருமர்-வ-ம்-அப்படியேவருகிறோம்பிள்ளாய்

தருமர்-துரியோதனனைத்தழுவிக்கொள்ளும்-விருத்தம்

திருவருளுலகமூன்றுந் திறமுடன்றுதித்துப்போற்றி
தருமபுத்திரனேயெந்தன் தமையனேசரணம்வாரும்
பெருமையும்புகழும்வாழ்வும் பெறுந்துரியோதனனும்
அருமைசேர்தம்பிமார்க ளனைவருநீயும்வாழி

துரியோதனன்-தருமருக்குச்சொல்-விருத்தம்

வழுவுறவுங்களுக்கு மயனென்றுதெய்வதச்சன்
தழுவுறசெய்ததந்த சபையிலுமதிகமாக
செழுநவரத்தினத்தாற் சிறக்கநான்செய்துவைத்த
அழகியமண்டபத்தை யலங்காரம்பாராயண்ணே

வ-ம். கேளும் அண்ணா தருமபுத்திரரே முன்னாலே உங்களுக்கு மயனென்னுந்தச்சன் செய்துகொடுத்தசபையைப்பார்க்கிலும் அதிகவுன்னிதமாகச்செய்து வைத்தேன் இந்தமண்டபத்தினுடையஅலங்காரத்தைப்பாராய் அண்ணே

தருமர்-துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்

சுந்தரமிகுந்ததம்பி துரியோதனனேகேளாய்
[illegible]மண்டபங்கலனேகமாநான்பார்த்ததுண்டு
விந்தையிதென்னசொல்வேன் விளங்குமூவுலகந்தன்னில்
இந்தமண்டபத்தைப்போலே யெங்குநான்கண்டிலேனே

வ-ம். தம்பி துரியோதனா நான் அநேகமண்டபங்கள்பார்த்திருக்கிறேன் ஆனாலிந்த சொர்க்கமத்தியபாதாளதிரிலோகத்திலேயும் இப்படிப்பட்ட உன்னிதமான மண்டபத்தைநான் எங்குங்கண்டதில்லைவெகுலட்சணமாயிருக்கின்றது

சகுனி-துரியோதனனுக்குச்சொல் விருத்தம்

நூதனமாகச்செய்து நுட்பமாயலங்கரித்து
சோதிசேர்மண்டபத்தை துரைமக்கள்வந்துகூடி
போதவேமகிழ்ச்சியாகப் பொழுதுபோம்படியாயிங்கே
ஏதொருகாலட்சேப மில்லாமலிருக்கலாமோ

(வ-ம்) கேளும்என்னுடையமருமகனான துரியோதனாஇந்தஅலங்காரமண்டபத்திலே எங்களைப்போலொத்த துரைமக்களெல்லாம் வந்துசும்மாயிருக்கின்றதுநன்றாயிருக்கவில்லை பொழுதுபோகும்படியாய்யேதாகிலுமொருகாலட் சேபம்பண்ணவேணுங்காணுந்துரியோதனமகாராசனே.

துரியோதனன்-தருமருக்குச்சொல்-விருத்தம்

ஆமிதுமெய்தான்மெய்தா வண்ணாகேளொருவிண்ணப்பம்
நாமெல்லாம்போசனத்துக் கெழுந்துபோந்தனிலுமிங்கே
மாமனுநீயுமாக மகிழ்ச்சியாயெழுந்திருந்து
தோமரவேயோராட்டஞ் செக்கட்டானாடுவீரோ

(வ-ம்) ஆஆ மெய்தான் மெய்தான் மாமாசபாசுநன்றாய்ச்சொன்னீர்அண்ணா தர்மபுத்திரமகாராசனே நாமெல்லோரும்போசனத்துக்குப்போகுமுன்பாக மாமாநீயுமொரு ஆட்டம்சொக்கட்டான் போடுங்களண்ணே

தருமர்-துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்

வேதனுமிருக்குஞானம் விளங்கநாவிருக்கநல்ல
நீதிசாஸ்திரமிருக்க நிபுணர்கள்பலரிருக்க
நூதனமாகசெய்த நவனுருமண்டபத்தில்
சூதிதுமடையர்செய்யுந் தொழிலையோசெய்யவேண்டும்

(வ-ம்) கேளும் தம்பிதுரியோதனா வேதங்கள் சாஸ்திரங்கள்மனுவிக்கியானங்கள் இதுமுதலான தர்மசாஸ்திரங்களிருக்க இந்த அலங்காரமண்டபத்தில் முதல்முதல் புத்தியில்லாதவர்க ளாடப்பட்டசொக்கட்டானாடவேணுமா வேறேயொரு தொழிலில்லையா தம்பிதுரியோதனா.

பீமன்-துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்

சண்டையும்பகையும்யாருஞ் சாற்றியபிழையும்பொய்யும்
கண்டிதமொழியும்பொல்லாக் கவலையங்குடியிருப்பார்
கொண்டுளசூதுவித்தை கொற்றவர்கூட[illegible]கேஇந்த
மண்டபந்தனிலின்ன மற்றொன்றைச்செய்யலாமம

(வ-ம்) சண்டைக்கும பகைக்கும அசத்தியத்திற்கும்பொய்பிக்கும்கோபத்துக்கும் ஹேதுவாயிருக்கப்பட்ட இந்த சொக்கட்டா

ணுஇங்கே ஆடவேணும்அது இராசசபைக்குயோக்கியமல்ல வே
றேயொருகாலட்சேபஞ்செய்யலாந்துரியோதனமகாராசனே

அர்ச்சுனன்-துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்

மனதினிலொன்றைவைத்து வாக்கினிலொன்றைப்பேசி
துணிவுடன்றுரோகஞ்செய்வோர் சூதாடநினைப்பதல்லாற்
றனதுபாராட்டிதம்பி தமயனென்றொருமையுள்ளோர்
கனவிலுஞ்சூதமாடக் கருத்தினினினைக்கிடாரே

(வ-ம்) கேளுந்துரியோதனா மனதிலொன்றைநினைத்துவாக்கில் ஒன்றைச்சொல்லிஒருவருடையபொருளை அபகரிக்கவேண்டுமெ ன்றுநினைக்கப்பட்ட சாமத்துரோகிகள்அந்த சொக்கட்டானாடு வார்களேயல்லாமல்தன்தாய் அண்ணன்தம்பிகளென்று ஒருமை யாயிருக்கப்பட்டவர்கள்ஒருக்காலும் இந்தச்சூதாடலை நினைக்க மாட்டார்கள் துரியோதனா.

தர்மர்-துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்

மனத்தினில்வஞ்சனைநினைந்த மாமனையெதிரியாக்கி
சினத்துசூதாலேயெங்கள் செல்வத்தை பறிக்கலுற்றாய்
நினைத்துயெதுகேட்டாலும் நிமிஷத்திற்றருவேனிந்த
அனர்த்தமாஞ்சொக்கட்டானை யாடுவதொழித்திடாயே

(வ-ம்) கேளுந்துரியோதனா சகுனிமாமனை எனக்குஎதிரியாக்கி கபடசூதாடி எங்களுடையசெல்வத்தைப்பறித்துக்கொள்ள வேண்டியதி ல்லைநீ எதைக்குறித்துக்கேட்டாலுந் தடையில்லாமல்நான்தருகிறே ன்இந்த சூதாடுகிறதைநிறுத்தவேணுந்தம்பி துரியோதனா.

சகுனி- தர்மருக்குச்சொல்-விருத்தம்

சுந்தரமாயோராட்டஞ் சொக்கட்டானாடச்சொன்னால்
சிந்தையினடுநடுங்கி திகிற்பட்டநீதானேமேல்
புத்தியினினைத்துகேட்ட பொருளெல்லாந்தருவேனென்றாய்
பந்தயமாய்நீகொடுக்கும்பவுஷிதோதெரிந்துபோச்சு

(வ-ம்) கேளுந்தர்மராசனே ஓராட்டஞ்சொக்கட்டானாடுவோ மென்றுசொன்னமாத்திரத்திலே பயந்துநடுநடுங்கி திகிற்பிடித்து கழகழ வழவழசபசவென்று முழிக்கிறீர் நீர்தானா துரியோதனம காராசன் கேட்டதெல்லாங் கொடுக்கப்போகிறாய் நீகொடுக்கப் போகிறபவுஷது இதிலேதெரிந்துபோச்சுதே போபோ ஆ-ஆ தர் மபுத்திரமகாராசனே.

கர்ணன்-தர்மருக்குச்சொல்-விருத்தம்

கதித்தசூதாடிவெல்லக் கையிலாகாதநீதான்
எதிர்த்தபோர்க்களத்தில்நின்று யாரைநீவெல்லப்போறீர்
விதித்ததம்பிமாரும்நீரும் விலவிலத்துளறிக்கொண்டு
பதற்றுநீர்விட்டுவிட்டோம் பிராணனைக்காத்துக்கொள்வீர்

வ-ம. கேளுந் தருமராசனே சொக்கட்டானாடி வெல்லப்போகி றாய் அதுவெளிச்சந்தான் இவ்வளவுக்கே உன்தம்பிமாரும் நீயும்

விலவிலத்துக்கலகலத்து கிடுகிடென்று நடுநடுங்கி முன்பின்தோன்றுமல்பினத்துகிறீர்கள் நல்லது உங்களைவிட்டுவிட்டோம் நீங்கள் அடங்கலும் உங்கள்பிராணனைகாப்பாற்றி கொள்ளுங்கள்போங்கள் போங்கள் வேலைமெனக்கிட்டதாசிரிகளே

அர்ச்சுனன்-கர்னனுக்குச்சொல்-விருத்தம்

வஞ்சனைநினைத்தழைத்து மாயசூதாடச்சொல்லி
சொஞ்சமென்றிகழ்ச்சிச்செய்து சூதிக்கிறாயடாகர்ண
நஞ்சினையிகழ்ச்சிசொன்ன நாக்கையுமறுத்துவுந்தன்
நெஞ்சினைப்பிளந்துவெட்டி நிணக்குடலெடுப்பேன்பாராய்

வ-ம் கேளடா அடாகர்ண கபடமார்க்கமாக யெங்களை அழைப்பித்துவந்து சூதாடச்சொல்லி யிகழ்ந்துபேசுகிற உன்னுக்கையறுத்துநெஞ்சைப்பிளந்து நிணக்குடலெடுக்கிறேன் இதோஅஸ்திரம்வருகின்றது இதைத்தப்பித்துக்கொள்ளடாகர்ண

தர்மர்-அர்ச்சுனனுக்குச்சொல்-விருத்தம்

அடுத்தடுத்தென்னசொன்னாலும் அடாதம்பியர்ச்சுனகேள்
பொறுத்தவர்பூமியாள்வார் பொறுபொறுபதரவேண்டாம்
தடுத்துநாம்சொல்வதென்ன தருமமேசெயமென்றெண்ணி
வொழுத்திடுமாமனோடே யோராட்டமாடுவோமே

வ-ம். கேளடாதம்பிஅர்ச்சுனா பொறுத்தவர் பூமியாள்வார்பொங்கினவர் காடாள்வாரென்றவார்த்தை நீகேட்டதில்லையா அவர்தான் அதர்மம்பண்ணினாலும்இகழ்ந்துபேசினாலும் உனக்குக்கோபம்வரலாமா பொறுபொறு பதறாதகாரியஞ்சிதறாது நம்மது தருமமேசெயம்ஒருஆட்டந்தான்போடுவோம் திருவுளமிருக்குது

துரியோதனன்-தர்மருக்குச்சொல்-விருத்தம்

இதுசரிநன்றாய்ச்சொன்னீ ரின்றுன்னைமெச்சிக்கொண்டே
சதிசெய்வனென்றுசொல்லி சற்றுநீயஞ்சவேண்டாம் (ன்
கிதியிலநீதோற்றதெல்லாம் நீதானேகொடுக்கவேணும்
பதியிலென்மாமன்தோற்ற பந்தயமநானேதாரேன்

(வ-ம்.) இதுவேசரி சவாசுஇப்படியல்லவோ துணியவேணும் அண்ணாதர்மபுத்திரரே இப்போதுநானுன்னை மெச்சிக்கொண்டேன்முன்னே சம்மதிக்கலாகாதா நாம்பாலுந்தேனும்போலஇருக்கிற அண்ணன்தம்பிகளுக்குள்ளே யேதாகிலு மொருவஞ்சனை நடக்குமா நடக்காது ஆனால் நீர்தோற்றதே யுண்டானால் நீரேகொடுக்கவேணும் என்மாமன்தோற்றபொருளை நானேகொடுக்கிறேன் போடுங்கள்பார்ப்போம்.

தர்மர்-சகுனிக்குச்சொல்-விருத்தம்

எந்தனுக்கெதிரியாக யிருந்திட்டகெடுசூதாட
தொக்கமாய்வாயுங்கையுந் துடிக்கின்றசகுனிமாமா
விந்தையாய்நூறுகோடி விலைபெற்றமுத்துமாலை
பந்தயமாய்க்குறித்து பண்புடன்வைத்தேன்பாராய்

(வ-ம்.) என்னுடனேகூட சொக்கட்டானுடுகிறதற்கு வாயுங் கையுந் துடிக்கின்றசகுனிமாமா இதோநூறுகோடிபொன்பெற்ற முத்துமாலேஇதைபந்தயமாய்க் கட்டிவைத்தேன்பாரும்.

துரியோதனன்-தர்மருக்குச்சொல்-விருத்தம்

சாந்தமாங்குணத்தின்மிக்க தர்மபுத்திரரேகேளாய்
வேந்தனென்மாமன்வைக்க வேண்டும்பந்தியத்துக்காக
போந்திடுநூறுகோடி பொன்பெற்றவலயமித்தைப்
பாந்தமாயெவரும்பார்க்சப் பந்தயம்வைத்தேன்பாராய்

(வ-ம்.) கேளாய்அண்ணே தர்மபுத்திரரே என்சகுனிமாமன வைக்கவேண்டிய பந்தயத்துக்காக இதோநூறுகோடி பொன்பெற்றவாகுவலயத்தை எதிர்பந்தயமாகவைத்தேன் இதோபார்த்திரா இதோபார்த்திரா.



முதலாட்டஞ் சொக்கட்டாணுடுகிறது

தருமர்-சொல்-தரு-இ-ம-புன்னுகவராளிஅடதாளம்

ஸ்ரீகிருஷ்ணு ஹரிகிருபை யாளா-யுந்தன்
செயலல்லவோ-இது தீனதயாளா(ஸ்ரீகிருஷ்)

தர்மருக்குவிழுந்தபந்தயத்தை சகுனிசொல்விபவசனம்.

ஓய்தர்மராசாவே முணத்தொண்ணுமுதல்முதல் விழுந்தபடியினுலே உம்முட ஆட்டந்தோற்றுப்போகும் நான்போடுகிறேன் பாரும்.

சகுனிசொல்-தரு

ஓடிவாடாகுட்டிச் சாத்தான் எந்தன்
உருட்டுக்குபிரட்டுக்கும் உதவிசெய்காத்தான் (ஓடி)

வ-ம் பன்னிரண்டு-சம்பத்து-காய்வைத்தபிறகு

தர்மர்சொல்-தரு

சத்தியமேதுணை—தர்மமேஜெயம்

சத்தியமேதுணையென்றுந்தர்மமே செயமென்றும
உற்றுநினைத்தபேர்க்குவுண்டோவுண்டோலயம் (சத்தி)

வ-ம்-நாலத்தோரஞ்சு

சகுனிசொல்-தரு

தந்திரமேதுணையென்றுஞ்சமர்த்தே செயமென்றும்
இந்திரசாலங்கற்றஎனக்கென்னமே லயம் (தந்தி)

இதுவும்-சகுனிசொல்-தரு

அக்கிரமந்துணையென்றும்அவர்க்கே செயமென்று
தக்கவித்தைகள்கற்றசகுனிக்கென்ன பயம் (அக்கி)

வ-ம்-இருபகடை-பன்னிரண்டு-எட்டு-இருக்கால்-ஒன்பது

தர்மர்சொல்-தரு.

பதராமலேயாடுங்காணும் மாமா
பதராமலேயாடுங்காணும
பதராமற்பாச்சிகைபக்குவமாய்ப் போட்டு
சந்தயம்விழுந்ததைப்பார்த்தாட வேணும்(பதரா

வ-ம்-நாலுமூணேழு.

சகுனிசொல்-தரு

சுறுக்காகத்தானாடவேணும் ஆட்டம்
சுறுக்காகத்தானாடவேணும்
சுறுக்காகப்பாச்சிகை வெறுக்காமலே போட்டு
திறுக்காகவேயாடு குறுக்காகப் பேசாதே(சுறுக்

வ-ம்-இரண்டெட்டு-இரண்டுதுகை-சம்பத்து

விழுபன்னிரண்டொருபத்து ஆ-ஆ
விழுபன்னிரண்டொருபத்து
விழுபன்னிரண்டொருபத்து விழுந் தாக்கால்
முழுதுங்குங்குமக்காயால் முன்னேகட்டலாஞ் சோடு(விழு

மூணத்தொண்ணு

நான்கட்டுவேன்மூன்னசோடு தம்பி
நான்கட்டுவேன்மூன்னசோடு
நான்கட்டுவேன்முன்னே நமக்குமுண்டோ ஈடு
நான்கட்ட குங்குமக்காயைரெண்டையுங் குத்தி(நானே

வ-ம்-இருக்கால்-பன்னிரண்டு-ஒன்பது

வ-ம்-இருக்கால்-பன்னிரண்டு-ஒன்பது

பத்தும்பகடையும்வேணும் இப்போ
பத்தும்பகடையும்வேணும்
பத்துடனேயொரு பகடையும் விழுந்தாக்கால்
குத்தினகாய்கட்டு குங்குமங் கட்டலாம்(பத்து)

வ-ம்- நாலத்தோரஞ்சு

கட்டினசோடுபோவேணும் இப்போ
கட்டினசோடுபோவேணும்
கட்டினசோடுபேர்த்துக் காயுமொயில் போட்டு
எட்டிக்குங்குமங்குத்தி லட்டுபோடவே வேணும்(கட்)

வ-ம்-இரண்டு-பன்னிரண்டுபத்து

தர்மர்சொல்-தரு

என்கையிற்பந்தயங்காணேம் மாமா
என்கையிற்பந்தயங்காணேம்
என்கையிற்பந்தயமேனோவிழக் காணேம்
முன்கையிலாறொன்னு மூணத்தோ ணல்லாமல்(என்கை)

வ-ம்-ஆறொண்ணேமூ

சகுனிசொல்தரு

பன்னிரண்டுதுகையெட்டும்வேணும் ஒரு
பன்னிரண்டுதுகையெட்டும்வேணும்
பனிரெண்டுதுகையெட்டு பந்தயம்விழுந் தாக்கால்
பனிக்குங்குமதாட்டங் கெலிக்கும்கெலிக்கு மொரு(பன்னி

வ-ம்-இருக்கால்—துகை-பன்னிரண்டு-எட்டு-பத்து

சகுனியுந்-துரியோதனனும்-சந்தோஷப்பட்டுச்சொல்-விருத்தம்

என்னுடைமருமகனே எழில்துரியோதனா கேள்
மன்னனே தர்மர்முத்து மாலையைநான் கெலித்தேன்
பொன்னனமாமாவுன்னைப் புகழ்ந்திடவென்னலாமோ
முன்னனவலக்கைதாரு முத்தநான்தருகுவேனே.

வ-ம்: ஆ-ஆ என்னுடைமருமகனே துரியோதனமகாராசனே தர்மராசன் பந்தயமாகவைத்தமுத்துமாலையை நான் கெலித்தேனே.

வ-ம். ஆ-சகுனிமாமா உன்சாமர்த்தியத்தை என்னாலே சொல்லிமுடியுமானதோ உன்வலக்கையைத்தாரும் ஒருமுத்தங்கொடுக்கிறேன்.

சகுனி-தர்மருக்குச்சொல்-விருத்தம்.

மதியுள்ளதர்மபுத்திரா மனதுநீதளரவேண்டாம்
முதல்முதல்தோற்றபேர்கள் முற்றிலுங்கெலிப்பாருத்தன்

ரதகெசதுரகநாடு நகரத்தைகுறித்துமேலும்
இதமுடனினியோராட்ட மின்னமுமவாடுவோமே

வ-ம். கேளுந்தர்மராசனே நாம்தோற்றுப்போனோமென்று நீ னைக்கவேண்டாம் முதல்தோற்கிறது நல்லதுஇனிமேல் நீஜெ யிப்பாய் ஆகையால் உன்னுடைய ஆனைசேனைநாடுநகரம் பரிவார மிவைகளைக்குறித்துபந்தயங்கட்டி இன்னமொருதரம்ஆடுவோம் வாரும்தருமராசனே.

தர்மர்சொல்-வ-ம்-அப்படியேஆடுவோம்வாரும்மாமா.

## இரண்டாவது ஆட்டம்.

சகுனிசொல்-தரு-இ-ம்-நாதநாமக்கிரியை-மிசுரதாளம்.

| | |
|---|---|
| நானேஜெயிக்கிறேன்பார் | இந்தாட்டமும் |
| நானேஜெயிக்கிறேன்பார் | |
| கோனனதர்மர் கொடித்தேருங் | குதிரையும் |
| ஆனையுஞ்சேனையுமவராளுந் | தேசமும் |

வ-ம். துகை-இருக்கால்-எட்டு-பனிரண்டு-பத்து

தர்மர்சொல்-தரு.

| | |
|---|---|
| தர்மமேசத்தியம் | அரிஅரி |
| தர்மமேசத்தியம் | |
| இம்மையிற்கோடியிடருகள் | வந்தாலும் |
| நம்மைசேர்நாடுநகரத்தை | தோற்றாலும்(தர்ம) |

வசனம்-துகைநாலத்தோரஞ்சு

| | |
|---|---|
| இனிவிடுவேனோ | நான்கொஞ்சத்தி |
| லெழுந்திருப்பேனோ | |
| சனியாயேழரைநாட்டுச் சனிபோலவே | பிடித்து |
| முனிவாயெதிர்ப்பந்தயமுழுதுமோடி | யடித்து (நானே) |

வசனம்-பன்னிரண்டு-பத்து

தர்மர்சொல்-தரு.

| | |
|---|---|
| விட்டுவிட்டாலும் | விடாமல்நான் |
| கட்டுப்பட்டாலும் | |
| குட்டுபட்டாலுங் குறைவந்து | நேர்ந்தாலும் |
| நஷ்டப்பட்டாலும் நடுக்கம்வந் | திட்டாலும்(தர்ம) |

வசனம்-இருக்கால்-பத்து

சகுனிசொல்-தரு.

| | |
|---|---|
| ஏற்கவே சூது | வழல்லென்று |
| விதற்ஜெயிப்போது | |
| பார்க்கினிலெனதுகையைப்பகடைபொக்கிஷத்தொட்டி | |
| மூர்க்கமாய்துடைதட்டிமுனனே | சோடுகட்டி.(நானே) |

வசனம்-பனிரெண்டு-துகை-பத்து

தர்மர்சொல்-தரு.

சூதுசெய்தாலும் எண்ணுமலிப்
போதுசெய்தாலும்
காதகஞ்செய்தாலுங்கபடமே செய்தாலும்
தோதகஞ்செய்தாலும் தொந்தரை செய்தாலுந் (தர்ம)

வ-ம்-ஆறொன்னொமு

சகுனிசொல்-தரு.

பாண்டவர்சாரை சகுனியென்னும்
பாம்பின்வாய்த்தேரை
பாண்டவரென்னைப்பழித்துச் சொல்லாவண்ணம்
மூண்டதுசூதுமுடிந்தது என்னெண்ணம் (நானே)

வ-ம்-பன்னிரண்டு-எட்டு-ஆறு-நாலு-பத்து

தர்மர்சொல்-தரு.

மிக்கவேயின்று எங்களைஎவ்
விதத்திலும்வென்று
சொக்கட்டாணுடிதுசங்கட்டி யாண்டாலும்
இக்கட்டாலெங்களுக்கிடர்வந்து மூண்டாலும் (தர்ம)

வசனம்-மூணாத்தொண்ணு

சகுனிசந்தோஷப்பட்டு துரியோதனனுக்குச்சொல்-கொச்சகம்.

அஞ்சுபேருந்தவிர யானைபரிசேனைரதம்
இஞ்சவுள்ளநாடுகக ரின்பமிகுசேனைரதம்
வஞ்சவுப்புசட்டி வரவோடுமில்லாமல்
பஞ்சவரைப்பஞ்சாய் பறக்கடித்தேன் பார்த்திரோ

வ-ம். கேளும்என்னுசை மருமகனுனதுரிரோதன மகாராச னே இந்தப்பாண்டவர்களைத்தவிர மற்றஇவர்களுக்குள்ளே ரதகச துரகபதாதிகளையும் செலித்துஉப்புசட்டிவரவோடுங்கூட இவர்க ளுக்குச்சுதந்தரமில்லாமல் பஞ்சவரை இலவம்பஞ்சாகப் பறக்க டித்தேன்பார்த்தையாதுரியோதனமகாராசனே.

துரியோதனன்-சகுனிக்குச்சொல்-விருத்தம்

இத்துடன்விடலாகாது இவர்க்குள்ளதம்பிமாரும்
அத்துடனிருவருமாக வைந்துபேரையுங்குறித்து
எத்துடனினியோராட்ட மிசையவேநன்றுயாடிக்
கொத்துடன்செலித்தாலெந்தன் குலதெய்வநீரோமாமா

வ-ம். கேளுங்காணும் ஓமாமாஇதிலேமகிழ்ந்துபோறாய் யென் ணவீமன்அர்ச்சுனன்நகுலன்சகாதேவன் இன்னம்நாலுபேரிருக் கவில்லையா இந்தருமராசா இருக்கவில்லையா ஆகரு-பேரையுங்குறி த்துஇனியோராட்டம்போட்டாவல்லவோசரி

சகுனி-துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்

நகைமொழிசொன்னீர்முட்ட நனைந்தவர்க்கீரமுண்டோ
மருவுமென்வார்த்தைதன்னை மனதினில்நிசமென்றெண்ணி
அகமகிழ்ந்தாடுவோமென் றவர்களேசொல்லுவார்கள்
தருமனுமகனேசும்மா சற்றேநீயிருந்துபாராய்

வ-ம். ஆ-ஆ, மருமகனே முட்டநனைந்தவாளுக்கு ஈரமுண்டா நாடுநகரம் ஆனைசேனைபரிவார மிதுகளையெல்லாந் தோற்றுவிட்டமகாரோஷக்காரரான பாண்டவர்கள் தங்களஞ்சுபேரையுங்குறித்து ஆடுகிறதற்குப்பின்வாங்குவார்களா அவர்கள்தானேவலிய ஆடப்போகிறார்கள் பொருந்துரியோதனமகாராசனே

சகுனி-தருமருக்குச்சொல்-விருத்தம்

தருமபுத்திரனேநீதான் சற்புத்திரனாகையாலே
மருவுமென்வார்த்தைதன்னை மனதினில்நிசமென்றெண்ணி
ஒருமையுன்தம்பிமாரும் முன்னையுங்குறித்தேயின்னம்
அருமையாநாமோராட்டம் மாடுவோமாடுவோமே

(வ-ம்) கேளுந்தருமபுத்திரனே நீ சற்புத்திரனானபடியால் என்சொல்லைதள்ளமாட்டாய் இப்போ உன்தம்பிமாரும் உன்னையும்ஆக-௫-பேரையுங்குறித்து இன்னம்ஓராட்டம் ஆடுவோம் வாருந்தருமராசனே.

தருமர்-சகுனிக்குச்சொல்-விருத்தம்

ஆவதுந்தெய்வத்தாலே யழிவதுந்தெய்வத்தாலே
மேவியநம்மாலிங்கே வேறொன்றுநடப்பதில்லை
தாவியெங்களையுங்கூட தனைக்குறித்தாடவென்றீர்
கோவியில்முறையைச்சொன்னீர் கொப்பனவாடுவோமே

வ-ம். ஓய்மாமா தோற்பும் கெலிப்பும் நன்மையுந்துன்மையும் ஆகிறதும் அழிகிறதும் திருவுளச்செயலேயல்லாமல்நம்முடைய செயலல்லஎல்லாந்தோற்றுப்போன எங்களையுங்குறித்து ஆடுமென்றுசொல்லுகிறீர்நல்லநிதி அப்படியே ஆடுவோம்வாரும்.

சகுனி-துரியோதனனுக்குச்சொல்-வசனம்.

ஆ-ஆ-மருமகனே தருமபுத்திரன் மகாபுத்திசாலி-௫-பேரையுங்குறித்து ஆடுகிறதற்குப்பின்வாங்கமாட்டானென்று முன்னே தானேசொன்னேன்பார்த்தீரா அதற்குத்திருஷ்டாந்திரம்.

---

மூன்றாவதுஆட்டம்.

அஞ்சுபேரையுமிப்போ கெலிக்கிறேன்நமக்
குடிமைத்தொழிற்புரிய வலிக்கிறேன்
கொஞ்சம்பரியுந்தேரும் குடையும்பரியும்போச்சு
கஞ்சமும்நாடுநகரஞ்சகலமுநமமு தாச்சு(அஞ்)

வ-ம் மூனுபனிரெண்டு-எட்டுஇருக்கால் நாலத்தோரஞ்சு.

உங்களுக்கேசெல்வம் பெருக்கட்டும்-நாங்க
ளொடுங்கினுலுந்தரும மிருக்கட்டும்
எங்களுக்கினியில்லாதஇட்டுகள் வந்தாலும்
அங்கங்குன்றியுங்கட்கடிமையாய்ப் போனாலும (உங்க)

வ-ம்-நாலத்தோரஞ்சு

சகுனிசொல் தரு

கடலெல்லாந்தாண்டியோர் கால்வாயைத்தாண்டவென
கையிலாகாதென்று விடுவேனோ பெருங்
காட்டையெல்லாம்வெட்டி சுட்டுபோட்டு ஒரு
கரும்பைவெட்டப்பயப் படுவேனோ யிந்த
அடியிலெதிரிக்க அடர்ந்த பாதயம்போட்டு
அத்தித்தத்திப்பற்றி சத்திகொத்திக் குத்தி(அஞ்)

வ ம். நாலெட்டுஇரண்டுபனிரண்டு இருக்கால்துகைநாலத்தோர

தருமர்சொல்தரு

பெரும்வாருடவாழ்வும்பெண்டுபிள்ளையு நாம்
பிறந்தபோதுகூடப் பிறந்ததே இந்தப்
பேதகஞ்செய்து அங்கிதஞ்செய்து மன்னர்
பெறறசெல்வமும்பின் சிறந்துதோ மாமா
சேருமிரவுதன்னில்நிலவுஞ் சிலதுகாலஞ்
ஆறுமுளாடுக்குமிருளுஞ் சிலதுகாலம் (உங்க)

வ ம நாலத்தோரஞ்சு

சகுனிசொல்தரு.

மலைகளெல்லாங்கையால்வாரியுண்டு குண்டு
மணியைக்கண்டுபயப்படு வேனோ பகை
வந்துசேர்ந்தபோதுவீரனைக் கெல்விடாமல்
வழுவமென்றுவிட்டு விடுவேனோஇதோ
மெய்யுமெழுதிற்சானை வெளியில்புறப்பட்டாமல்
வெட்டிக்கிட்டிக்குட்டித்தட்டிக்கோட்டிக்கட்டி (அஞ்ச

வசனம்இரண்டுபனிரெண்டு ரெண்டெட்டு துகைமூணத்தொண்

தர்மர்சொல் தரு. (ணு

போகாதபொருள்தன்னைபோவென்று சொன்னாலும்
போகாமலொன்றுபத் தாகுமோ விட்டு
போகும்பொருள்தன்னைப் போகாமலிருக்கவும்
புதைத்துவைத்தாலுந்தா னிருக்குமோ மாமா
வாகானவுலகத்தில்மழையுஞ் சிலதுகாலம்
வேகமானகோடைவெயிலுஞ் சிலதுகாலம் (உங்க)

வசனம் மூணத்தொண்ணு

சகுனிசொல் தரு.

முன்னே வைத்தகாலைப்பின்னே வைத்து என்றால்
முடியாதென்றால்சகுனி யாவனோ எண்ண
முடியுமட்டுமொரு காலில்நின்றேயதை
முடிக்காமலெழுந்துநான் போவேனோ-நான்
சொன்னசொல்லுக்கொரு சின்னம்வந்திடாமற்
கூட்டிக்-கூட்டிப்-போட்டு-காட்டி-மூட்டிவாட்டி (அஞ்ச)
வ-ம். நாலெட்டு இரண்டிருக்கால்-துகைஒன்பது

தர்மர்சொல்தரு.

கபடமெண்ணிப்பொல்லா துராகஞ்செய்துவெதுங்
கணத்தைத்தேடுவதென்ன புத்தியேசம்மா
கதடுக்கதறிக்கள்ள கயிலுருட்டிப்பகடைக்
காயில்வெல்லுவதென்ன வெற்றியேமாமா
குவியுங்கடலினீரைக்குடத்தி லடைக்கலாமோ
குடிக்கும்வம்பரைப்போலத் துடிக்குஞ்சகுனிமாமா(கப

வ-ம்-நாலத்தோரஞ்சு

சகுனிசொல்-விருத்தம்.

தருமபுத்திரன்செருக்குந் தம்பிபீமன்கொழுப்பும்
மருவுமர்ச்சுனன்துடிப்பு மற்றிருவர்கள்பதைப்பும்
அரிவைதுரோபதைகொடிப்பு மவள்சிரித்திடுஞ்சிரிப்பும்
ஒருகொடியினிலென்கையாலொடிங்கிப்போனதைக்கண்டீரோ

வ-ம். பார்த்தீர்களா பார்த்தீர்களா தர்மபுத்திரன்செருக்கும் தம்பிபீமன் கொழுப்பும்அர்ச்சுனனுடைய துள்ளலும்இந்தப்பசகளுடையமுழுக்கும் அந்ததுரோபதையினுடைய குலுக்கும்பலுக்கும்கெலிப்பும் சிரிப்பும்ஒருஜகுனிகையிலேவந்துஒடிங்கிப்போனதைப்பார்த்தீர்களா ஆ ஆ

துரியோதனன் தர்மருக்குச்சொல் விருத்தம்.

தெய்வத்தின்செயலேநான்முன்செய்தபுண்ணியமோநீங்கள்
ஐவருந்தோர்த்தீரெங்கட்கடிமையாய்ப்போனீரிப்பால்
மைவருங்கண்ணுளந்த மாதுதுரோபதையைவைத்து
கைவரவினியோராட்டங் கருத்துடனாடுவீரோ

வ-ம். கேட்டீரோதர்மபுத்திரரே நீங்கள்ஐவருந்தோற்று எங்களுக்குஅடிமையாகப் போனதினாலேநீங்களைந்துபேருந் தொட்டுப்பார்க்கிறீர்களே அந்தஅழியாத பத்தினியைக்குறித்து ஓராட்டம்போடுங்கள் பார்ப்போம்.

### பொது வசனம்.

இந்தப்படியாய் துரோபதியைக்குறித்து ஆடச்சொல்லிதுரியோதனன்சொல்ல திருதராட்டிரனைப்பார்த்து விதுரயகாராஜன் சொல்லுகிறவிதங்காண்க.

### விதூரன் திருதராட்டிரனுக்குச்சொல் விருத்தம்.

ஐயையோகெடுவாயிந்த வங்கீதமுலகிலுண்டோ
நையவுன்குடிக்குநாச காலமும்வந்துதோதான்
பொய்வளர் அண்ணன்தேவி பெற்றதாயாச்சேயந்த (தோ
தையலைக்குறித்தேயாடத் தகாதென்று சொல்லொண்ணு

வம் கேளாய்அண்ணுதிருதராட்டிரமகாராஜனே இவ்வனியாயம்உலகத்திலுண்டோ உன்னிட சமஸ்தானத்துக்கு என்னகேடுகாலம் வந்துதோ உன்மகனுக்கு அந்ததுரோபதி தமயன்பாரியாளானபடியினுல் தாய்க்குச்சமானமாச்சுதே அவளையும் வைத்தாடச்சொல்லி உன்மகன் சொல்வதைக்கேட்டு நீசும்மாயிருக்கலாமா உன்சொல்லைத் தள்ளிப்போடுவானு வேண்டாம்வேண்டாமென்றுஒருவார்த்தை சொல்லலாகாதா ஐயையோஅண்ணே

### சகுனி விதூரனுக்குச்சொல் விருத்தம்.

தோற்றுப்போனவர்களோனுஞ்சொல்லாமலிருக்கமேலும்
வார்த்தைசொல்லாமல்மற்ற மன்னவர்பார்த்திருக்க
ஆற்றமாந்தலையிரக்க முனக்கிப்போவந்ததென்ன
யேற்றவுன்ஞாயமிங்கே யிருக்கட்டும்போங்காணும்

வ-ம். தோற்றுப்போன பாண்டவர்கள் மாணிக்கம்போல வாயைத்திறவாமலிருக்க மற்றவர்களுஞ் சிடுக்குப்பொடுக்கென்ணுமலிருக்கஉனக்குத்தலையிரக்கம் வந்ததேன்காணும்இப்போவெகுஞாயம்பேசவந்தாய் போம்போம்விதூரா,

### விதூரன்-சகுனிக்குச்சொல-வ-ம்.

ஓய்-ஜகுனிமாமா உன்னுலேதானிந்தசமஸ்தானம்வெட்டவெளிச்சம் பட்டம்பகலாகப்போகுது உன்பேச்சுக்குவரவில்லை நீர் சும்மாயிரும்.

### விதூரன்-திருதாட்டிரனுக்குச்சொல்-விருத்தம்.

பிள்ளைகள்தீங்குசெய்தால் பிதாநல்லபுத்திசொல்லி
தள்ளவேவேணுமந்தத்தன்மையுன்னிடத்திலில்லை
உள்ளநாளுள்ளமட்டும் மோரவஞ்சனையேசெய்தாய்
எள்ளுந்தண்ணீரும்நாளை யாருனக்கிறைக்கப்போறுர்

வ-ம். கேளும்அண்ணு திருதராட்டிரமகாராசனே பிள்ளைகள் ஒருபொல்லாங்குசெய்தால் தகப்பன்நல்ல புத்திமதியைச் சொல

வி அதைத்தடுக்கவேண்டும் அந்தகடத்தை உன்னிடத்திலில்லை எப்போதும்உன்தம்பி பிள்ளைகளுக்குஓரவஞ்சனையே செய்தாய்உன் பிள்ளைகள்தானே என்றுந்தண்ணீருமிறைக்க உதவவேணுமே அண்ணே.

இதுவும்-விதுரன்சொல்-விருத்தம்.

தம்பிபிள்ளைகளைமூத்த தமையன்பிள்ளைகள்கெலித்து
கொம்பனையாளைக்கூட குலித்தாடச்சொல்லாமல
வெப்பியுன்மகனுரைத்த வேலையேநடக்குமானால்
கரும்புருயரசும்வாழ்வும் நாசமாய்ப்போகுஞ்சொன்னேன்.

வ-ம. தம்பிபிள்ளைகள்உடபிறந்ததமையன்பிள்ளைகளடிமையாக்கிக்கொள்கிறது அவர்கள்பெண்சாதியைக்கூட யேதுநிமித்தியமடிமையாக்கிக்கொள்கிறது உன்மகன்சொல்லுகிறது உனக்குச்சரியாயிருக்குதா அப்படிநடக்குமானுலிந்த ஆதீனத்துக்குக்கெடுதிவரும் சொன்னேன் சொன்னேன்.

சகுனி-தர்மருக்குச்சொல்-வ-ம்.

தம்பிதர்மபுத்திரா அந்தக்கிழவனும்இந்தக்கிழவனும்யேதோ பேசிக்கொள்ளுகிருர்கள் இந்தக்கிழவனபேச்சு இந்ததுரியோதரு ணகின்றாக்காரனுக்கு யேற்கபோகுதா துரோபதியைக்குறித்தாரம்ஓராட்டம்போடுவோம் வாரும்.

தர்மர்-வசனம்-அப்படியேசெய்வோம்

துரோபதியைவைத்தாடுகிறது.

## நான்காவது ஆட்டம்.

சகுனிசொல்-தரு-இ-ம்-புன்னாகவராளி-அடதாளம்

என்மருமகனுக்கு இதல்லவோ நாட்டம்
எப்படியாகிலுங் கெலிக்கிறே ணிந்தாட்டம்

சகுனிசொல்-வசனம்

இரண்டுபனிரொண்டு இரண்டெட்டு இரண்டிருக்கால்துகைபத்து.

துரியோதனன்-சகுனிக்குச்சொல்-வசனம்

ஆஆ-ஆ-ஆ ஓய்கர்ணமகாராசனே பார்த்திரா எங்கள்சகுனிமாமன்கையேகைமற்றபேர்கைஉலக்கைதான்ஆடுக்கடுக்காய்பந்தையம்விழுகிறசொகுசை நான்யென்னசொல்வேன் ஓய்மாமா உன் கையை இப்படிதாரும்என்கண்ணிலே ஒற்றிக்கொள்ளவேணும்

தர்மர்சொல்-தரு.

ஐயையோஎதெல்லாமரசர்க்குத் தர்மமல்ல
அநீதஞ்செய்தாலதற்குநா னென்னசொல்ல

சகுனிசொல்-வ-ம்

ஆ-ஆ-விளங்குச்சேபுழையபக்தயக்தாமுணத்தொண்ணுதான்

சகுனிசொல்-தரு.

நன்மையிலுஞ்சில தின்மையிலு மந்த
நாளையிலுமெந்தவேளையிலும்பார்க்கில் (என்மரு)

சகுனி-சொல்-வ-ம்.

மூன்றுபனிரெண்டுமூன்றெட்டுமூன்றிருக்கால்மூன்றுதாகைபத்
(து

தர்மர்சொல்-தரு.

மெய்யானமூர்க்கமும் பொய்யான மார்க்கமும்
வீச்சுகளுங்கொஞ்சம் பேச்சுகளும்பார்த்தால் (ஐயை)

தர்மர்சொல்-வ-ம்-துகை-நாலுமூணேமூ

அஞ்சுபேரையுங்கூடகெலித்ததுவும் பெரிதல்ல
அடிமையாக்கிக்கொண்டததுவும்பெரி தல்ல
ஆனைகளும்பரிசேனைகளுமவர்
அஸ்திரங்களும்நல்ல வஸ்திரங்களும்ரதந
ஆரங்களுஞ்சுத்த வீரங்களுமாக
ராடைகளுஞ்சித்ர மேடைகளுங்கட்டும்
ஆடிகளும்ரொக்க சாடிகளுங்கட்டும்
ஆடிகளும்ரொக்க சாடிகளுமவர்
அட்டிகலஞ்சத்ர கட்டில்களுமவர்
ஆட்டங்களுமாதர் கூட்டங்களுந்திர
ளாடுகளும்பசுமாடுகளுமவர்
ஆஸ்திகளுஞ்சில பாஸ்திகளுமிது
வெல்லாவலித்தோமே யெல்லாங்கெலித்தோமே
அதுவும்பெரிதல்ல இதுவும்பெரிதல்ல

தர்மர்சொல்-தரு.

சொக்கட்டானுடனே யோசனைபண்ணினதும்
தோர்க்கடிப்போமென்று மனதிலெண்ணினதும்
தோதகமும்வஞ்சபோதகமுமொன்றைச்
சூட்டுவதுங்கோப மூட்டுவதும்பல
தொடுவழக்கும்பொல்லா படுவழக்கும்வெடி
துற்புத்தியுங்கெடு விற்புத்தியுமிந்த
சொற்பனையுங்கதி கற்கனையும்பேய்போல
துள்ளுவதுமாடிக் கொள்ளுவதுமிந்த
சொற்பிரட்டுங்கள்ள கைப்பிரட்டுமிந்திர
சழலுகளும்முழுதும் பழுதுகளுங்கெட்ட
சூதுகளும்வீண்வாதுகளும்பார்க்கில் (ஐயையோ)

துரியோதனன் வீஷ்டுமருக்குச்சொல்-விருத்தம்

தரித்திரனூர்தர்மபுத்திரன் பாவந்தானே
தம்பிமார்செய்தவினை தாழ்வுதானே
சிறித்துகளுக்கெனக்குலிங்கிக்குலுக்கும்பச்சை
சேயிழையாள்துரோபதைசெய் தீங்குதானே
பொருத்தமுள்ளவென்மாமன் சகுனிசெய்த
புண்ணியமோ நான்செய்தபூசைதானே
வருத்தமின்றிப்பாண்டவர்கள் வந்தவாறும்
வந்தவிடத்தினில்விடிந்த வாறும்பாரீர்

வ-ம். கேளுமெங்கள்பாட்டனாகிய வீஷ்மரேஇந்த தர்மபுத்திரன்செய்தஅதர்மமோதம்பிஅழகப்பமாருடைதவக்குறையோஅல்லாமலும்அங்கனேசிரித்து அங்கனேனொடித்துஅப்படிமுறிக்கிஇப்படிதிரும்பி க்லுக்கென்றுகுலுக்கிமொளுக்கென்று முறிஞ்சிப்போருளேஅந்த துரோபதையான தேவடியாள்செய்த பொல்லாங்கோஎன்சகுனிமாமனுடையபுண்ணியமோஎன்பாக்கியவசமோ ஆ-ஆ இந்தப்பாண்டவர்கள் அங்கேஇருந்துவந்ததும் இங்கேவந்தயிடத்திலே இவர்கள் அதோகெதியாய்ப்போனபோக்கும் பார்த்திரா பாட்டனாரே.

வீஷ்மர்-துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்

நமதுகுலம்பிறர்நகைக்குங்குலமேயல்ல
நராதிபருக்கிதுகளெல்லாமனாயமல்ல
சமரசமாம்பாண்டவர்களன்னியரல்ல
சகோதரரைக்கெடுக்கிறதுதருமமல்ல
அமிர்தகுணபாஞ்சாலியற்பமல்ல
அவர்கள்சபித்தாலுன்னைவிட்டுப்போறதல்ல
விமலபில்லாவடதுரியா வையோவிந்த
விபரீதகுணமுனக்குவேண்டாமப்பா

வ-ம், ஆ-ஆ, அடாதுரியோதனா என்னடா நம்முடையகுலம் பிறர்நகைக்கப்பட்டகுலமல்லவே அந்தபாண்டவர்கள் அன்னியரகடல்லவே சகோதரர்களுக்கு ஒருகேடுநினைக்கிறது தர்மமல்லவே அந்தராஜபத்தினியான துரோபதை அற்பசொற்பமல்லவே அவள்வாக்கினாலே ஒன்றைச்சொன்னால் உன்னைவிட்டுப்போறதல்லஐயையோ இந்தவிபரீதகுணமான வார்த்தைகள் வேண்டாமப்பாதுரியோதனா.

துரியோதனன்-விதூரனுக்குச்சொல்-விருத்தம்

பெருத்தவென்னப்பனென்னைப்பெற்றவன்திருதராட்டிரன்
ஒருத்தனேயந்தன்வார்த்தை குடன்பட்டுநடப்பாரிந்த
நகரத்திலெக்கிழவரெல்லாம் நானென்றுசொன்னாலத்தை
இருத்தவேறொன்றைசொல்ல மெப்போதும்வழக்கந்தானே

வ-ம், சரி-சரி-சரி-சரி-ஆ-ஆ, இதிலேகுறச்சலில்லை யேதுகா ணும்என்னப்பன் என்னைப்பெற்றவன்திருதராட்டிரமகாராசனே சரிநானெப்படிச்சொன்னால் அப்படியேகேட்கவும் நடக்கவும்வீ ஷ்மர்துரோணர் என்றுஞ்சொல்லப்பட்டநரைத்தகிழவரெல்லாம் நானொன்றுசொன்னால் அதைவிலக்கிவேறொன்றைச் சொல்லுகி றதுவழக்கந்தானே சிற்றப்பா நல்லதாகட்டும்.

துரியோதனன்-விதுரனுக்குச்சொல்-விருத்தம்.

சிற்றப்பாசிலபேரை அனுப்பியைவர்
தேசமெல்லாந்தோரணங்கள்கட்டச்சொல்லும்
மற்றவுப்புசட்டிவரவோடுங்கூட
வைக்காமலிங்கெடுத்துவரவேசொல்லு
குற்றமுள்ளஐவரையெழுந்திருக்கச்சொல்லு
கொடுத்தமையான தொழிற்செய்யச்சொலலு
சித்தினிதுரோபதையையிச்சபையிலிப்போ
சீக்கிரமாயிழுத்துவரச்சொல்லுவாயே

வ-ம். அப்பாசிற்றப்பா இனிமேல்முன்பின் யோசனைபண்ண வேண்டியதில்லை சிலபேரையனுப்பிப் பாண்டவர்கள் தேசமெல் லாம்தோரணங்கட்டச்சொல்லும் அவர்கள் வீட்டிலேயிருக்கப்ப ட்டஉப்புசட்டிவாவோடுங்கூட பாக்கியில்லாமல் எல்லாம்என்வீ ட்டிலேகொண்டுவந்து போடச்சொல்லும் இந்தப்பாண்டவர்ஐவரை ந்துபேரையும் எழுந்திருக்கச்சொல்லி அடிமைவேலைசெய்யச்சொ ல்லும் அந்தசித்தினிசிறுக்கியாகிய துரோபதியை இங்கேயிழுத்துவ ரச்சொல்லும் எழுந்துபோம் சிற்றப்பா.

விதுரன் துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்.

எந்தகாரியஞ்செய்தாலு மெவர்களையென்செய்தாலும்
அந்தகற்புடையாளான அரிவைதுரோபதையைமன்னர்
மந்திரசபையிலிப்போ மானமில்லாமற்பேசும்
சிந்தையைமறந்தாயானால் நீடூழிகாலம்வாழ்வாய்

வ-ம். அப்பாதுரியோதனா நீசெங்கோல் செலுத்தப்பட்டவன் செங்கோலுக்குமுன்னே சங்கீதமாகுமாநீயாரை யென்னசொன் னாலும் எதைஎப்படிச்செய்தாலும் ஆகிலும்தன்மானம் பிறர்மா னமென்றும் பாராமலந்தமகாகற்புடையவளானதுரோபதையை யிச்சபையிலேசின்னமாக இழுத்துபேசுகிறையே அதுநலமல்லஅ தைவிட்டுவிடுவையேயானால்கற்பகோடிகாலம்வாழ்வாயப்பா

துரியோதனன்-விதுரனுக்குச்சொல்-விருத்தம்.

நற்பயநன்றாய்ச்சொன்னீர் நாலஞ்சுபேருந்தித்த
செப்பமாய்க்கூடிக்கூடி திரிந்ததுரோபதையாளுக்கு
கற்பபேதுமானமேது கணக்கேதுகாரியமேது
சொற்பனத்திலுமந்த தோகையுமறந்திடேனே

வ-ம். சிற்றப்பாநன்றாகச் சொன்னீர் சுருக்குப்பையிலே அரிவாளைவைததாபம்பாலிருக்கின்றது நீர்சொல்லுகின்றதுயேதுகாணும்நித்தம்ஐந்துபேருடன் கூடப்போகிறவேசி அவளுக்குக்கற்பமானமாகாரியமாகணக்கா பளாபளா அந்தராசசூயயாகத்திலே என்னையல்லவா பார்த்துநகைத்தாள் அதுஎன்மனதிலேயிருக்கின்றது விடுவேனோ.

விதுரன்-துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்.

திறமையில்லாவிடகட துரியோதனநான்
  சேதியொன்றுசொல்லுகிறேன் தெளிவாய்க்கேளு
பொறுமைதனிலேமிகுந்தபூமிதேவி
  பூமிபாரம்பொறுக்கமாட்டேனென்று
திறமுடையமாயனுடன் சொன்னாளந்தை
  தீர்க்கிறேனென்றுசொல்லி நெடியமாலும்
தரைதனில்வந்தவதரித்தா னதற்கேற்றப்போற்
  சக்கிமுக்கிதட்டிதட்டாதே சதையப்போறாய்

வ-ம். கேளுமப்பாதுரியோதனா பூமியிலேஅக்கிரகம் மிகுந்துபூமிதேவியானவள் பூமிபாரம்பொறுக்கமாட்டாமல் மகாவிஷ்ணுவுடனே முறையமிட்டாள் அந்தமகாவிஷ்ணுவும் அந்தபூமிபாரத்தை தீர்க்கிறேனென்று நம்மிலேஒருவராகவந்து அவதரித்திருக்கின்றார்ஆகையினாலே யேதோஒருவிபரீதம்விளையப்போகுது அதற்கேற்றப்போல நீயுஞ்சக்கிமுக்கிப்போடுகிறாய்வேண்டாம்மோசம்வரும்சொன்னேன் சொன்னேன்.

துரியோதனன்-விதுரனுக்குச்சொல்-விருத்தம்

பின்னையுநலமேயந்தப் பிரகாரநடக்குமானால், தின்னுஞ்சர்க்கரைபந்தல்மேல்தேன்மாரிபொழிந்தாப்போல்தான், கொள்ளிகும்பிடப்போனதெய்வம்குறுக்காகவந்தாற்போல்தான், துன்னிநானினைத்தகாரியஞ் சுறுக்காநடந்துவேனே.

வ-ம் ஆ-ஆ-ஆ-ஆ, பின்னையுஞ் சந்தோஷந்தான் அப்படியேநடக்குமானால் சர்க்கரைப்பந்தலில் தேன்மாரிபொழிந்தாப்போலுந்தான் ஆனால்நான்நினைத்தகாரியத்தை யெல்லாம் சுறுக்காகமுடிப்பேன்

துரியோதனன்-பிரிதிகாமியனுக்குச்சொல்-விருத்தம்

பிறிச்சதுயிதுதானப்பா பிரிதிகாமியனேவாடா
சரிச்சநீள்மரங்கள்போல சபையிலேநிற்பதாக
பறிச்சபாண்டவர்நின்று பகடையில்வைத்துதோற்ற
முறிச்சிறிக்கியைநீபோய்யென் முகத்துமுன்னிழுத்துவாடா

வசனம் அடா பிரிதிகாமியனே வாடா இங்கேபாண்டவர்கள் சபையிலேவைத்துதோற்றார்களே அந்தமுறிச்சிறிக்கியை இங்கேயிழுத்துக்கொண்டுவாடா

பிரிதிகாமியன்-துரியோதனனுக்குச்சொல்-கவி

கெற்பகமென்னு கற்புயமன்னு
பொற்புடன்சொன்ன சொற்படிசெய்வேன்

பிரிதிகாமியன் போய்திரும்பிவந்து துரியோதனனுக்குச் சொல் (கவி

இடம்பெறுமன்னு அடார்ன்னனக்கே
தொடர்தொருவழக்கு நடந்ததுகேளும்

வ-ம் அழைக்கபோனவிடத்திலே நடந்ததக்கேளுஞ்சுவாமி

துரியோதனன்-பிரிதிகாமியனுக்குச்சொல்-கவி

கன்னிமையிழுத்துக்கொண்டு முன்னமேவாவேசொன்னால்
அன்னியவழக்குண்டென்று என்னடாசும்மாவந்தாய்

வசனம் துரோபதையை இழுத்துக்கொண்டு வாச்சொன்னால் என்னடாவழக்கென்றுசொல்லவந்தாய்

பிரிதிகாமியன்-துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்

என்னைமுன்தோற்றபின்பு எழிலவர்தோர்த்திட்டாரோ
பின்னுமைவர்கள்தோற்று பிறகென்னைத்தோர்த்திடாரோ
முன்னமேஎன்னைத்தோர்த்தா மொழியுண்டுமுன்னேதோர் (த்தால்
அன்னீதமெனையழைக்கவடுக்குமோவாசாக்கென்றாள்

வ-ம், என்னைமுன்னேதோர்த்துபிறகு ஐந்துபேர்களுந் தோர்த்தார்களோ ஐந்துபேருந்தோர்த்து அதின்பிறகுஎன்னைதோர்த்தார்களோ அப்படியில்லை முன்னாடிஎன்னைத்தோர்த்தால்பேச்சுண்டு ஐந்துபேருந்தோர்க்கபிறகு என்னைத்தோர்த்தபடியினாலே அநியாயமல்லஅந்தச் சபையிலேயழைக்கிறது தருமமல்லவென்றுஅந்தம்மாள் சொல்லுகிறாள் சுவாமி



துரியோதனன். துற்சாதனன்.

துரியோதனன்-துற்சாதனனுக்குச்சொல்-விருத்தம்

கொம்பிலேகொம்புபட்டுக் குதிரைக்குமுளைத்ததென்றால்
நம்பும்பாண்டவரைப்போல நம்மையுமெண்ணுக்கொண்டா
தம்பிதுற்சாதனுவோர் தாண்டிலே நீபோயந்த (ள்
வம்பிதுரோபதையையிங்கே மயிர்பிடித்திழுத்துவாடா

வ-ம் அடாதம்பிதுற்சாதனு கேட்டையா அந்தசிறுக்கிகொண்டகியாபகம் முன்னேதோற்றவர்களென்றும் பின்னேதோற்றவர்களென்றும் ஒருவழக்குண்டாக்கினாள்குதிரைக்குக்கொம்பிலே கொம்புமுளைத்ததென்றுசொன்னால் தன்னுடையவெச்சக்காரர்கள் நம்புவார்களேஅப்படி நம்மையும்எண்ணுக்கொண்டாப்போயிருக்கிறது அவளைபோய் மயிர்பிடித்திழுத்துவாடாதம்பி

துற்சாதனன்-துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்

தாண்சண்ணிய மெண்ணமாட்டேன் தயையையுமெண்ணமாட்டேன், நாட்சென்றவைரமெல்லா நானிப்போதிர்த்துக்கொள்வேன், வரிட்சென்றமன்னரெல்லாம் மருவியகொலுவின்முன்னே; ஆட்சியாயக்கொண்டுவந்து சுருக்கினில்விடுவேனண்ணே

வ-ம், அண்ணுதாட்சண்ணியமுள்ளவர்கள் முகத்தைககூடபபார்க்கமாட்டேன் இந்தஅடியிலே அவளையிழுத்துக்கொண்டுவந்துவிடுகிறேன் பாரும் அண்ணே

துற்சாதனன்சொல்லிக்கொண்டுபோகிற-தரு

இராகம்-மோகனம்-மீசுரதாளம்

பல்லவி,

அப்படியவள்சொல்ல லாச்சா
எங்களடிமையாய்போன பேச்சா

அனுபல்லவி

தப்பிவிசிறுங்கியைத் தவிடாகக்கொழிக் கின்றேன்
தடுத்துச்சொன்னாய்வாயை பிடித்துக்கிழிக்கின்றேன் (அப)

சரணங்கள்

புலியைப்பூனைகள்வந்து வெல்லுமா-இவள்
பொங்கெல்லாமினியிங்கே செல்லுமா
நலியமயிர்பிடித்துநானேயிழுக் கிறேன்
ஞாயமெடுத்துச்சொன்னால்நாக்கை யறுக்கிறேன் (அ)
செத்தமாடுபுல்லைக் தின்னுமா-இவள்
சித்தாயினியிங்கே மின்னுமா-எந்தன்
சத்தங்கேட்டவுடன்வந்தாலேபார்க் கிறேன்
தடங்கல்சொனல்சக்கைசக்கையாய்பார்க் கிறேன் (அ)
பெண்பெண்ஜாதிக்கிந்த வார்த்தையா-ஓகோ
பிரிதிகாமியனே நீ பார்த்தையா

என்படுவேசியையிப்போதழைக் கிறேன்
இகலெடுத்துச்சொன்னால்சிகைபிடித்திழுக் கிறேன் (அ)

துச்சாதனன் துரோபதைக்குச் சொல் விருத்தம்

மதித்ததுரோபதையேநீதான் மானமுள்ளவளேயானால்
விதித்தநூற்றொருவரன்பு வேணுமென்றவளேயானால் (னர்
கொதித்தவென்னண்ணனுன்னைக் கொலுவினிலழைக்கச்சொன்
எதிர்த்தவுத்தரஞ்சொல்லாம லெழுந்திருந்தென்பின்வாராய்

வ-ம், கேளாய்துரோபதையே நீநல்லமானமுள்ளவளேயானால் எங்கள் நூறுபேர் தயவுவேணுமென்றவளேயானால் மறுவார்த்தை சொல்லாமல் எங்களண்ணன் கொலுவுக்குச் சீக்கிரமாகவா.

திரௌபதை-துச்சாதனனுக்குச்சொல்-கொச்சகம்

இராகம் புன்னாகவராளி.

மட்டுமருங்கு மரியாதையில்லாமல்
பொட்டெனவேவந்தழைத்த புத்தியில்லாமைத்துனரே
கொட்டமுடியுங்களண்ணன் சூழுஞ்சபையிலென்னை
இட்டுவரச்சொன்னவிதம் இன்னதென்றுசொல்வீரே

(வ-ம்) மருங்கு மரியாதையுமில்லாமல்வந்தழைத்தமைத்துனரேஇராஜ இராஜாக்களிருக்கப்பட்ட சபையில் உங்களண்ணனென்னை அழைத்துவரச் சொன்ன விபரம் இன்னதென்று தெரியச்சொல்லவேணும்மைத்துனரே.



துச்சாதனன். திரௌபதை.

துற்சாதனன்துரோபதைக்குச்சொல்-விருத்தம்

மன்னியதர்மபுத்திரன் வலியசூதாடியையோ
முன்னிலேநகரநாடு முழுதுமேதோற்றான்பின்னே
தன்னையுந்தோற்றான்தம்பி மாரையுந்தோற்றான்பின்னே
உன்னையுந்தோற்றானெல்லா மொடுங்கினான்வந்துபாராய்

(வ-ம்) என்னத்தைச் சொல்லுகிறது தர்மராசா ஒருஆட்டஞ் சொக்கட்டான் ஆடுவோமென்று சொன்னான் அது நமக்கு யோக்கியமல்லவென்று சொன்னோம் அப்படியல்லவென்று ஆடிநாடு நகர முதலானதுகளுந்தோற்றான் அப்பால் தம்பிமாரையுந்தோற்றான் பிறகு தன்னையுந் தோற்றான் ஏருங்கடைசியிலே உன்னையுந் தோற்றான் ஓடிபாடிஒடுங்கி உட்கார்ந்துக்கொண்டிருக்கிறான் அவர்களைவந்து பார்த்துவருவாய்வா

துரோபதை-துற்சாதனனுக்குச்சொல்-விருத்தம்

என்னையுஞ்சொக்கட்டானி லிசையவேவைத்துத்தோற்ற
மன்னவரெமக்குச்சொல்லி வரவழைத்திடுவாகண்டாய்
உன்னையார்கண்டாருங்க ளண்ணனையார்தான்கண்டார்
பின்னமாய்ப்பேசவேண்டாம் பேசாமல்நடந்திடாயே

வ-ம். என்னைச்சூதாடித்தோற்ற என்பிராணநாயகர் என்னைவரவழைப்பார் உன்னையார்கண்டார் உங்களண்ணனை யார்கண்டார் அதிகமாகப்பேசவேண்டாம்-நட-நட.

துற்சாதனன்-துரோபதைக்குச்சொல்-விருத்தம்

நடக்கத்தான்வந்தேனிந்த நாழிகைதனிலேயுன்னை
அடக்கத்தான்வந்தேனெங்க ளண்ணன்முன்கொண்டுபோயி
விடுக்கத்தான்வந்தேனந்த வேந்தர்கள்சபையில்வெட்கங்
கெடுக்கத்தான்வந்தேனந்த கெர்வமேயெழுந்துவாடி

வ-ம். நடக்கவா நடக்கவும் உன்கெர்வத்தை அடக்கவும் எங்களண்ணன்முன்னே கொண்டுபோய்விடுக்கவும் அந்தசபையில் உன்வெட்கத்தைக்கெடுக்கவுந்தான்வந்தேன் அரியாயோ யென்னை

துரோபதை-காந்தாரிக்குச்சொல்-விருத்தம்

மாமிநீபாராயுந்தன் மகன்செயுமனியாயத்தை
காமதமன்னர்சூழுஞ் சபைதனில்வரவேசொல்லி
காமிகள்போலேயெந்தன் கைப்பிடித்திழுக்கவாரான்
பூமியிலிதனைப்போலும் பொல்லாதகொடுமையுண்டோ

வ-ம். ஆ-மாமி இந்த அநீதமுண்டா அந்தராசசபைக்கு வரச்சொல்லி உன்மகன் கையைத்தொட்டிழுக்கவந்ததும்பார்த்தையாமாமி.

துற்சாதனன்சொல்-விருத்தம்

கொடுமையென்னலாத்தாய்நீங்கள் கொத்தடனெங்களுக்கு
அடிமையாய்ப்போனால்நாங்க ளாளாமல்விடுவதுண்டோ

கடுமையாயென் தாய்பின்போய் கட்டிக்கொண்டத்தினாலே
விடுவனோவுன்னைச் சும்மா மினுக்காதே நடந்துவாடி

வ-ம். கொடுமையென்னடி சும்மாகுலுக்கிறாய் நீங்கள் ஆண் பெண் அடங்கலும் எங்களுக்கு கொடுத்தடுமையாய்விட்டால்சும்மாவிடுவதுண்டா எங்களுடைய தாயைப்போய்க் கட்டிக்கொண்டத்தினாலே விட்டுப்போவேனா வாடிவா.

தரு-இ-ம-கண்டா-மீசுரதாளம்-கண்ணிகள்

| | |
|---|---|
| அய்யையோநானென்செய்வேன் | மாமி-இந்த |
| அனியாயந்தானுண்டோ | மாமி |
| செய்யும்வாறேது என் | மாமி-யெந்தன் |
| சிந்தைகலங்குதே | மாமி |
| தஞ்சமுநீயேயென் | மாமிபெற்ற |
| தயாரும்நீயேயென் | மாமி |
| வஞ்சனைசெய்யாதே | மாமி-யென் |
| மானங்காக்கவேணும் | மாமி-இவனைக் |
| கண்டவுடனேயென் | மாமி-யெந்தன் |
| கால்கள்நடுங்குதே | மாமி-உன் |
| அண்டையில்வந்தேனே | மாமி-யென்னை |
| ஆதரிக்கவேணும் | மாமி-நீ |
| காட்டிக்கொடாதேயென் | மாமி-யென்னைக் |
| காப்பாற்றவேணுமே | மாமி-உந்தன் |
| வீட்டினில்வந்தேனே | மாமி-என்னை |
| வெளியிலேதள்ளாதே | மாமி-நல்ல |
| பெண்ணாய்ப்பிறந்தாயே | மாமி-என்போற் |
| பெண்ணையும்பெற்றாயே | மாமி-இந்த |
| மண்ணாளும்வேந்தர்க்கு | மாமி-இது |
| மரியாதையோசொல்லு | மாமி-நானு |
| பிள்ளைகளைப்பெற்ற | மாமி-யென்னைப் |
| பேதகஞ்செய்யாதே | மாமி-யென்னைத் |
| தள்ளிவிட்டாலேயோ | மாமி-இவன் |
| தள்ளிக்கொண்டுபோவான் | மாமி-இப்போ |
| நம்பினேனுன்னையே | மாமி-யென்னை |
| நகைக்கப்பண்ணாதேயென் | மாமி-சும்மா |
| வெம்புதேயென்னுள்ளம் | மாமி-இந்த |
| வேளைக்காக்கவேணும் | மாமி |

காந்தாரி-துரோபதைக்குச்சொல்-விருத்தம்

காகங்கர்ரொன்றுலோடி கணவனைக்கட்டிக்கொண்டு
ஒகையாயழுதநீலி யுனையல்லால்வேறேயுண்டோ

வாகைமைத்துனன்மார்மற்று மாமன்மாருற்றார்பெற்றார்
ஏகமாய்நிறைசபைக்கு மேகவொண்ணாதோபோடி

வ-ம், அடி குடுப்பார்யென்னடி ஆம்பிடையானையறியாமல் ஆயிரம்பேருடனே போகிறவளொருத்தியாம் அவள்காகங்காரென்று கத்தினால் அங்ஙனேயோடி ஆம்பிடையானே அப்பாவென்று கட்டிக்கொள்ளுவாளாம் அவளோ நீ அதற்கென்ன மாமன் மைத்துனன் உற்றார்பெற்றார் இருக்கிறசபைக்கு போகிறதற்கு என்னடி போடிபோமாத்தாங்கி.

துற்சாதனன்-துரோபதைக்குச்சொல்-விருத்தம்.

பிழையுடன்றினமுமைந்து பேருடன்போறவேசி
தழையுறுமன்னர்கூடுஞ்-சபைக்குநீவரப்போகாதோ
குழையுறாய்க்குழைந்துசும்மா குலுக்கிறாய்செல்வங்கொஞ்சி
இழையுறாயென்னடியுன் னைத்துநானறிவேன்வாடி

வ-ம், அடி ஒருத்தரல்லவேஐந்துபேருடனேநாள்தோறும்இணங்கிகுளிர்விட்டுப்போன தாசிதானே நீ எங்களண்ணன்முன்னே வரலாகாதா குழைஞ்சிப்போகிறாயென்னடி நான்இங்க வித்தையெல்லாம் அறிவேன்வாடிவா.

துற்சாதனன்-துரோபதையைத்தொடவந்தபோது -துரோபதை

சொல்-வாது-தரு-சங்கராபரணம்-மீசுரதாளம்

துரோகியிதுவென்ன சொல்லடா-யென்னைத்
தொடவேண்டாம்நீதூர நில்லடா
துரோகியென்தர்ம துரைகளறிந்தாக்கால்
தாக்கிப்போட்டுச்சொன்னநாக்கை யறுப்பாரோ (து)

துற்சாதனன்சொல்லல்.

தொட்டிழுக்காமல்நான் போவேனோ-போனால்
துரியோதனன்தம்பி யாவனோ
பட்டியுன்பண்டவர் பரதேசியானாரோ
படிவாங்கிச்சோறுண்டடிமையாய்ப் போனாரோ (தொட்)

துரோபதை-சொல்லல்.

சககட்டமிங்கே படிக்கிறாய்-உந்தன்
சமர்த்தெல்லாஞ்சொல்லித் துடிக்கிறாய்
முக்காலுங்காக முழுகிக்குளித்தாலும்
கொக்காகுமோபோடா வக்காகுமோ அடா (துரோகி)

துற்சாதனன்-சொல்லல்

என்னடி என்னைமற் பேசுறாய்-உனக்
கேற்றபடியெல்லாம் வீசுறாய்

மன்னியுன்னிக்காலை பின்னிநாணிக்கொள்ள
சின்னபின்னமாக முன்னும்பின்னுமாக (தொட்)

துரோபதை- சொல்லல்

முழுதுமெண்ணுமல்நீ மலைக்கிறாய்-வெறி
முண்டைநாயைப்போலே குலைக்கிறாய்
கழுதைக்குபதேசங் காதிலேசொன்னாலும்
அவயக்குறலல்லாமலங்கில்லையென் சொல்லாய்( துரோகி

துற்சாதனன்-சொல்லல்

ஆட்டத்திலுனை வைத்துத் தோற்றாரோ-நீங்கள்
அடிமையாய்ப்போனதும் பார்த்தாரோ
ஆட்டிநீட்டிப்பூச்சிக்காட்டிச்சொல்லாதேயென்
விட்டுக்குச்சொந்தவெள் ளாட்டியாய்போனபின் (தொ

துற்சாதனன் துரோபதைமயிரைத்தொட்டபோது-துரோபதை
புலம்பல்—தரு-இ-ம்-கெண்டாமிசுராதாளம்

அய்யய்யோபாவிதெய்வமேயிந்த
வனியாயந்தானுண்டோ தெய்வமே அந்தன்
மன்னவர்கோதிமலர்சூடுங்கூந்தலை
மடையன்தொடலாமோ தெய்வமே அந்தன்
போர்வீரர்தொட்டுபுகழுமென்கூந்தலை
புலையன்தொடலாமோ தெய்வமே அந்தன்
கண்ணாளர்தொட்டுக் கலைக்குமென்கூந்தலை
கடையனுந்தொடலாமோ தெய்வமே-அந்த
முனைவீரர்கூடி முடிக்கின்றகூந்தலை
மூடன்தொடலாமே தெய்வமே-நல்ல
சுத்தவீரர்மலர் சூடுமென்கூந்தலை
துஷ்டன்தொடலாமே தெய்வமே-நல்ல
மல்லிகைசூடுமணக்கின்றகூந்தல்
மண்மேற்புரளுதே தெய்வமே-நல்ல
சம்பங்கியெண்ணெய்தடவியகூந்தல்
தரையிற்புரளுதே தெய்வமே-நல்ல
சிப்பிட்டுவாரித்திகழுமென்கூந்தல்
தெருவிற்புரளுதே தெய்வமே

துற்சாதனன்சொல்- விருத்தம்

பஞ்சவர்கையுன்மேற் பட்டமாத்திரத்திற் பொல்லா
வஞ்சகியுன்னுடம்பு மணக்குமோவளர்த்துபோமோ
மிஞ்சியென்கைப்பட்டாலுன் மேனிக்கெல்லாங்குலைந்துபோ
அஞ்சுடனாறுநட்டு மதற்கென்னவெழுந்துவாடி (போ

வ-ம் ஓ-ஓஎன்னடி உன்னுடையவெச்சக்காரனைந்துபேருடை யதைஉன்பேரிலேபட்டமாத்திரத்தில் மகாகமகமவென்று மணக்குமோபூரிக்குமோ மிஞ்சிஎன்கைபட்டால் உன்தேவடியாள்மினுக்கெல்லாஞ் சிந்திப்போமோயதற்கென்ன ஐந்துபேருடன் ஆறுவதா யிருக்கட்டும் எழுந்துவாடி.-வா

துரோபதைசொல்தரு-இராகம்-சங்கராபரணம்

பேசாதெல்லாம்பேசிப் பேய்போலத் துள்ளுறாய்
  பெண்டுகள்மெச்ச பெருமையைக் கொள்ளுறாய்
நீசனேநீதத்தி நிலத்தில் விழுகிறாய்
  நிந்தையென்றெண்ணாமல் நெருப்பில்விழுகிறாய்
போதகனோ துஷ்ட காதகனேகெட்ட
  சாதகனேருணபாதகனே அடா-சிச்சிபினத்தாதே
அடா-துஷ்டாசீச்சிபினத்தாதே

துற்சாதனன்சொல்-தரு

மெத்தமெத்தத்துள்ளி விழுகிறு யென்னடி
  மேல்வரம்மெண்ணாமல்பேசுறு யென்னடி
கற்றசமர்த்தெல்லாங் காட்டுறு யென்னடி
  கண்ணீருதிர்த்துக்கருரா யென்னடி
கத்துங்கள்ளிபோடியெத்துக்கள்ளியிந்திர
  சித்துக்கள்ளியடி வித்தைக்கள்ளிசும்மா-நடந்துவாடிவாடி
கொலுவுக்குநடந்துவாடிவாடி.

துரௌபதை-புலம்பல்-இராகம்-எதுகுலகாம்போதி

ஆதிதாளம்- கண்ணிகள்

ஐயையோபாவிதெய்வமேநானிந்த
  அவதிப்படவிட்டாயோ
ஐவர்க்குங்கைகொடுத்து அருமையாயிருந்தேனே
  அதற்கேயிப்படிசெய்தாய் தெய்வமே
மணவாளருடன்கூடிமகிழ்ச்சியாய்விளையாடி
  வலங்காரமாயிருந்தேனே தெய்வமே
வந்தவிடந்தனிலே இந்தவிதியெனக்கு
  வருமென்றுமறியேனே தெய்வமே

துற்சாதனன்சொல்- விருத்தம்

வந்திடுமிடத்திற்பொல்லா மாரீசக்கள்ளிபப்புச்
சிந்திப்போனதுதானென் சிணுங்கிநீயழுவதென்ன
முந்திவில்வளைத்தபோது முடிமன்னர்சபைக்குநீதான்
வந்ததுமில்லைபாசும்மா மசக்கிறுயெழுந்துவாடி.

வ-ம், வந்தவிடத்திலேயென்னடி பப்புசிந்துபோனது ஆதியிலேவில்வளைத்து மாலையிடுகிறபோது வந்தராசாக்களெல்லாம் வி

ழிர்த்தகண்சிமிட்டாமல் பார்க்கும்படியாய் அந்தாசச்சபையிலேகி ன்று அங்ஙனே திரும்பி அங்ஙனே முறிக்கி அங்ஙனே குலிக்கி அங் ஙனே மினுக்கினதேவடியாள் தானோநீ இப்போது மாமன்மார் மைத்துனன்மார்களிருக்கிற சபைக்குவருகிறதற்கு சும்மாமசக் கிறாய் எழுந்துவாடிவா

துரௌபதைசொல்-கண்ணி,

பத்தினிவாக்குப்பலியாமற் போகாது
பார்மன்னருக்கிந்த துற்புத்தியாகாது
சத்திவிழுந்தாற்றரையும் பொறுக்காது
தையலர்தீங்குக்குத்தெய்வம் வெறுக்காது
பட்டவனேகுறையிட்டவனேசிறை
விட்டவனேகடைகெட்டவனே அடா சீச்சிபிணத்தாதே

துற்சாதனன்சொல்-கண்ணி.

பத்தினிவாக்குநான்பார்க்கிறேன் வாவுந்தன்
பட்டிமிரட்டைமிரட்டாதே வாவுந்தன்
வித்தைகள்சொல்லிவிளக்காதே வாடிநீ
வெந்நீரிலேவீடுவேகாது வாசும்மா
பாசிக்கிறாயென்னைத் தூசிக்கிறாயடி
பூசிக்கிறாய்சும்மாரோஷிக்கிறாயடி-நடந்துவாடிகொலுவுக்

திரௌபதை-புலம்பல்-இ-ம்-கண்டா-ஆதிதாளம்-கண்ணிகள்.

கொழுகொம்பிருக்கும்போதேகொடுவிழுந்தலைந்தாற்போல்
குலையவிட்டாயோஅய்யோ தெய்வமே-எந்தன்
கொற்றமன்னவருக்கும் மற்றபெரியோருக்கும்
குறையென்னசெய்தேனோ தெய்வமே
ஒருதாயில்லாதவர்க்குபூரொல்லாந்தாயென்றசொல்
உண்மையெனக்கில்லையோ தெய்வமே
ஒருதுணையில்லாதவர்க்குத்திருவுளந்துணையென்றசொல்
உலகவார்த்தையும்பொய்யோ தெய்வமே

துற்சாதனன்சொல்-விருத்தம்.

கண்ணுக்குக்கலநீர்சிந்தி கதறியேயழுகின்றாநீ
ஒண்ணுக்குரெண்டுசொல்லி யுதாசினம்பேசுகின்றாய்
பெண்ணுக்குளுன்னைப்போல பிரட்டுளதிருட்டுநீலி
மண்ணுக்குள்கண்டதில்லை மாரீசம்போதும்வாடி

வ-ம். கண்ணுக்குக்கலநீர்சிந்தும்படியாயழுகிறாய்நான்ஒன்றை ச்சொன்னால் இரண்டாய்ச்சொல்லி எடுத்தெறிந்து போடுகிறாய் ஆ-ஆ-ஆ-ஓ-ஓ-ஓ-உன்னிடதிருட்டுமாரீசத்தனமும் இந்திரசித்து களும் இந்தவித்தைகளும் எங்கேகற்றாயடி எழுந்துவாடிவா

# சூது துகிலுரிதல்.

திரௌபதைசொல்-கண்ணி.

மயிரைப்பிடிக்கிறாய் மண்மேலிழுக்கிறாய்
வம்புகள்பேசியுன்வாயேன் புழுக்கிறாய்
உயிரைப்பறிக்கிறாய் ஒட்டாரங் காட்டுகிறாய்
ஒருக்காலாயேன்சும்மாவொடித்து முறிக்கிறாய்
ஓகோகெடுவாய் அய்யேகெடுவாய்
பிறகேகெடுலா இப்போகெடுவாய் அய்யையோபோடா
படுபாவிஉனக்கென்னபோங்காலமோபாவி

துற்சாதனன்சொல்-கண்ணி

விண்ணாணம்பேசிமினுக்கிறா யென்னடி
வேசிகள்போலேகுலுக்கிறா யென்னடி
ஒண்ணுணுலெட்டாய்முடியுறா யென்னடி
வோகோகோசும்மாநொடிக்கிறா யென்னடி
ஒட்டாதேயுன்சொல்சட்டாதேயென்சொல்
தட்டாதேசும்மாதிட்டாதேயடி
பேசாமல்நீவாடிகொலுவுக்குப்பேசாமல்நீவாடி

திரௌபதை-புலம்பல்-கரு-இ-ம்-கண்டா-சாப்புதாளம்

பல்லவி.

ஆவிதியே ஐயையோ விதியே

அநுபல்லவி.

பாவிநானென்னபாவஞ் செய்தேனோ-இந்த
பாவிகையிற்சிக்கிப்பரதவிப்பதும் ஆவிதி

சரணங்கள்.

ஆருக்குநானொருஅக்கிரமஞ் செய்தேனோவிதியேநான்
ஆனையடித்துவலங்கோலஞ்செய்தேனோவிதியே
பாரினில்இந்தப்பாடுபடவோ நான்
பஞ்சபாண்டவர்க்கு பாரியானதும் ஆவிதி

துற்சாதனன்சொல்-விருத்தம்.

தேவிகளானபேர்க்கு கிமையிலேகண்ணீ ரென்பார்
தலையிட்டழுமுனக்கு முடம்பெலாங்கண்ணீர்கண்டாய்
கோலங்கீழ்நுழையுமெந்தன் குணத்தையுமறிந்துயிந்திர
ஜாலஞ்செய்யாதேசும்மா தருக்காதேயெழுந்துவாடி

வ-ம். ஆ-ஆ தேவிக்கிகிமையிலேகண்ணீரென்று சொல்லுகிறது உனக்குஉள்ளங்கால் முதற்கொண்டுஉச்சந்தலைவரைக்குகண்ணீ ராலும்அந்ததேவியும் உனக்கிணையல்லசும்மாஅழுததினாலஉன்னை விட்டுப்போவேனோநீபாயின்கீழே நுழைகிறவளானால் நான்கோ லத்தின்கீழ் நுழைகிறவனென்றறியாயோடி வாடிவா.

துரௌபதைசொல்-கண்ணி.

பெண்ணுடன்கூடப்பிறந்தது மில்லையோ
பெண்சாதியைவைத்துவாழ்ந்தது மில்லையோ
தண்ணருள்சற்றுந்தயாளமு மில்லையோ
தாயார்வயிற்றிற்பிறந்தது மில்லையோ
பட்டவனேதுயரிட்டவனேமுறை
விட்டவனேகேடு கெட்டவனேஅடாபோடாபடுபாவி

துற்சாதனன்சொல்-கண்ணி.

மாட்டுக்காரப்பையல்போலெண்ணி பேசாதே
மாதங்கிநீசும்மாய் வீச்செல்லாம் வீசாதே
நீட்டியாட்டியுந்த நீட்டெல்லாங் காட்டாதே
நிமிஷம்போனால்மானம் நிலைநிற்க மாட்டாதே
தளுக்காதேபேய்போல் தளுங்காதேகொஞ்சிக்
குலுக்காதேமிஞ்சிப் பலுக்காதேயடி
பேசாமல்நீவாடி கொலுவுக்குப்பேசாமல்நீவாடி

துரோபதை-புலம்பல்.

ஆவிதியே-அய்யையோ-விதியே
என்போதும்பெண்களுக்கிடரென்னசெய்தேனோ விதியேஇது
எந்தன்தலையிலெழுதினப்படிதானோ விதியே
இன்பமாய்ப்பாஞ்சாலனென்றனைப்பெற்று
எடுத்துவளர்த்ததுமிதற்குதானோ (ஆவிதியே)
வல்லரவின்வாயில்தேரைபோலானேன் விதியேவேடன்
வலையிலகப்பட்ட மான்போலுமானேன் விதியே-இந்தப்
பொல்லாதகிர்மூடப்புலையன்கையிற்சிக்கிப்
புலம்பிப்புலம்பிசும்மாய்ப் புலம்பித்தவிப்பதும் (ஆவிதியே)

துற்சாதனன்சொல்விருத்தம்.

விதிநல்லவிதியேயானால் வில்வளைத்திட்டபோது
மதியிலென்னண்ணனுக்கு மணமாலைசூட்டிடாயோ
கெதியில்லாப்பாண்டவாளை கெதியென்றுநம்பிக்கெட்டால்
இதினுடன்போமோவின்ன மிருக்கின்றதனந்தம்வாடி.

வ-ம், ஆவிதியேஎன்னபிருங்குதடி எல்லாம்மதியினாலிருக்கின்றது ஆதியிலேவில்வளைத்து மாலைபிடுகிறபோது இந்தஅர்ச்சுனராஜனுக்குப்போட்டமாலையை எங்களண்ணனை துரியோதனமகாராஜனுக்குப்போட்டுவிட்டால் இத்தனைபாடெல்லாம் வராதேபாண்டவர்கள்பாண்டவர்களென்று பாண்டவாளைநம்பி கெட்டபடியினாலே இத்தனைபோச்சுதா இன்னம் அநேகமிருக்கின்றது எழுந்துவாடி.வா

துரௌபதைசொல்-கண்ணி,

பாண்டவராலேநீபட்டு பட்டுவிழுவாயென்
பாவமிடிந்துநீபாழாகவே போவாய்
மூண்டநரகத்தில்முழுகிக் கிடப்பாயுன்
மூர்க்கமெல்லாம்போயார்மேல் விடுவாசும்மா
அலக்காதேகொர்வம்நிலைக்காதேபேய்போல
மலைக்காதேநாய்போல் குலைக்காதே அடா
போடாபடுபாவி உனக்கென்னபோங்காலமோ பாவி

துற்சாதனன்சொல்-கண்ணி.

பாண்டவர்பேச்சுபகலே முடிந்தது
பழியெல்லாமுந்தன்தலைமேல் விடிந்தது
தாண்டியென்னுள்ளந்தணலா யெரியுது
சபையிலேநீவந்தாலெல்லாந் தெரியுது
வடிக்காதேவீங்கி துடிக்காதேகல்வி
நொடிக்காதேசொல்லித்துடிக்காதே அடி
நடந்துவாடிவா கொலுவுக்குநடந்துவாடிவாடி.

துரோபதை-புலம்பல்-இ-ம்-முகாரி-ஏகதாளம்-கண்ணிகள்.

ஓகோயிதென் கொடுமையோவையோ மன்னர்களே-ஒரு
கோதில்லாமன்னர்கள் நீதியிதுதானோ மன்னர்களே
வாகோயிதுவோமநுநீதியோவையோ மன்னர்கள்அபி
மானமுஞ்செங்கோல்நிதானமுமில்லையோ மன்னர்களே
பெண்களைப்பெற்ற பெரியோர்களில்லையோ மன்னர்களேஎன்னை
பேதகஞ்செய்தால்பெண் பாதகமல்லவோ மன்னர்களே-ஒரு
பெண்ணுடன்கூடப்பிறந்தவரில்லையோ மன்னர்களே-ஒரு
பெண்ணாகப்பாரினில்பிறந்ததுநான்தானோ மன்னர்களே
மனையாளுடன்கூடிவாழ்வாருமில்லையோ மன்னர்களே-பெண்
மானமற்றுவியார்க்கு மானமேயல்லவோ மன்னர்களே-இந்த
அநியாயம்போலவே யவனியிலுமுண்டோ மன்னர்களே-இது
அரசாட்சிசெய்யு மரசர்க்குத்தர்மமோ மன்னர்களே-எங்கள்
அய்யாதுரோணரோ அசுவத்தாமரோயென் ஐயமாரோ-இந்த
அநீதம்போலவேயவனியிலுமுண்டோ ஐயமாரோ-இந்த
பொய்யாதவேதம்புராணம்படித்தயென் ஐயமாரோ-இந்த
பொல்லாங்கைப்போலவேபூமியிலுமுண்டோஐயமாரோஎங்கள்
வையகம்போனாலும் வாழ்வெல்லாம்போனாலும் ஐயமாரோ-இந்த
மன்னர்சபையிலென் மானம்போகலாமோ ஐயமாரோ
மெய்யானமாமநுவிக்கியானந்தேர்ந்தயென் ஐயமாரோ-எந்தன்
மேலென்னகுற்றம் விளங்கக்கண்டீரோயென் ஐயமாரோ
பாரம்பரியம் பலவுந்தெரிந்தயென் பாட்டனாரோ-இந்தப்
பாவிகொடுமையை பார்த்திருக்கின்றீரோ பாட்டனாரோ

தாரமென்றில்லாமல்தள்ளிவிட்டீர்களே பாட்டனாரே-அந்த
தன்மையினால்தயைதாட்சண்ணியமில்லையோ பாட்டனாரே
பெண்களருமையறியாமலிருக்கின்ற பாட்டனாரே-உங்க
ளன்பில்லாப்போனாலுபெண்பாவம்போகுமோபாட்டனாரேஇங்
அரவக்கொடியோனுரைத்திடும்வார்த்தைக்கும் பாட்டனாரே-நீ
யுடன்பட்டிருக்கவுன்னுள்ளங்குளிர்ந்ததோ பாட்டனாரே
ஆதரவாகயழைத்துவந்தீரேயென் மாமனாரே-எந்த
அபிமானம்போக வலையவிட்டீரேயென் மாமனாரே
மாதாபிதாகுருநீயென்றிருந்தேனே மாமனாரே-என்னை
மன்னர்சபையில்வரவழைத்தீரேயென் மாமனாரே
குருகுலமன்னர்குலமுறைகண்டயென் மாமனாரே-யுங்கள்
குலத்தினிலிந்தக் கொடுமையடுக்குமோ மாமனாரே
பெரியோரிருந்தும்பிழைகளைச்செய்தாரென் மாமனாரே-மழை
பெய்யுமோவையகமுய்யுமோதையையோ மாமனாரே

பொது-விருத்தம்-இ-ம்தோடி.

கொஞ்சமுமிரக்கமில்லாக் கொற்றவன்சபையிலுள்ள
தஞ்சமென்பவரில்லாமல் தரையில்வீழ்ந்தழுதுபாஞ்சாலி
கஞ்சமென்முகங்கள்வாடி கைகட்டியெதிரேநிற்கும்
பஞ்சபாண்டவரைப்பார்த்துப் பதறுவாள்கதறுவாளே

வ-ம், அகோதெப்படியென்றால் தயைதாட்சண்ணியம் ஈவுஇரக்கம்யாதுமில்லாத துரியோதனன்சபையிலே துரோபதைபிரண்டழுதுபாண்டவர்களைப்பார்த்து தெய்வத்தை நினைத்துப்புலம்புகிறவிதங்காண்க.

துரோபதை-புலம்பல்-இ-ம்-காம்போதி-ஆதிதாளம் - கண்ணிகள்

என்னசெய்வேனினி எப்படியாறுவேன் தெய்வமே-ஓகோ
என்பிராணநாதருக்கிப்படிவந்ததோ தெய்வமே-ஒரு
துஞ்சியவஞ்சகதுரோகமறியோமே தெய்வமே-ஓதர்ம
துரைகளுக்கித்தனை துன்பம்வரலாமோ தெய்வமே-ஓஐயே
சத்தியமில்லையோதர்மமுமில்லையோ தெய்வமே-ஓநிறை
சத்தியமும்நல்ல தர்மமும்பொய்த்ததோ தெய்வமேஓநல்ல
புத்திநெறியில்லாப் புல்லர்க்குக்காலமோ தெய்வமே-ஓஅந்த
புல்லர்நடத்தைக்குப்பூமிபொறுக்குமோதெய்வமே-என்னை

பாண்டவர்களைப்பார்த்து-புலம்பல்.

சின்னவயதினில்தேடிமாலையிட்டீர் பாவிகளா-இப்போ
தெருவிலலையத்திகைக்கவிட்டீர்களே பாவிகளா-என்னை
கன்னிவயதிற்கலியாணஞ்செய்தீரே பாவிகளா-யின்று
காட்டிக்கொடுத்துக்கடக்கப்போய்நின்றீரேபாவிகளா-என்னை

வர்ணக்கிளிபோலேவைத்திருந்தீர்களே பாவிகளா-எந்தன்
மானங்குலையமரம்போலேநின்றீரோ பாவிகளா-ஒரு
வர்ணக்கிளிக்குப்பால் வார்த்துவளர்த்தீரோ பாவிகளாபூனை
வாய்க்கிரைகொடுத்தாப்போலாக்கிவிட்டீரோ பாவிகளாஉங்கள்
வீரங்குலைந்ததோ வில்லுமுறிந்ததோ பாவிகளா-அந்த
மெய்கெட்டவேந்தன்முன் கைகட்டிநின்றீரோ பாவிகளாநல்ல
தாரத்தைவைத்துச்சபையிலேதோர்த்தாலும் பாவிகளாஉங்கள்
தாஷ்டீகவீரத்தனத்தையிந்தோர்த்தீரோ பாவிகளா தங்கள்
ஆதீனமெல்லாஞ்சூதாடிப்பறித்தாலும் பாவிகளா உங்கள்
ஆண்மையைக்கூட அடித்துப்பறித்தாரோ பாவிகளா இப்போ
நீதிநிலமை நிசமும்பொய்யாச்சுதோ பாவிகளா இந்த
நீசர்க்குக்கைகட்டிப்பேசவும்வாச்சுதே பாவிகளா



தர்மா. பீமன்.

பீமன் தர்மருக்குச்சொல் விருத்தம்.

சேயிழைதனை பிழைத்து திகழ்சபைதனிலேவிட்ட
தீயவனுசசனையென்கை தெண்டாயுதத்தினாலே

வாயினைபிளந்துகொத்தி மணிக்குடலெடுத்துமண்டை
ஆயிரஞ்சுக்கலாகவடிக்கிறேன்பாராயண்ணே

வ-ம். கேளுமண்ணைநம்முடையமனையாளான துரோபதை யைஇந்தராஜசபையில் பங்கப்படுத்திச்சபையினில் வரும்படியா கச்செய்தவனையும் இட்டுக்கொண்டுவந்தவனையும் வாயைப்பிள ந்துமணிக்குடலெடுத்து அவர்கள்மண்டையை ஆயிரஞ்சுக்கலாக இதோஅடிக்கிறேன்நீர்சும்மாயிரும அண்ணாவே.

அர்ச்சுனன் தர்மருக்குச்சொல் விருத்தம்.

மானமில்லாமலிந்த மாதினையிழுத்துவந்த
ஈனரையென்கையம்பா லிட்சணத்திநிமேலதானே
கானகந்திப்பட்டாற்போற் கடிந்துநீர்த்தூளியாக
நானிதோவடிக்கிறேன்பார் தடங்கல்சொல்லாதே யண்ணே

வ-ம், கேளுமென்னண்ணாவேநம்முடையமனையாளானதுரோ பதையை இந்தராஜசபைக்கு வரும்படியாய்ச்செய்த துஷ்டரை செங்காடு தீப்பட்டாப்போலே நீர்த்தூளிபடலமாக இதோஅடி க்கிறேன்நீர்தடங்கல் சொல்லாதேஅண்ணாவே.

தர்மர்-தம்பிமாருக்குச்சொல்-விருத்தம.

சினத்தமன்னவர்கள்வாழ்வுஞ் செல்வமுஞ்சிலதுகாலம்
குனித்தியதுன்பம்வந்து குறைவதுசிலதுகாலம்
அனித்தியகாலம்வந்தா லடியோடேபோகுங்கண்டாய்
இனித்தியதம்பிமாரே யின்னமும்பொறுங்களப்பா

வ-ம். கேளுங்கள்தம்பிமார்களே ராசாக்களுடையசெல்வமும் செருக்கும்ஓடுகிறதுசிலதுகாலம் ஒடுங்குகிறதுசிலதுகாலம்அது களுக்குஅனித்தியகாலம் சம்பவித்தால் அடியோடேபோய்விடும் இன்னமும்பொறுங்களப்பா

துற்சாதனன் துரோபதையைப்பார்த்துச்சொல் விருத்தம்.

மைச்சினர்மாமனூர்கல் மாதவமுனிவருந்தன்
வெச்சக்காரர்களாமைவர் மேவியசபையில்நிற்க
அச்சமென்னடியுனக்கு வழுகிறுயொழுகிப்போறுய்
கைச்சனிவேசியர்க்குக் கண்ணீர்க்குக்குறைச்சலுண்டோ

வ-ம். அடிமைச்சினன்மார் மாமன்மார்குருக்கள்மார்உன்வெ ச்சக்காரர்கள்ஐந்துபேரும்இவர்கள்தானே இச்சபையிலிருக்கி றார்கள்இங்கேஉன்னையிட்டுக்கொண்டுவந்ததில்உன்மானத்துக்கு குறைவுவந்துவிட்டதா என்னடிசும்மா அழுதழுது ஒழுகிப்போ றுய் கைகண்டதாசிக்குக் கண்ணீரில் குறைச்சலா யில்லடியில்

விகர்ணன்சொல்-விருத்தம்

பண்ணூற்றும்பாவைதன்னைப் பங்கமாய்ப்பேசக்கேட்டு
பெண்ணூற்றுந்தெரிந்தோரெல்லாம் பேசாமலிருக்கலுற்றீர்

தொண்ணூற்றொன்பதுபேர்பின்னைதோன்றியவிகர்ணன்சொ
ல்லு, என்னூற்றும்வார்த்தையுங்கட் கேற்குமோயேத்திடாதே

வ-ம். கேளும் ராசாக்களே மகா பதிவிரதையான துரோபதை
யைஇந்தச்சபையிலே பங்கமாய்ச்சொல்லஅதைக்கேட்டு எல்லா
ந்தெரிந்தபெரியோர்கள்யாவரும் ஊமைகள்போலேவாயை மூடி
க்கொண்டு சும்மாயிருக்கிறீர்களே துரியோதனன் முதலாகியதொ
ண்ணூற்றொன்பதுபேருக்கு பின்பிறந்த விகர்ணனாகிய ஒருசிறு
வனான நான்சொல்லும் வார்த்தைஉங்கள்செவிக்கு ஏற்குமோ ஏ
ற்காது ஆகிலுஞ்சொல்லுகிறேன் கேளுங்கள்

இதுவும்-விகர்ணன்சொல்-விருத்தம்

ஐந்துபேர்தமக்கோமான மனைவர்க்குமில்லையாமானம்
இஞ்சொல்சேர்மனையாளென்ப தெல்லோர்க்குமுண்டுகண்டா
மிஞ்சிசல்லருந்ததிக்கு மிருந்தகற்புடையாள்தன்னை (ய்
கொஞ்சமாய்சொல்லும்வார்த்தை கொற்றவர்க்கடுத்திடாதே

வ-ம், கேளுங்கள்மகாசபையோர்களே அந்தபாண்டவர்கள்ஐந்
துபேருக்குந்தானுமானம் இந்தமானம்அனைவர்க்குமில்லையா அவ
னவன்பெண்சாதியைவைத்துவாழ்கிறவனேயல்லாமல் வேறல்ல
வேஅந்த அருந்ததிக்குச்சமானமானமகாபதிவிரதையானதிரௌ
பதையைஇந்தராஜசபையிலேவேசியென்றும்தாசியென்றும்பேசு
கிறதுராசாக்களுக்கு தர்ம்மமாநீதியா ஐயையோஎன்னபாவம்

திரௌபதைசொல்-விருத்தம்

துன்னியசபையிலுள்ள தொழும்பெரியோரேபோற்றி
என்னைமுன்தோற்றபின்பு யெழிலவர்தோர்த்திட்டாரோ
மன்னவர்முன்னேதோர்த்துமற்றென்னைதோர்த்திட்டாரோ
நன்னிலைகண்டோர்கள் ஞாயமாய்ப்பேசுவீரோ

வ-ம், கேளுங்கள் இந்தசபையிலுள்ள புண்ணியவான்களேபா
ண்டவர்கள் முன்னேதோர்த்து பிறகு என்னைத்தோர்த்தார்களோ
என்னைமுன்தோர்த்துயைந்துபேருந்தோர்த்தார்களா இதிலே க
ண்ணிற்கண்டதைநியாயம்பேசவேணும் பெரியோர்களே

விகர்ணன்சொல்- விருத்தம்

நிலத்திலிற்சூரியோரான நெடிமுடியைவர்தேவி
சலக்கமுற்றழுது விம்மிக் கதறியேபுலம்பிக்கேட்டாள்
நலத்தினில்மிகுந்தநீதி ஞாயத்தைதெரிந்தநல்ல
குலத்திலிற்பிறந்தோரானூற் கூசாமற்பேசிடாரோ

வ-ம், இந்தகடல்சூழ்ந்தபூமிக்கெல்லாம் அதிபதியான பாண்ட
வர்களுக்கு அபிஷேகபத்தினியான திரௌபதையானவள்இந்தச
பையில்முறையிட்டு அலரிவிம்மி அழுதநியாயத்தைக்கேட்டால்
நீங்கள்சத்தியந்தவறாத சன்னிதம் நியாயமுள்ளவர்களானல்

நற்குலத்தில்பிறந்தவர்களானால் எதார்த்தத்தைப்பேசலா சபையோர்களே

இதுவும்-விகர்ணன்சொல்-விருத்தம்

நன்னுங்கற்புடையாளுங்கே நடந்ததைக்கேட்டாலெங்கள்
அண்ணன்றன்முகத்துக்கஞ்சி பன்னீதஞ்சொல்லப்போறீர்
மண்ணின்மேல்நின்றுபெண்ணின் வழக்கோரஞ்சொல்லாகாது
கண்ணிற்கண்டதனை யெள்ளுக்காய்பிளந்தாற்போற்சொல்வீர்

வ-ம், அந்தமகாபதிவிரதையான திரௌபதை முறையிட்டு இந்தச்சபையில் நடந்தகாரியத்தை எதார்த்தமாய் சொல்லச் சொன்னால்எங்களண்ணன் துரியோதனமகாராசன் முகத்துக்கஞ்சிஅசத்தியமாகச்சொல்லப் போகிறீர்கள் மண்ணின்மேல்நின்று வழக்கோரஞ் சொல்லலாகாதுகண்ணில்கண்டதை எள்ளுக்காய்பிளந்தாற்போல் சொல்லும் பெரியோர்களே.

சகுனிவிகர்ணனுக்குச்சொல்-விருத்தம்

கிரிகைகெட்டவனே நூற்றைக் கெடுத்ததுகுறுணியென்று
துரையுடனுலகந்தனனிற் சொல்லுவாரதனைப்போலே (ம்
விரல்மிகுநூறுபேரில் விஷத்தைபோல்நீயொருத்தன்
குறைசெய்யப்பிறந்தபோதே குலமினிவிளங்குமப்பா

வ-ம் கேளாய் என்இளைய மருமகனானவிகர்ணனே நூற்றைக் கெடுக்கிறது குறுணியென்று உலகத்தில்சொல்லுவார்கள் அதுபோலநூறுபேரிலே நீயொருத்த இந்தக்குலத்தைக்கெடுக்கப்பிறந்தாய் உன்னால்உங்களண்ணன்பேர்நன்றாய்விளங்கும்.

விகர்ணன்சொல்-விருத்தம

பார்புகழ்தர்மராசன் படைத்தவெப்பொருளுந்தோற்று
சார்புதம்பியரைத்தோற்று தன்னையுந்தோர்த்துவிட்டு
சோர்வுகொண்டொருவருக்குத்தொண்டனாய்ப்போனபின்பு
தார்குழலிவளைத்தோற்கத் தகாதென்றுசொல்லொணாதோ.

(வ-ம்) கேளுங்கள் ராசாக்களே இந்த திரௌபதைதன்னைத் தோர்த்தபிறகு ஐந்துபேருந்தோர்த்தார்களா அல்லதுஐந்துபேருந்தோர்த்தபிறகு தன்னைத்தோர்த்தார்களாவென்றுகேட்டால் பேசாமலிருப்பது தருமமா தருமராசன் தன்னுடையநாடுநகரங்களெல்லாம்முன்னேதோத்தபிறகு தம்பிமாரையுந்தோற்றான்பின்புதானுந்தோற்றுஅடிமையாய்ப்போனான் ஒருவருக்கு அடிமையாய்ப்போனவன் இந்ததிரோபதையைவைத்து ஆடுகிறதுதருமமல்ல திரௌபதையைத் தோத்ததில் ஜெயமல்லவென்றுசொல்லுங்கள்சபையிலுள்ள பெரியோர்களே.

விதுரன்சொல்-விருத்தம்

நரைத்தென்னவயதுசென்றுநாட்படவிருந்தாலென்ன
தரித்திடுஞ்சாஸ்திரங்கள் சதைகோடிகற்றாலென்ன
பெருத்திடுஞ்சிறியோரேனும் புத்தியுள்ளவனேதக்கோன்
இருந்தவிகர்னன்வார்த்தை விகிதந்தான்மெய்யேமெய்யே

வ-ம் நாம்நரைத்துப்போனதினாலென்ன நாட்படஇருந்துதானென்ன அனேகஞ்சாஸ்திரங்கள் படித்துதானென்னசிறுபிள்ளைகளானாலும் புத்தியுள்ளவனே பெரியவன் இந்தவிகர்னன்சொன்னவார்த்தையேசரிநன்றாய்ச்சொன்னான்.

கர்னன்-விகர்னனுக்குச்சொல்-விருத்தம்

ஒஞ்சரிவழக்குச்சொல்ல வுன்னையாரழைத்தாரிங்கே
நெஞ்சொடுநீதிசாஸ்திரம் நீதானாகற்றுக்கொண்டாய்
கஞ்சிமேலவடிக்கக்கற்றாய் கற்றாப்போல்பேசலுற்றாய்
பிஞ்சிமேலபழுத்துப்போனாய் பேசாதேநீவிகர்ணா

வ-ம் ஓய்தம்பி விகர்ணா ஒருதலைவழக்குப்பேசவேண்டாம்உன்னை அழைக்கவில்லை தருமசாஸ்திரமெல்லாம் நீதானாபடித்துக்கொண்டாய் சபையிலுன்னைவிடபெரியவர்களில்லையா வடித்தகஞ்சியிலேவடிக்கவும் கல்லாமைகற்றுபேசவும்பிஞ்சிலே பழுத்தவன்னீயொருத்தன்புறப்பட்டாய் பேசாமல் சும்மாயிருவிகர்ணா.

இதுவும்-கர்னன்-சபையிலுள்ளவர்களுக்குச்சொல்-விருத்தம்

தெரியாமல்சிறுவிகர்னன் செப்பியவார்த்தைதன்னை (போ
பெரியோரென்றுரைத்தீர்நல்ல பெரியோருங்களைப்போலுண்
சரிதானாவழக்கிலுள்ள சங்கற்பந்தெரிந்திட்டீரா (போ
வரிவாகஇதோநான்கேட்கும் வார்த்தைக்குத்திரஞ்சொல்வீ

வ-ம், கேளுங்கள் ராசாக்களே அறியாதபிள்ளை இந்தவிகர்ணன் இவன்வெகுஞாயத்தை சொன்னானென்று அவனைமெச்சிகொண்டபோதேஇவனைவிட நீங்கள்யோக்கியர்தான் ஆ-ஆ இந்தவழக்கிலுள்ள சூட்சத்தைத்தெரிந்துக்கொண்டீர்களா இதோநான் கேழ்க்கிறகேள்விக்கு உத்திரவுசொல்லுங்கள்பார்ப்போம்.

இதுவும்-கர்னன்சொல்-விருத்தம்

தனக்குள்ளபொருளுந்தம்பி மாதையுந்தனையுந்தோற்றான்
புனக்கிளியவர்படைக்க[illegible]பொருளல்லால்வேறேயுண்டோ
குனிக்கவோர்மரத்தைநா[illegible]க் குறித்தாடிகெலித்துக்கொண்
கனக்கவேதழைபூபிஞ்சு[illegible]காய்பழம்வேறோசொல்வீர் (டால்

(வ-ம) கேளுங்கள் இச்ச[illegible]யில் வந்திருக்கும் உரியவர்களாகிய பெரியவர்களே தனக்கு[illegible]ளபொருள்களெல்லாந் தோற்றுதம்பிமாரையுந்தோற்றுப்போ[illegible]தல் இந்தஸ்திரீயை அவர்களுக்குட்பட்ட பொருளேயல்லா[illegible]மற்படிக்கு வேறுண்டோ நல்லது ஒ

ருமாத்தைக்குறித்து சூதாடிகெலித்துக்கொண்டால் அதில்தழை வேறு பூவேறுபிஞ்சுவேறு காய்வேறுகனிவேறு பளாபளாநன்று ய்ச்சொன்னீர்கள்

விகர்னன்சொல்-ஆசிரியவிருத்தம்

தடைக்கஞ்சாப்பாம்புக்கோராணையில்லை
சாந்தமில்லாமூர்க்கருக்கோதருமமில்லை
மடைக்கஞ்சாவெள்ளமதைமறிப்பாரில்லை
மனம்போனபோக்குக்கோர் வழியொன்றில்லை
புடைக்கஞ்சாவுங்களுக்குப்புத்தியில்லை
பூவைகண்ணீர்விருதாவிற்போவதில்லை
சடைக்கஞ்சாக்குடியனைப்போல் சேர்ந்திரிக்தச்
சமஸ்தானத்தைகெடுக்கத்தலைப்பட்டீரோ

(வ-ம்) தடைக்கஞ்சாபாம்புக்கு ஆணையில்லைசாந்தமில்லா மூர்க்கருக்குத் தருமசிந்தையில்லை அணைகடந்த வெள்ளத்தை மறிப்பாரில்லை மனம்போனபோக்குக்குவழியேயில்லை பழிக்கஞ்சா உங்களுக்குப் புத்தியில்லை இந்தபதிவிரதை கண்ணீர்பாழுதாய்ப்போறதில்லை கெஞ்சாகுடியனைப்போல நீங்கள் இரண்டொருவர்சேர்ந்து இந்தசமஸ்தானத்தைக் கெடுக்கக் கங்கணங்கட்டிக்கொண்டு யிருக்கிறீர்கள்.

கர்னன்-விகர்னனுக்குச்சொல்-விருத்தம்

என்னடாவிகர்ணநீதானிறைசபைதனிலேநின்று
நன்றிசேர்சமர்த்தனென்று நல்லுரைபகர்ந்திட்டாய்நீ
துன்னலர்மாலைமார்பன் துரியோதனமகாராசன்
மின்னிடைவிழியாள்தன்னை விட்டிடான்கண்டிடாயோ

(வ-ம்) ஆனால்கேளடா விகர்ண நீயென்னசொன்னாலும் துரியோதன மகாராசன் திரௌபதையை விடப்போகிறதில்லை சும்மாயிரு விகர்ண.

துரியோதனன்-துற்சாதனனுக்குச்சொல்-விருத்தம்

இத்தனைப்பேச்சென்னடாவடாதம்பி
யெழில்துற்சாதனப்புலியேயென்சொற்கேளாய்
மெத்தபுத்திசாலியிந்தவிகர்னனென்றும்
மென்மேலுந்தலையசைத்தவேந்தர்முன்னே
பித்தனென்னும்பாண்டவர்கள்துகில்முன்வாங்கி
பேதித்தபடுவழக்குப்பேசுமிந்த
சித்தினியையெதிர்நிறுத்திமானபங்கஞ்
செய்திடவேயிவள்துகிலை யுரிந்திடாயே

வ-ம் அடாதம்பி துற்சாதனா-இங்கேவாஅந்தவிகர்னன் மெத்த புத்திசாலியென்று மெச்சிக்கொண்டார்களே இந்தஇராசாக்களி

வர்கள் பார்க்கும்படியாய் அந்தபாண்டவர்களைந்துபேருடையவ
ஸ்திரத்தை முன்னேவாங்கிக்கொண்டு இப்போது எதிர்வழக்குப்
பேசவந்தாளே இவளைநிறுத்திஅவள்சேலைஉரியடாதம்பி

விதுரன்-துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்

பன்னியவிகர்னன்சொல்லை பழுதென்றதறியாகேளாய்
என்னமோகெடுதிகால மிசைந்ததுஉங்களுக்கு
கன்னியைப்பங்கஞ்செய்யக் கருத்தினில்நினைத்தபோது
மன்னுமுன்குடிக்குத்தீங்கு வந்ததுவந்ததப்பா

வ-ம். அடாதுரியோதனா உனக்குஎன்னமோ பொல்லாதகாலஞ்சம்பவித்தது அந்தமகாபத்தினியான துரோபதையை மானபங்கம்செய்யவேண்டுமென்று எப்போதுநினைத்தாயோஅப்போதே உன்குடிக்கு அனர்த்தகாலம்வந்தது சொன்னேன்சொன்னேன் துரியோதனா.

விதுரன்-கர்னனுக்குச்சொல்-விருத்தம்.

தண்படுமுலககங்காக்குந் தார்மன்னரிடத்திருந்து
புண்படுங்கோலைப்போலப் புகல்கின்றகர்னாநீதான்
எண்படுநூல்கடேர்ந்து மிழுவழக்குறைக்கலுற்றால்
பெண்பழிதேடிக்கொண்டோ பெரியவனாகப்போறாய்

வ-ம். கேளுங்கர்னா தர்மசாஸ்திரமெல்லாம்பார்த்திருக்கும் ராஜாக்களிடத்திலிருந்தும் புண்ணில்கோலிட்டாப்போல் இழிவழக்குப்பேசுகிறாய் பெண்ணைப்பார்த்தால் பேயுமிரங்குமென்பார்கள் அவ்வளவுமில்லாமல்ஒருபெண்பிள்ளையின்பேரில் உன்பிரதாபமெல்லாங்காட்டுகிறாய் இதனாலேயாபெரியவனாகப்போகிறாய்.

கர்னன்-விதுரனுக்குச்சொல்-விருத்தம்.

பெரியோரைத்துணைக்கொள்ளென்று பேசினபடியேநீங்கள்
உரியோரொன்றிங்கேசேர்ந்து உதவியில்லாமற்போச்சு
பிரியவுட்சுவரிருக்கப் புறஞ்சுவர்பூசப்பட்ட
சரியானபெரியோர்நீதான் சபாசுநன்றாகச்சொன்னீர்.

வ-ம். கேளும்விதுரமகாராசனே பெரியோரைத்துணைக்கொள்ளென்றல்லவா வேதஞ்சொல்லுகிறது அப்படிநீங்கள்பெரியோர்களென்றும்உங்களைச் சேர்ந்ததற்குஒருஉதவியுமில்லாமற்போச்சுது அதிலேயும் உட்சுவரிருக்கப் புறஞ்சுவர் இத்தப்புறப்பட்டீர் சரிதான் பெரியவர்தான்.

விதுரன்-கர்னனுக்குச்சொல்-விருத்தம்.

பொய்சாட்சிசொன்னவருஞ் சபையிலொரு
தலைவழக்காய்ப் புகன்றபேரும்
பைசாசமாம்நரகில் வீழ்வரென்று
நான்முறைடைப்பறக்க[illegible]த்தாய்
மெய்சாந்தவிகர்னனையு மெடுத்தெறிந்தா

யளவிலாவிகாதஞ்சொன்னாய்
பொய்சாரும்வழக்குரைத்தாய்
துரியனறிவையுங்கொடுத்தாய் புகழ்கர்ண,

வ-ம். கேளும்கர்ண பொய்சாட்சி சொன்னவரும்சபையிலொருதலைவழக்காகப் போனவனுமநரகத்திலடைவார்களென்று சொல்லப்பட்ட தருமசாஸ்திரத்தைத் தள்ளிப்[illegible] ர்ணன்சொல்லும வார்த்தையுமெடுத்தெறிந்துபோட்டாய் [illegible] ரியோதனன்புத்தியையும்கெடுத்தாய் இப்படிப்பட்ட துர்நடத்தையினாலேயா நல்லவனாகப்போகிறாய் கர்ண.

துரியன்-விதுரனுக்குச்சொல்-விருத்தம்.

நல்லதுசிற்றப்பாவுன் ஞாயத்தைநிறுத்திவையும்
எல்லையில்கர்ணன்சொல்லுமென்சொல்லுமுனக்கொவ்வாது
வல்லதுற்சாதனாகேள் வலியவெம்புலிபோற்பற்றி
சொல்லுமிங்கிவளுடுத்துந் துகிலைநீயுரிந்திடாயே

வ-ம். கேளுஞ்சிற்றப்பா கர்ணன்சொல்லும் என்சொல்லுமுன்செவிக்கேறகப்போகுதா உன்னுடையநியாயம் அங்கேயிருக்கட்டும்அடாதுற்சாதனா இவளுடுத்திருக்குஞ் சேலையைஉரியடாயென்று முன்னேதான்சொன்னேனே இன்னமுந்தாமஸமாதம்பிதுற்சாதனா.

துற்சாதனன்-துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்.

உரிந்திடுஞ்சேலையென்றே யுரைத்தவென்னண்ணாகேளீர்
பரிந்துநீசொல்லுமுன்னே பதைக்குதேயென்றன்கைகால்
தெரிந்திடசபையிலுள்ளோர் சிரித்திடவைவர்நெஞ்சங்
கரிந்திடவிவள்தன்சேலை கடுகெனவுரிவேன்பாராய்

வ-ம். கேளும்என்னண்ணாவே நீசொல்லுகிறதற்குமுன் என்கைகாலும்பதைக்குது அப்படியேஉரித்து போடுகிறேன்பாரும்.

துரோபதையைத்துற்சாதனன்மேடையின்மேல்இழுக்கிறகண்ணி

பாங்காயென்னண்ணனைப் பார்த்துநகைத்தவுன்
ஆங்காரமிப்போ அறிகிறேன்வாடி
தாங்காமலிந்தசபையிலேநீகெட்ட
தீங்காம்வழக்கைநான் தீர்க்கிறேன்வாடி
வேணமட்டுஞ்சும்மாய் வீம்புபேசுமுந்தன்
ஆணவமிங்கே அடக்கிறேன்வாடி
நாணயமாகவுன் நகைகளெல்லாங்
காணவேயெல்லோர்க்குங் காட்டுறேன்வாடி

துரௌபதை-மேடையின்மேல் போகிறபோது
சொல்விருத்தம்-இ-ம்-முகாரி.

பெரியோரில்லையோபெண்களையும் பெற்றோரில்லையோமானமுள்ள
உரியோரில்லையோவெந்தனுக்கிங் கொருதிக்கில்லையோநீதிசொல்ல

அரியேயில்லையோவொருவருக்கு மருளேயில்லையோயாதொன் றுந்
தெரியாவேழையென்பங்கில் தெய்வமில்லையோஓவிதியே

வ-ம். அரி-அரி வைகுந்தவாசா முகுந்தா அன்பரைக்காக்கும் கோவிந்தா இந்தமகாசபையினில் மநுவிக்கியானந்தெரிந்தபெரியவர்களில்லையா என்போலும்பெண்களைப்பெற்றோரில்லையா மானமுடையசுற்றத்தாரில்லையா நன்மைதீமையென்னும்நீதிமொழிகளைச்சொல்லும்படியான அறிதாகிய கனவான்களில்லையாஒருவருக்காவது அருளில்லையா ஏதுந்தெரியாதஏழையானஎன்பங்கில்தெய்வமுமில்லையா விதியே.

துற்சாதனன்சொல்-கண்ணி.

தெய்வந்தானென்னசெய்யுமோ பார்ப்போமுன்
சித்துவித்தையிங்கே காட்டாதே
சேலையுரிந்திந்த சபையிலேநானுன்னை
திகம்பரமாக்காமல் விடுவேனோ



திரௌபதை·ஸ்ரீகிருஷ்ண சுவாமியை-துதிசெய்கிற—புலம்பல்

தருகெண்டா-ஆதிதாளம்

பல்லவி.

மாயவனே வைகுந்தவாசா எந்தன்மானங்காக்கவேணுஞ்சர்வேசா

அநுபல்லவி.

ஆயனான்மறைதேடும் ஆதிமூலப்பொருளே
அப்பப்பமுகுந்தன் உபபாதகமேநீக்கி அரி(மாயவ)

துற்சாதனன்சொல்-கண்ணி

நேயமாகஆதி மாயனென்றுசொன்னால்
நிலைநிற்குமோமானமென்றெண்ணாதே ஒரு
நிமிஷத்திலேயிந்த அரசற்குள்ளேயுன்னை
நிர்வாணமாக்கிறேன் பாரடி.

துரோபதைசொல்-தரு

கருதுமெய்யருக்கெல்லாமெய்யா என்னைக்
கைசோரவிட்டிடாதே அய்யா
விரிகடல்மேற்றுயிர்துய்யா இந்த
வேளைக்காத்தருள்செய்வாய் அய்யாஅரிமாயவ

துற்சாதனன்சொல்-கண்ணி.

உரிந்தசேலையெல்லா முரிந்துகொண்டேனின்ன
மொருசுத்திருக்குதுபாரடி. இந்த
ஒருசுத்தும்போனாலுன் பரிசுத்தமெல்லாமிங்
குடனேவெட்டவெளி யாமடி.

துற்சாதனன்சொல்-விருத்தம்.

சேலைநாமுரிவோமென்று திருடிநீயறிவையே தான்
மூலையிலொருவுள்ளாடை முன்னமே யுடுத்திக்கொண்டாய்
ஏலநீயுடுத்தவாடை யிதனையுமுரிந்துகொண்டால்
நீலிகள்குருவேயப்பால் நீயென்னசெய்யப்போறாய்

வ-ம். ஆ-ஆ இதென்ன ஆச்சரியமடி இந்தச்சபையில் உன்துகிலைநாங்கள் உரிவோமென்று உனக்குத்தெரியுமாசேலைக்குள்ஒரு சேலைக் கட்டிக்கொண்டாயே இதையும்உரிந்துபோட்டா லின்னமொருசேலை நான்கொடுப்பேனென்று நினைத்தையோ என்னடி உன்புத்தி.

வீமன்-துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்,

மதித்துரோபதையைத்தீண்டி வஸ்திரங்களையநாங்கள்
எதிர்த்தும்மைப்பொருளாயெண்ணி யிருப்பமோதுரியாகேளா
ய், துதித்தவிகர்னன்போகதொண்ணூற்றொன்பதுபேர்தன்னை
ச், சிதைக்கிறேனெமபுரத்திற் சேர்க்கிறேனெழுந்துவாரீர்

வ-ம் அடாதுரியோதனா இந்தராஜசபையிலேதுரோபதையை நிறுத்தி வஸ்திரபங்கம் பண்ணும்படிநாங்கள் பார்த்திருப்போமா எங்களண்ணன் சொல்லுக்கடங்கியிருந்தோமேயல்லாமல்நீங்களனைவரும் ஒருபொருட்டாஇப்பவும் இந்தவிகர்னன்ஒருத்தன் தவிர மற்றதொண்ணூற்றொன்பதுபேரையும் எமபுரத்துக்குஇப்போதனுப்பிவைக்கிறேன் எழுந்திருந்துவாங்களடா.

தருமர்-வீமனுக்குச்சொல்-விருத்தம்.

மறுத்தேனென் றும்ருகாதே-கருத்தேகையில்கதைகொண்டாய்
ஒருத்தால்தெய்வமொண்ணுதோபொறுத்தாயின்னம்பொறுபீமா

துரோபதைசொல்-முன்-தரு.

தேவாதிதேவனே யின்னேரம்-என்னைத்
திருக்கண்பார்த்தாலே யுபகாரம்
பாவிநான்செய்த அபசாரம்—பொறுத்துப்
பரிவாயிரட்சிப்ப துன்பாரம் (மாயவ)

துற்சாதனன்சொல்-கண்ணி.

பலபேருமெய்யென்று மெச்சிக்கொள்ளவுந்தன்
பத்தினிதனையிங்கே காட்டாதே-யிப்போ
பரிந்துந்தன்சேலையை யுரிந்துசபைதனிலே
பவுஷைக்கெடுக்கிறேன் பாரடி

துரௌபதைசொல்-முன்தரு

ஆனைமுறையிடவே வந்தாய்-மடுவில்
அன்றுமுதலையைப் பிளந்தாய்
ஓதுங்கஜேந்திரனைப் புறந்தாய்—இனி
புனையல்லாற்றிக்கில்லை யெந்தாய்-அரி (மாய)

துற்சாதனன்சொல்-கண்ணி

மாளாதுவல்வளர மந்திரங்கற்றுயுன்
மந்திரவித்தைக்குக் சலிப்பேனோ-சும்மாய்
வளருந்துகிலெல்லாம் வாங்கிவாயுகதன்
மானங்குலைக்கிறேன் பாரடி

துற்சாதனன்-துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்

சித்திரமாயனந்தஞ்சேலைகளுதிக்குமானல்
எத்தனைகோடியென்று யிழுத்துநானுரிவேனப்பா
உத்தமவென்மார்புந்தோளு முனைக்குதேஉடல்கள்சோர்ந்து
இத்தனைகலைவந்துற்று லென்செய்வேனண்ணையண்ணே

(வ-ம்) அடாஅப்பா இதென்னகாரணமோ தெரியவில்லைஅற்பு
தஅற்புதமாய்சித்திரவிச்சித்திரமாய்கோடி-சூரியப்பிரகாசமான சே
லைகள்விதவிதமாய் வாசாமகோசரமாய் புற்றிலே ஈசலானது பெ
ரும்போக்குக்குபுறப்பட்டாற்போல் எத்தனைகோடி சேலையென்
று நானுரிவேன் கையுஞ்சோர்ந்துபோகுது காலும்அசைந்துபோ
குதுஎன்னுலாகாது அண்ணே

துரியோதனன்-துற்சாதனனுக்குச்சொல்-விருத்தம்

புலியொருபூனையாகப் போனாப்போலடடாதம்பி
பலர்களுநகைப்பதாகப்பயனில்லாவார்த்தைசொன்னாய்

உலவிலாக்கலைகளின்னமுண்டாகும்விதத்தைப்பார்ப்போம்
வலியடாவுரியடா நீமனமதுதளர்ந்திடாதே

(வ-ம்) அடடாதம்பி துற்சாதனா புலியைப்போலொத்த நீபூனையாயொடுங்கிவிட்டு எல்லாரும் நகைக்கும்படியாய் என்னுலாகாதென்றுசொன்னாய் தயிரியம்விடாதே இன்னமும்பார்ப்போம் உரியடாஉரி

விகர்ணன்-துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்

உரிஉரிநாழிநாழி யுழக்காழாக்கெனச்சொல்லாதே
நெரிநெரிதம்பிமாரும் நீயுமுன்குடியும்வாழ்வும்
வரிவரிவேற்கண்ணாளின் மனநெருப்பாலின்றோடே
சரிசரியென்றுசொல்லுஞ் சத்தியமில்லாவண்ணே

வ-ம் கேளாய் அண்ணே உரிஉரிநாழிநாழிஉழக்காழாக்கென்று சொல்லவேண்டாம் உன்னுடையதம்பிமாரும் நீயும்உன்குடியும் உன்னுடையசெங்கோலும் உன்னுடையவாழ்வும் துரோபதைமனமென்னப்பட்டநெருப்பிலே சரிசரியென்று சொல்லண்ணே.

துரோபதை-மூன்-புலம்பல்-தரு

அடவிரணியனைவின் சேர்த்தாய்-உந்தன்
அன்பில்பிரகலாதனைக் காத்தாய்
திடமானதேவர்கள்துயர் தீர்த்தாய்-இந்த
செகங்களுய்யக்கிருபைக்கண் பார்த்தாய்அரி(மாய)

துற்சாதனன்சொல்-கண்ணி

ஓலமிட்டுசும்மா யொழுபிப்போருயுந்தன்
ஒழுகனுக்குப்பயப் படுவேனோ-கை
ஓய்ந்துபோனாலுமெய்ச் சாய்ந்துபோனாலும்-நா
னுனைட்பங்கம்பண்ணமல் விடுவேனோ

துரோபதைசொல்-கவி

நாரணனே அரி கோவிந்தா-உன்னை
நம்பினேனையா கோவிந்தா
ஆரணனே அரி கோவிந்தா-நானுன்
அடைக்கலமையா கோவிந்தா அரி (மாய)

துற்சாதனன்-துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்

அறிவுள்ளவண்ணாவேகேள்யடவனேற்றம்போட்டு
மறிகடல்நீரையெல்லாம் மாளவேயிறைத்திட்டாலும்
நெரியுள்ளயிவள்படைத்த நெடுந்துகில்முழுதும்வாங்கி
உரிவதுகடினமையோ யினியென்னாலாகாதப்பா

(வ-ம்) கேளாயண்ணே சததசமுத்திரத்தில் யேத்தம்போட்டு வற்றிப்போகும்படியாய் நீரையிறைக்கலாம் இவளுக்குண்டான வ

ஸ்திரத்தைஉரிகிறதற் கினிமேலென்னாலாகாது எங்களப்பன் தர
மல்ல கல்லைக்கடிக்க.

பொது-விருத்தம்

வணக்கினிதுரோபதைக்கு மானமல்வளர்ந்தசேலை
தனித்தனியுரிந்ததுற்சா தனன்கைகள்சலித்திற்க
குனித்தவில்விதுரன்பீஷ்மன் கோதிவேதியன்துரோணன்
இனித்தசொல்பெரியோரெல்லாமெழுந்திருந்துரைசெய்வாரே

வ-ம். அந்நேரத்தப்படியென்றால் துரோணர் பீஷ்மர் அஸ்வத்
தாமர்விதுரன் இன்னுஞ் சபையிலிருக்கப்பட்ட பெரியோர்கள்
சொல்லுகிறவிதங்காண்க.

சபையிலுள்ளோர்சொல்-விருத்தம்

இவளேஐவருக்குந்தேவி யிவளேமற்றெவர்க்குமாதா
இவளேயிப்பூமிதேவி யிவளேயக்கினிசொரூபி
இவளே சத்தியசிகாமணி யிவளேயுத்தமகுணவி
இவளேயிக்குலத்துதெய்வ மிவள்க்கிணையொருவருண்டோ

வ-ம் இவளேபஞ்சபாண்டவர்களுக்குமனைவி மற்றயாவர்களு
க்கும்இவளேமாதா பூமிதேவியுமிவளே அக்கினிசொரூபிஇவளே
சத்தியவசனி இவளே உத்தமகுணத்தைப்பெற்றவள் இந்தக்குல
த்துக்குக் குலதெய்வம்இவளே அல்லது மற்றொருவரையும் இவ
ளுக்கிணைசொல்லக்கூடாதுதகும்தகும்.

துரியோதனன்-துற்சாதனனுக்குச்சொல்-விருத்தம்

தாரதரந்தெரிந்தோரெல்லாஞ் சந்தோஷப்படுவதாலும்
வாரதுகிலிவட்குசும்மாவளர்ந்துதேயாகையாலும்
பொறுயிவள்செய்தகுற்றம் பொருத்தனடாதம்பி
திரௌபதைதன்னையெடுத்தென் றுடைமீதுவைத்திடாயே

வ-ம் அடாதம்பிதுற்சாதனா இங்கேயிருக்கிற கிழவரெல்லா
அவள்மேலே சந்தோஷப்படுகிறபடியினாலேமானத்துகில்இவளு
க்கு வளர்ந்த படியினாலே எனக்கிவள்என்னகுற்றம்செ
திருந்தபோதிலும் பொறுத்துக்கொள்ளத்தான்வேணும் இடிசெ
ன்றுவந்தாளென்தொடைமேலே உட்கார்ந்தால் பொறுத்துக்கொ
ள்ளுகிறதற்கும்சயமில்லைநல்லதுநீயாகில் எடுத்துவந்து என்
டைமேலே உட்காரவையடா தம்பிதுற்சாதனா.

விகர்ணன்-துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்

தாவியெதிர்வருமெமனைத்தடுக்கலாகும்
தலைகொண்டபடிவிஷத்தையிறக்கலாகும்
பேர்வடவாக்கினியையவிக்கலாகும்
மேல்வரும்பிர்மாஸ்திரத்தைவிலக்கலாகும்

ஆவதுகேள்கற்புடையோர் சபித்தாற்றீர்க்க
ஆதிமும்மூர்த்திகளாலாகாதண்ணே
பாவையின்மகிமைதனைக் கண்ணிற்கண்டும்
பழிதேடிக்கொள்வதற்கோ படைக்கின்றாயே

வ-ம், கேளும்அண்ணே கொல்லவருகிறஎமனைத் தடுக்கலாம்தலைக்கேறினவிஷத்தையுமிறக்கலாம் வடவாக்கினியையும விலக்கலாம்மேலேவரும்பிரமாஸ்திரத்தையும் விலக்கலாம்கற்புடையஸ்திரீகள் மனம்நொந்து அவர்வாயினாலே ஒன்றைச்சொன்னால்அதைத்தடுக்க மும்மூர்த்திகளாலுமாகாது இவர்கள்மகிமையைக்கண்ணாலேகண்டும் பழியைத்தேடிக்கொள்ளலாமோஅண்ணே,

துரௌபதைக்கும்-துரியோதனனுக்கும்-தர்க்கம்.

தரு-இ-ம-காம்போதி-மிசுரதாளம்.

ஒருமைந்தாணிபார்க்குள்பெருமைபடவுதித்தாய் படுபாவிஇந்த
அருமைக்குருகுலத்தின்முறைமைதவிரவிட்ட யடதோஷிஅன்
முறைமைதராவிட்டைவர்கள்நித்தமுமொரு வேசிஉன்
முறையிப்படியிருக்கசபைமெச்சவுகொடித்தா யடிபோடிஉந்தடி
மனதிற்பகையைவைத்துயிவடந்தனிலழைத்த படுபாவிநீ
வஞ்சியப்பகடைவைத்து அடிமைப்படஜெயித்த டதோஷிஅடி
அடிமைப்படஜெயித்து அவர்கைப்பொருள்பறித்த றியாயோநீ
யென், அடிமைப்படுசிறிக்கிதுரைசொற்படிநடக்கவருவாயேயெ
ந்தன், தருமதுரைகளுக்குச்சதிசர்ப்பனைநினைத்தபடுபாவி இந்தச்
சகுனிப்புலையனிட்டவினைசொற்படிமுடித்தா யடதோஷிஎந்தன்
சலவைத்தொடைமடிக்குள்சாசத்துடனிருக்கவருவாயேஇந்தச்
சகுனிசொல்லைஎடுத்துகடலுங்கப்புரமெட்டி எறிவேனேநானுன்
தொடையிற்றனியிருக்கசடையிற்பழுதுரைத்த படுபாவிஉந்தன்
தொடையிற்கழுகுகொத்தநெளியப்புழுபுழுத்து மடியாயேஎந்த
தலையைப்படுகளத்தினுநரிக்கணைகள்பட்டென்னுயிர்போயும் உ
ன்னை, தழுவிக்கொள்ளநினைத்தமனதெப்படி மறக்குமறவே
னேஎன்னைத், தழுவிக்கொள்ளநினைத்தமடியில்தனையழைத்தபடு
பாவிஎந்தன், சர்மத்துரைகள்கைக்குளடிபட்டலறிஎப்போ விழு
வாயோஉன்னை, சபையில்துகிலவிழ்த்துத்தலையைக்குனியவைத்
ததிவர்தானோ என்னைச், சபையில்துகிலவிழ்த்துத்தலையைக்குனி
யவைத்ததிவர்தானோ என்னைச், சபதத்துடனடித்துப்புகழ்பெற்
றிடசெய்விப்பாரடிபோடி என்னைச், சபையிற்றனிநிறுத்தித்துகி
லைக்களையவிட்டபடுபாவிஉந்தன், தலையைக்களைதறிக்கதரையிற்
புரளவதெப்போயடதோஷிஎந்தன்,தலையைக்களைதறிக்குமுடிபெ

ந்நிடுஞ்சமர்த்தரிவர்தானோ இந்த, சவைபசகளுக்கு மினிமற்றொருவருக்குமஞ்சவேனோ நீங்கள், அடியற்றுவொருமிக்கக் கொடியபடுகளத்தில் மடியாமல், மண்மேலலையச்சுருளவிழ்ந்தமயிரைக்கையாலெடுத்து முடியேனோ

துரௌபதைசொல்-விருத்தம்-இராகம்-முகாரி

கொலுவினிலிருத்தியென்றன் கூந்தலுந்துகிலுந்தீண்டி
மெலிவுசெய்தவனைநாளை வேருடன்போர்க்களத்தில்
தலைதனைத்துணித்துவெற்றி தனிமுரசறைந்திடாமல்
இலைகவேவிரித்தகூந்த லெடுத்தினிமுடித்திலேனே

வ-ம். கேளுங் சபையிலுள்ள ராஜாக்களேஎன்னை இந்தராஜசபையிலேயிருத்தி என்கூந்தலையுந்துகிலையுந்தீண்டி என்னை அவமானபங்கஞ்செய்தவனை நாளை இரணக்களத்தில் அவன்மார்மேலேயிருந்துமயிரைமுடிக்காவிட்டால் நான்துரௌபதையல்ல

வீமன்சொல்-விருத்தம்.

மங்கைதுரௌபதையையிந்த மகாசபைதனிலிருத்தி
பங்கமாய்பழுதுசொன்ன பாதகர்தம்மையிந்தச்
செங்கையிற்கதையினாலே சின்னபின்னங்களாகச்
சங்கரித்திடுவேன்சொன்ன சபதமுடிப்பேன்பாரீர்

வ-ம். கேளுங்கள் சபையிலுள்ளவர்களே துரோபதையைச்சபையிலேயிழுத்தி மானபங்கஞ்செய்து வைத்தபேரை என்கையிலிருக்கும் கதையினாலே அடித்துக்கொன்று நான்சொன்ன சபதத்தைமுடிக்கிறேன் ராசாக்களே.

இதுவு-வீமன்சொல்-ஆசிரியவிருத்தம்.

மதித்ததுரோபதையை மயிர்பிடித்திழுத்து
  வஸ்திரமுரிந்தவன்தன்னைச்
சதைத்தவனுதிரமள்ளியுண்டெனது
  தாகந்தீராமல் நானினிமேல்
கதித்தவென்கையாற் புனலெடுத்துண்ணேன்
  கதையினாற்சலத்தினையடித்துக்
குதித்துமேலெழுந்த திவலையையுண்டு
  கொண்டவன்பகைமுடித்திடுவேன்.

வ-ம். கேளுங்கள்ராசாக்களே மந்திரிகளேதுரோபதையைமயிரைத்தொட்டிழுத்துவந்து வஸ்திரபங்கம் பண்ணினவனெவனோ அவனை நெஞ்சைப்பிளந்து அவனுடையவுதிரத்தை யென்கையினாலேயள்ளிக்குடித்து என்னுடைய கோபமென்னப்பட்ட தாகந்தீர்க்காமலினிமேல் என்கையினாலே ஜலத்தையள்ளி தாகபான

ம்பண்ணேன் ஜலம்சாப்பிடவேணுமானா லிந்தர்கதையினால் சல த்தையடித்து மேலேயெழுந்தசலத்தைசாப்பிடுவேனேயல்லாமல் என்கையினா லள்ளிச்சாப்பிடுகிறதில்லை.

அர்ச்சுனன்சொல்-விருத்தம்.

படுதுரியோதனன்சொற் பழுதுபோகாமலேந்தி
விடுவிடென்னாக்குமிந்த விரோதியாங்கர்னன்றன்னை
தொடுகணையாலேபாவி துள்ளவேயடித்துநாளைப்
படுகளஞ்சேர்க்காவிட்டாற் பார்த்திபனானவேனோ

வ-ம், கேளுங்கள்ராசாக்களே இந்தத்துரியோதனன்சொல்லைக் கீழேவிடாம லெடுத்துக்கொண்டு இச்சகம்பேசுகிற இந்தக்கர்ன னுயிரையென்னுடைய அஸ்திரங்களுக்கிறைகொடாவிட்டாலென் பேர்அர்ச்சுனனா நல்லது ஆகட்டும்

நகுலன்சொல்-விருத்தம்.

கபடவஞ்சனைக்குப்பொல்லா கமடகதமனகம்போல்
தவறுகள்மிகவேசெய்யுஞ் சவுபலநாதன்றன்னை
அவமதித்தமர்க்களத்தி லதோகெதியாக்கிவெற்றி
நவின்றிடச்செய்யாவிட்டா நகுலனானுவேனோ

வ-ம். கேளுங்கள்ராசாக்களே மகாகபடகதமன வித்தைகளா லேமித்துருபேதஞ்செய்யப்பட்டசவுபலநாயகனைரணமுகத்திலே சங்காரம்பண்ணாமற்போனால் நான்நகுலனானல்லதாகட்டும்.

சகாதேவன்சொல்-விருத்தம்.

புகுநரிகுருக்கள்போலும் புருஷவேசிகளைப்போலும்
வெகுபகைமனதில்வைத்து மித்திரபேதங்கள்செய்து
மகுடமன்னரைக்கலைத்து மாரீசஞ்செய்யுமிந்த
சகுனியைக்கொல்லாவிட்டால் சகாதேவனானவேனோ

வ-ம், கேளுங்கள்ராசாக்களே நரிகுருக்களென்றுஞ் சொல்லு வார்களே அவர்களைப்போலவும் புருஷவேசிகளைப்போலவும் சதிசர் ப்பனைசாமத்துரோகம் மித்திரபேதமெல்லாஞ்செய்துசமஸ்தான த்தைக்கலைக்கப்பட்ட இந்தசகுனியைசித்திரவதைசெய்துக்கொ ல்லாவிட்டால் நான்சகாதேவனோ பாருங்கள்.

பொது-விருத்தம்.

தருமபுத்திரனில்லாமல் தம்பிமார்நான்குபேரும்
அரிவைதுரௌபதையுஞ்சொன்ன அடல்பெருசபதங்கேட்
மருவியபெரியோரெல்லா மனமிகக்கலங்கும்போது (டு
குருகுலக்கொடியோனான குருடனுங்கூறுவானே

கட்டியன்-வசனம்.

அகோதெப்படியென்றால் தர்மபுத்திரமகாராசன்தவிரமற்றதம்பிமார்நால்வரும் துரௌபதையுஞ்சொன்ன சபதங்களைக்கேட்டுச்சபையிலுள்ள பெரியோர்களும் இராசராசர்களும் மனதில்விசனமடைந்திருக்குந்தருணத்தில் திருதராட்டிரமகாராசன் துரோபதைக்குச் சொல்லுகிறவிதங்காண்க.

திருதராட்டிரன்-துரௌபதைக்குச்சொல்-விருத்தம்.

கற்பினுக்கரசே தெய்வ கடாட்சமுள்ளவளேபோற்றி
மற்பெருமைவர்சிந்தை மகிழ்குலக்கொடியேபோற்றி
பொற்புறுமாதர்க்குள்ளே பொருமையுள்ளவளேபோற்றி
அற்புதத்திருவேயிந்த வபசாரம்பொறுப்பாய்போற்றி

வ-ம். அம்மாதுரௌபதையே நீஎன்தாயாச்சே எங்களாட்சிக்கவந்ததெய்வமாச்சே அப்படியா இப்படிப்பட்டவளா நீவேண்டாமென்றுநானுஞ்சொன்னேனே என்பேச்சைஇந்தப்பசகள்கேட்கிறார்களா உன்மகிமைஇந்தப்பசகளுக்கும்எனக்கும்இப்போதுதான்தெரியவந்தது நாங்களென்ன அபசாரஞ்செய்தாலும்பொறுத்துக்கொள்ளவேணும் தாயே.

விகர்ணன்சொல்-விருத்தம்.

எட்டினாற்குடுமைகையி லெட்டாமற்போச்சுதானால்
இட்டெனக்கால்பிடிக்குந் திருடர்போல்வந்தாயப்பா
கட்டிதங்கத்தின் மாத்தைக்கண்ணிலாரறிவாரோதான் (ய்
துஷ்டபிள்ளைகளுக்கின்னஞ்சொலலுவதெல்லாஞ்சொல்வா

வ-ம். கேளுமையாஎன்பிதாவே எட்டினாற்குடுமை எட்டாவிட்டால்கால்பிடித்துக்கொள்ளுகிறதென்றுசொல்லிக்கொள்வார்களே அப்படியிருக்கின்றது இந்ததுரோபதையைநீதுதிசெய்கிறது தங்கத்தினுடையபிரகாசமும் மாத்தும் குருடனுக்குத்தெரியுமா இந்ததுரௌபதைமகிமை நமக்குத்தெரியுமாஒருக்காலுந்தெரியாது நீசொல்லவேண்டியதெல்லாம் உன்னுடைய துஷ்டப்பிள்ளைகளுக்குச்சொல்லும் இந்தஅம்மாளுக்கு நீர்உபசாரஞ்செய்யவேண்டியதில்லை.

திருதராட்டிரன்-துரோபதைக்குச்சொல்-விருத்தம்.

உச்சிதமயிலேநேளா யுணர்வில்லாவெந்தன்மைந்தர்
மச்சினமுறைகொண்டேதோ வகைவிளையாடினார்கள்
குச்சிதமாயென்றுநீத குறைமனதில்வையாதே
பிச்சர்களென்றெண்ணித்தப் பிழைபொறுத்தாள்வாயம்மா

வ-ம். அம்மாதுரோபதைஎன்பிள்ளைகள் கள்ளங்கபடுதெரியாதபிள்ளைகள் சூதுவாதுஒன்றுந்தெரியாது இப்படிபோனால்இப்படிவருமென்றுந் தெரியாதவர்கள்மேலும் உனக்கு மச்சினமாராகையாலேஅந்தமுறைகொண்டு நாம்எதைச்சொன்னாலும் எதைச்செய்தாலும் கோபித்துக்கொள்ள மாட்டார்களென்கிற நம்பிக்கையினாலேவிளையாடினார்கள். அந்தவிளையாட்டை நீவினையமாக நினைக்கவேண்டாம் ஆயிரங்குற்றமானாலும் அடியேனைப்பற்றி பொறுத்து எப்படியாகிலும் மிதைமன்னிக்கவேணுந்தாயே.

திருதாட்டிரன்சொல்-கவி.

பொன்னுலகம்புகழும் மன்னியர்க்கரசே
என்னவரம்வேணும் முன்னிநீமொழிவாய்

வ-ம். கேளுமம்மாதுரோபதையே உன்மனது துயரமெல்லாம் நீக்கஎன்னாலே உனக்குவேண்டியபிரயோசனமின்னதென்றுகேட்டால்நான்கொடுக்கிறேன் கேளுமம்மா.

துரௌபதை-திருதராட்டிரனுக்குச்சொல்-விருத்தம்.

ஒருமைகள்பலவும்பேசி யுளமெலாமுருகிகின்ற
அருமையென்மாதாவுந்த னரவிந்தபாதம்போற்றி
வருமனுநீதியன்றி மற்றுமுக்கடிமையான
தருமமூர்த்திகளைத்தொண்டு தவிர்த்துநீவிடுகுவீரோ

வ-ம். கேளும் என்மாமா கேட்டதைக்கொடுக்கிறேனென்று சொன்னபடியினாலேநீங்கள்சூதாடி அடிமைப்படுத்திக்கொண்ட அந்ததர்மமூர்த்திகளை அடிமைத்தனத்தை மீட்டிக்கொள்ளவேணுமமாமா.

திருதராட்டிரன்சொல்-வசனம்.

அப்படியேகொடுத்தேன்அம்மா

இதுவும்-திருதராட்டிரன்சொல்-கவி.

கனியெனும்கிரம்போல் இனியசொற்கோதாய்
மனதினில்வருந்தா தினியொருவரங்கேள்

வ-ம். கேளும்மா துரோபதையே இன்னமொரு வரங்கேள் கொடுக்கிறேன்.

துரௌபதைசொல்-விருத்தம்-இராகம்-ஆகிரி.

நூல்வரும்நீதியாய்ந்து நுண்ணியகேள்விகேட்டு
மால்வரும்புகழைப்பெற்ற மாமாகேளொருவிண்ணப்பம்
ஆல்வரும்வெற்றிபெற்ற வாயுதத்துடனேமற்ற
நால்வர்தன்னடிமைநீக்கி நயமுடன்தந்திடாயே

வ-ம். கேளும்மாமாவே இன்னம் வேண்டியதைக்கேட்கச்சொன்னபடியினாலே மற்றநாலுபேரையும் ஆயுதத்துடனே அடிமைத்தனத்தைநீக்கிவிடவேணும் மாமா

திருதராட்டிரன்சொல்-வசனம்.

அப்படியேகொடுத்தேன் இன்னமொருவரங்கேளம்மா

துரோபதைசொல்-வசனம்.

கேளும்மாமாவே ஸ்திரீசாதிகள்வரம்பெற்றால்பிராமணஸ்திரீகள் ஒருவரமும் க்ஷத்திரியஸ்திரீகள் இரண்டுவரமும் வைசியஸ்திரீகள் மூன்றுவரமும் பெறலாமேயல்லாமல் அதற்குமேலும்பெறலாகாதேமாமா

திருதராட்டிரன்-வசனம்-அப்படியா-அம்மா

திருதராட்டிரன்சொல்-விருத்தம்.

தேடக்கிடையாமைந்தர்களே நீதாஞ்சூதில்நீதோற்ற
நாடுகொடுத்தேநகர்கொடுத்தேநாலுவிதச்சேனைகள்கொடுத்தேன்
வீடுகொடுத்தேபொருளும்விளங்கக்கொடுத்தேன்கைக்கொண்டு, பீடுபடைத்துமுன்போலும் பேராப்பெருத்து வாழ்வீரே.

வசனம்.

கேளுங்கள்பெருமையுள்ளஎன்கட்டிமக்களே நீங்கள்ஆயாசப்படவேண்டாம் அந்தப்பிள்ளைகள்வேறல்ல நீங்கள்வேறல்ல இப்போதுநீங்கள்சொக்கட்டாடிதோற்ற-நாடு-நகரம் ரதகெசதுரகபதாதிசதுரங்கசேனைகளெல்லாம் கொடுத்துவிட்டேன் நீங்கள்எப்போதும்போல ராச்சியபரிபாலனம பண்ணிக்கொண்டு சுகமாயிருங்களம்மா.

தர்மர்-திருதராட்டிரனுக்குச்சொல்-விருத்தம்.

அப்படித்தானேசெய்வோ மையனே நின்றாள்போற்றி
பெட்புறுமுலகந்தன்னிற் பிதாவாக்கியந்தள்ளுவாரோ
எப்படிநீர்சொன்னாலும் யாமதைத்தடுப்பதில்லை
மெய்ப்புடன்விடைகொடுத்தால் மேனகர்க்கேகுவோமே

வசனம்,

கேளும்என்பிதாவே உலகத்திலே பிதாவாக்கியந்தள்ளுவார் களா நீர்எப்படிசொன்னாலும்அப்படியேகேட்போம்செலவுகொடுத்தனுப்பினால்நாங்கள் இந்திரபிரஸ்தம்போய்ச் சேருகிறோமையா.

சகுனிசொல்-விருத்தம்.

பகையெல்லாம்போச்சேநான்றான்பட்டது வீணாய்ப்போச்சே
வகையெல்லாம்போச்சேவுங்கள் வைரங்கள்விட்டுப்போச்சே

சுகமுடனைவருநீருந் துசங்கட்டிவாழ்ந்திருங்கள்
தருமிதுநன்றாய்ச்செய்தீர் சாபசுன்னைமெச்சினேனே

வசனம்.

இன்றோடேயிருந்தபகையும்போச்சுது நான்பட்டபாடெல்லாம்ஆற்றிற்கரைத்தபுளியாய்ப்போச்சுது இருக்கட்டும்எப்படியாகிலும்நீங்களும் அவர்களும் ஒருமித்துச்சுகமாயிருந்தால் சரிகேடுவரும்போதுமதிகெட்டுவருமென்றுசொல்லுவார்களே அப்படியிருக்குது அடாபோங்கள்வேலைமெனக்கிட்டதாசிரிகளே-ஆ-ஆ-ஆ.

மதிப்புடன்தன்னைத்தேடி வந்திடுஞ்செல்வந்தன்னை
உதைத்துமேதள்ளிவிட்டா லுமக்கென்னநமக்கிங்கென்ன
பிதைப்பைகளென்றுசொல்லிப்பேச்சொன்றுநின்றுபோச்சு
விதைப்படுசகுனிமாமா விடுவிடுபேசவேண்டாம்

வசனம்.

கேளும்சகுனிமாமா வேணுமென்றுதனக்குத்தானேவந்தசெல்வத்தை வேண்டாமென்று உதைத்துதள்ளிவிட்டால் இப்போது உமக்கும் எனக்கும் என்னமுழுகிப்போச்சுது துரியோதனன்பங்காளியென்கிற பட்டமாத்திரம்வந்தது இதனாலேநீரேன்பேசுகிறீர் சும்மாயிரும்.

துரியோதனன்-துற்சாதனுக்குச்சொல்-விருத்தம்.

துற்சாதனாநீவாடா சுருக்காயோர்நொடியிற்சென்று
பொய்ச்சார்ந்தவைவர்தன்னைப் போகாமல்மடக்கிக்கொண்(டு
பிச்சானகிழவன்பேச்சை பெரிதென்றுநம்பிபோக
உச்சாயமல்லவென்று உடனேபோய்த்தடுத்துவாடா

வசனம்.

அடாதம்பிதுற்சாதனா இங்கேவாடாநீசீக்கிரமாயோடி தர்மபுத்திராளைப் போகவொட்டாமல் மடக்கிக்கொண்டுவா கண்ணில்லாதபயித்தியக்காரகிழவன்பேச்சை நம்பிபோகிறது காரியமல்லவென்று அதற்குண்டானபேச்சுகளெல்லாம்பேசி அவர்களை இந்திரபிரஸ்தத்துக்குப் போகவொட்டாமல் இங்கேயிட்டுக்கொண்டுவாடாதம்பி

துற்சாதனன்சொல்-வசனம்.

அப்படியே செய்கிறேன் அண்ணாவே.

துற்சாதனன்-பாண்டவர்களுக்குச்சொல்-விருத்தம்.

ஐயரேகேளீருங்களறிவென்னவாண்மையென்ன
மெய்வரும்படியாய்த்தோற்றீர் விழியிலாகிழவன்பேச்சை

கைவரும்படியாயெண்ணிக் கடிந்துலகாளப்போரீர்
பொய்வரும்புகழும்போகும் பொறியிலாநெறிசெய்நீரே

வ-ம். பாண்டவர்களே நீங்கள்சத்தியமாய் ஆடித்தோற்றநாடு நகர முதலானதை நான் கொடுத்தேன் போய்விடுங்களென்று முன்பின் தோன்றாத கிழவன்சொன்னால் அதைகேட்டுக்கொண்டுநீங்கள்போகலாமா இது தருமமா இதுவரையிலுஞ்சத்தியமாயிருந்துஇப்போது அசத்தியத்தைக்கொண்டாடப்போகிறது நில்லுங்கள் நில்லுங்கள் இன்னம் பேசவேண்டியதிருக்கின்றது வாருங்கள்.

தருமர்சொல்-வசனம்.

அப்படியேவருகிறோம் தம்பிதுற்சாதனா

தருமர்சபையில்வந்துசொல்லுகிறவிருத்தம்.

இ[illegible]யிதந்தெரிந்துசொல்லும் பிதாவேசொல்லைக்கேளீர் (ஆ
பிதாம[illegible]ன்னவார்த்தையெல்லாம் பிழைபிழையிதுதானென்
சுதாவிலேவந்துசொன்னான் தோற்றுதுற்சாதன்றான்
ஏதாகிலுமொருமார்க்கத்தையின்னதென்றுரைசெய்வீரே

வ-ம். ஐயா[illegible]ணரே வீஷ்மரே நாங்கள் சொக்கட்டாடி தோற்றநாடுநக[illegible]முதலானதெல்லாம்மறுபடியும் உங்களுக்குகொடுத்துவிட்டேனென்று என்பிதாவான திருதாட்டிரமகாராசன் சொல்லிவிடைகொடுத்தனுப்பியிருக்க அதுதகாதென்றுதுற்சாதனன்தடுக்கிறான் அதைத்தெரிந்துசொல்லுங்களையா

துரியோதனன்-பாண்டவர்களுக்குச்சொல்-விருத்தம்

சொல்லுவதென்னமுன்பின் தோன்றாதகிழவன்பேச்சைக்
கல்லின்மேலெழுத்தென்றெண்ணிக் கடிந்துலகாளப்போரீர்
நல்லதுதானுமீது நியாயமாயினிமேலுங்கள்
வல்லபங்கட்டிவைத்து வனத்திலுக்கேகுவீரே

வ-ம். என்னத்தைக்காணும்இங்கேசொல்லுகிறதுபிரமாணிக்கமாய்ச்சூதாடி எப்போதோத்தீர்களோ அன்றேபோச்சுது எங்கள் தகப்பன்பெரியமனிதனுச்சே கண்ணில்லாகிழவன் ஏதொன்றுந்தோற்றாமல்[illegible]றைச்சொன்னால் அதைச்சிலாக்கியமாய்ப்பிடித்துக்கொண்டுபோகஎத்தனப்பட்டீர்கள் அதுகூடாது இந்தட்சணத்திலேநீங்கள் காட்டுக்குப்போய்விடுகிறதே தீர்மானம்.

துரோணர் தர்மருக்குச்சொல்-விருத்தம்.

பகடையிற்றோற்றதெல்லாம் பரிந்தவர்தந்திட்டாலும்
இகழ்வதுகொள்ளலாகா திராசருக்கியற்கையன்றே
தருமபழிமுன்முன்னிந்தத் தரணியையாருமன்னர்
புகும்நெறிப்படியேசெய்தால் பூவலர்வாழ்க்கையாமே

வ-ம். கேளுந்தருமராஜனேஎப்போது ஆடிற்றோற்றுப்போன
தைக்கொடுத்துவிட்டேனென்று அவர்கள்சொன்னாலும் நீங்கள்
அதைக்கைக்கொள்ளுகிறதுயோக்கியமல்லமுன்பின்இராசாக்கள்
போனவழிப்படியேபோகவேணுந் தர்மராசனே

அஸ்வத்தாமர்-தர்மருக்குச்சொல்-விருத்தம்.

தருமபுத்திரனேயுங்கள் தம்பிமார்நாலுபேரும்
சபதமிட்டிருக்குமந்தத் தன்மையைமறந்திட்டாயோ
ருவுமுன்செல்வமெல்லா மறுபடிகிடைக்குங்கண்டாய்
ஒருவர்தன்னருளுமற்ற வொருவர்தன்பகையாகாதே

வ-ம். கேளுந்தர்மராசனே உங்கள் தம்பிமார் நாலுபேருமிட்ட
சபதம்பொய்த்துப்போமா அந்தப்படியேமுடியும் எப்படியும்ரா
டுநகரமுதலானதுகளும் உங்களுக்குக்கிடைக்கும் திருதராட்டிர
னுடையஅன்புந்துரியோதனன் பகையும்பெற்றுப் போனதினா
லேகாரியமென்ன தர்மராஜனே.

பீஷ்மர்-தருமருக்குச்சொல்-விருத்தம்.

அரிவுடனயோத்தியாண்ட வரிச்சந்திராசன்செல்வம்
பறிகொடுத்தப்பாற்பிள்ளைபத்தினிதன்னைவிற்று
விறல்விட்டுத்தானுங்கூட விலைப்பட்டுமீண்டுவந்து
கறையறவுலகமெல்லாங் கைக்கொண்டதறிகிலாயோ

ர

வ-ம். கேளும்தர்மராஜனே மகாசக்கிரவர்த்தியானஅரிச்சந்தி
ன்நாடுநகரமெல்லாம் விஸ்வாமித்திரனுக்குக் கொடுத்துவிட்டுப்
பிள்ளையைவிற்றுப் பெண்ஜாதியைவிற்றுத் தானும்விலையாகிப்ப
டாத துன்பங்களைபட்டு மறுபடியும் உலகத்தை ஆளவில்லையா இ
தைக்கேட்டதில்லையா தர்மராஜனே.

விதுரன்-தர்மருக்குச்சொல்-விருத்தம்.

நளச்சக்கிரவர்த்திசூதால் நாடெல்லாமிழந்துகானில்
உளமகிழ்ந்துமுன்றுகொண்டே யொண்டொடியாளைநீக்கி
வளமிகுமங்கங்குன்றி வலியதேர்ப்பாகனாகிக்
களைதுயர்நீக்குதெய்வங் காத்ததுமறிந்திலாயோ

வ-ம். கேளும்தர்மராசனே நளச்சக்கிரவர்த்தி நாடுநகரமிழந்
துவனத்திலே சஞ்சரித்து பெண்ஜாதியைநீக்கித் தேர்ப்பாகனாகி
மறுபடியும்இந்தப் பூச்சக்கிரமெல்லாம் ஏகமாய்ப்பெற்றிருக்கவி
ல்லையா இதுவுங்கேட்டதில்லையா தர்மராஜனே.

# சூது துகிலுரிதல்.

துரோணர்-தர்மருக்குச்சொல்-விருத்தம்.

ஆசையால்நீருமிந்த வரிவைதுரௌபதையுங்கூடி
பாகமாய்வனத்துக்கேகிப் பனிரெண்டுவருடந்தங்கி
திசையோர்வருடங்காட்டிலொருவர்க்குந்தெரியாவண்ணம்
வாருடன்மறைந்திருந்து வந்துபின்னுலகையாள்வீர்

வ-ம். கேளுந்தர்மராசனே நீங்களைந்துபேரும் இந்ததுரோபதையுங்காட்டுக்குப்போய் பன்னிரண்டுவருஷம் வனவாசம்பண்ணிஒருவருஷம் ஆருக்குந்தெரியாமல் காட்டிலேமறைந்திருந்து வந்தீர்களானால் மறுபடியும் உங்கள் நாடுநகரமெல்லாம் பெற்றுக்கொண்டுசுகமாயிருக்கலாந் தர்மராஜனே.

இதுவும்-துரோணர்சொல்-விருத்தம்.

மறைந்திருக்கின்றநாளில் மற்றொருவர்கண்டால்
நெறியினில்நீங்கள்சென்று நீங்கள்வனஞ்சஞ்சரித்து
இறைமறுபடியுங்காட்டுக் கேகுவதென்றுரிந்த
குறைவறவந்தாலுங்கள் குவலயங்கைக்கொள்வீரே

வ-ம். கேளும்என்னருமையான பிள்ளைகளே பன்னிரண்டுவருஷம்வனவாசமுமொருவருஷம் அக்கியாதவாசமுமிருந்து மறுபடியும்இந்தஅக்கியாதவாசத்திலேஉங்களையாராகிலும்இன்றொன்றுதெரிந்துகொண்டால்மறுபடியும் பதின்மூன்றுவருஷமும்இந்தப்படிக்குச்சஞ்சரிக்கின்றதென்றுஇருக்கின்றது சமஸ்தானத்தின்கருத்துஅப்படியே இந்தப்படிக்குவனம்போய்வந்தால் உங்கள்செல்வத்தைப்பெற்றுக்கொள்ளலாந் தர்மராஜனே.

துரோபதைசொல்-விருத்தம்-முகாரி

துறையிதுவென்றுசொன்ன துரோணரேநின்றுள்போற்றி
அறைதருமிவர்களைவ ரரசர்களாவதென்றுந்
திறமுடனிவர்களுக்குத் தேவிநானவதென்றும்
குறைவறவினியொருக்கால் கொடியசூதாடவேண்டும்

வ-ம். ஐயாதுரோணரே நீங்கள்சொன்னதுசரியே ஆனாலும்இந்தஐந்துபேரும்அடிமையென்றும் அவர்களுக்குட்பட்ட பொருள் நானென்றும் அவர்கள்சொல்லச்சே அந்தவில்லங்கத்தைவைத்துக்கொண்டு வனத்திற்குப்போகிறது யோக்கியமல்லஇனியொருதரஞ்சூதாடவேண்டும் ஐயரே.

தர்மர்சொல்-விருத்தம்.

மெய்யிதுநல்லவார்த்தை விசித்தானவர்க்குநாங்கள்
மையுறுமடிமையாக்கிக் காட்டுக்குப்போனால்நாளை

வையகமடிமைப்பட்ட மனிதர்க்கிங்கேதென்பாரோ
ஐய்யனேயினியோராட்டஞ் சூதாடவேணுமையா

வ-ம், கேளுமையாதுரோணரே துரோபதைசொல்லுகிறதுமெய்யேஅடிமைத்தனத்தோடேவனம்போய்வந்தால்நாளே அடிமைப்பட்டவர்களுக்குப்பூமியேதென்றுசொல்லுவார்கள் அந்தஅடிமைத்தனத்தை இப்போதுதீர்த்துக்கொள்ளுகிறது நல்லது ஆகையாலேஇன்னமோராட்டஞ்சொக்கட்டானுடவேண்டுமையா.

விதுரன்-துரியோதனனுக்குச்சொல்-விருத்தம்

சரிசரியிதற்குவேறே தடங்கலைச்சொல்லொணாது
துரியனேசகுனிகர்ண துற்சாதனுகேளீர்கள்
தருமருஞ்சகுனிதானுந் தனித்தனியெதிரிருந்து
பரிவுடனினியோராட்டம் பகடையையாடச்செய்வீர்

வசனம்,

கேளுந்துரியோதனுகர்ணதுற்சாதனுதர்மராசன் சொல்லுகின்றதுசரியே ஆகையினாலேமுன்போலதர்மராசனும்சகுனியும்இன்னமொரு ஆட்டஞ்சொக்கட்டான் போடட்டும் பார்ப்போம்.

சகுனிசொல்-விருத்தம்.

நாட்டையுங்கொடுத்துவுள்ள நகையுங்கொடுத்துச்சேர்ந்த
வீட்டையுங்கொடுத்துசும்மாவெறுங் கையைத்தட்டிக்கொண்
காட்டுக்குப்போறபேர்க்குக் கைப்பொருளேதனைக்கண்டு (டு
ஆட்டத்தையாடச்சொன்னீர் ரதற்கொருவயணஞ்சொல்வீர்

வசனம்.

நாடுநகரம்ரொக்கம்ரோசனை ஆனைசேனை முதலானவைகளெல்லாந்தோற்றுகையைத்தட்டிக்கொண்டுகாட்டுக்குப் போகிறபேர்களுடனேசூது ஆடச்சொல்லிகுதிக்கிறீர்களே அவர்கள்கையில் என்னயிருக்குது என்னபந்தயம்வைத்தாடுவார்கள் கேளுங்கள்.

தர்மர்-சகுனிக்குச்சொல்-விருத்தம்.

நான்தோற்றாலெந்தன்புண்யம் நல்குவேனல்லாமல்நீர்
தான்தோற்றாலெங்கள்தொண்டு தவிர்வதுயிதைக்குறித்து
தேன்தோற்றகையாயிங்கே திறல்மன்னர்பார்ப்பதாக
வான்தோற்றகையாலிங்கே வசியசூதாடுவோமே

வசனம.

கேளுஞ்சகுனிமாமாநான்தோற்றால்நான்செய்த புண்ணியமெல்லாங்கொடுத்துவிடுகிறேன் நீர்தோற்றீரானால் எங்களுக்குஅடிமைத்தனமக்காயில்லை இந்தப்படிசூதுஆடுவோம் வாரும்மாமா.

சகுனிசொல்-வசனம்.

அப்படியே ஆடுவோம்வாரும் தர்மராஜனே.



தருமர்.



சகுனி.



கர்ணன்.



விதுரன்.



பீஷ்மர்.

## தருமருஞ்-சகுனியும்
## ஐந்தாவது ஆட்டம் ஆடுகிறது.

---

தர்மர்சொல்-தரு-இ-ம்-காம்போதி-மிசுரதாளம்.

தாமோதராவாசுதேவா கோவிந்தா
தற்காத்தருள்முகுந்தா வைகுந்தா

வ-ம்-இரண்டு-பன்னிரண்டு-பத்து

சகுனிசொல்-தரு.

இன்னமுஞ்சூதாடவந்திரோ வாரும்
இனியாகிலுமென்னைகதிராணியைப் பாரும்

வசனம்-மூணத்தொண்ணு

தர்மர்சொல்-தரு.

நாராயணுவச்சுதா பத்மனுபா
நம்பினேனுன்னையேமெய்ஞ் ஞானசொரூபா

வ-ம். இரண்டுபனிரண்டு இரண்டெட்டு இரண்டிருக்கால்இரண்டுதுகைபத்து.

சகுனிசொல்-தரு.

அனைத்துந்தோற்றோமென்று சற்றுமெண்ணுதா
அந்துடனுனலும் போகவொண்ணுகா

வ-ம்-நாலத்தோரஞ்சு

தர்மர்சொல்-தரு.

அண்டமெல்லாம்வாரி யுண்டசெவ்வாயா
ஆதரிக்கவேணு மார்க்கசகாயா

வசனம்.

எனுபனிரண்டு-நாலிருக்கால்-நாலெட்டு-துகை-நாலுமூணேழு

சகுனிசொல்-தரு.

விபரீதபந்தயம் விழுந்ததுவும்போச்சே
விழுவதெல்லாம்அஞ்சு மூணத்தொண்ணுச்சே

வசனம்-மூணத்தொண்ணு

தர்மர்சொல்-தரு.

தாணியெல்லா மளந்தபொற்பாதா
தடசகனேயாதி லட்சுமிசமேதா

வசனம்,

இரண்டுதுகை-நான்கிருக்கால்-எட்டுபனிரண்டு ஆறொன்ணேழு

சகுனிசொல்-தரு.

ஆட்டத்திலெல்லாங் கொடுத்துச்சலித்தான்
அடிமைத்தனம்போக இப்போகெலித்தான்

வ-ந-நாலுமுணைமூ.

பீஷ்மர்-துரோணர்-அசுவத்தாமர்-விதுரன்

இவர்கள்சொல்லுகிற-விருத்தம்.

தொண்டரென்றவர்சொல்லாமற் சூதாடித்தீர்த்துவிட்டீர்
விண்டிடுமடிமையான விலங்குமினிமேலில்லை
பண்டுறைசெய்யுமிந்தப்பதின்மூன்றுவருஷஞ்சென்றுற்
கொண்டிடுநாடும்வாழ்வுங் கொள்ளுவீர்செல்லுவீரே

வசனம்.

கேளுங்கள்பாண்டவர்களே அம்மாதுரோபதையே அடிமையென்றவர்த்தலைய அவர்கள்சொல்லாமல் அந்தவில்லங்கத்தைத் தீர்த்துவிட்டீர்கள் இனிமேல்நீங்கள் ஆரணியத்துக்குப்போய்பன்னிரண்டுவருஷம் வனவாசமும்ஒருவருஷம் அக்கியாதவாசமுமிருந்துவந்தால் மறுபடியும்எப்போதும்போல உங்களுடையஇராச்சியமெல்லாம் பெற்றுக்கொள்வீர்கள்

தருமர்-சபையோர்களுக்குச்சொல்-விருத்தம்.

அருள்பெருந்துரோணராதி ஐயரேபாட்டனாரே
மருவுசிற்றப்பாவுங்கள் மலர்ப்பதம்போற்றிபோற்றி
கருதியபெரியோருங்கள் கடாட்சம்வைத்தருளவேணும்
விரவியவனத்துக்கேக விடையதுதருகுவீரே

வசனம்.

ஐயாதுரோணரே அசுவத்தாமரே பீஷ்மரே பாட்டனாரே எங்கள் குருக்கள்மாரே எங்கள்சிற்றப்பாராகிய விதுரமகாராசனே உங்களனைவர்க்கும் சரணம்சரணம் உங்கள்திருக்கடாட்சமிருக்கவேண்டும்நாங்கள்வனத்திற்குப் போய்வருகிறோம் செலவுகொடுங்கள்பெரியோர்களே.

பீஷ்மர்-துரோணர்-அஸ்வத்தாமர்-விதுரர்

இவர்கள்சொல்-விருத்தம்.

மறிகடல்வற்றினு மகமேருகுலுங்கினும்
அறைதரும்புவியாழ்ந்தாலு மண்டங்களிடிந்திட்டாலும்
குறைவில்லாமக்களுங்கள் கொருதீங்குமவருவதில்லை
குறைவனஞ்சென்றுமீண்டு சுகமுடன்வருகுவீரே

வசனம்.

மகாசத்தியவந்தரான பாண்டவர்களே இந்தசமுத்திரசாகரங்கள்வற்றிப்போனாலும்மகாமேருவுக்கொருசஞ்சலம்வந்தாலும்பூமியானது ஆழ்ந்திப்போனாலும் பிரமாண்டகடாகங்கள் இடிந்துப்போனாலும்உங்களுக்கொருதுன்பமும் வருகிறதில்லை சுகமாய்ப்போய் வாருங்கள்மைந்தர்களே

தர்மர்சொல்-வசனம்.

அப்படியேபோய்வருகிறோம் பெரியோர்களே

பாண்டவர்கள்-காட்டுக்குப்போகிற-தரு

இ-ம்-தோடி-தாளம்-மிசரம்.

பல்லவி.

வனத்திற்பன்னிரண்டுவருஷஞ் சஞ்சரிப்போம்
வாருந்தம்பிமாரே

அநுபல்லவி.

தொனித்தசகுனிமாமன் சூழ்வினி லகப்பட்டோம்
துரைத்தனமும்நாடுஞ் சூதிற்றோற்றுவிட்டோம(வனத்)

சரணங்கள்.

எம்மாலேயாதொன்று மாகுமோ-ஆயனை
எழுதினதைத்தப்பிப் போகுமோ
தம்மாலொன்றுமில்லை- யெவர்களுக்கானாலும்
தாழ்வுஞ்சிலதுகாலம் வாழ்வுஞ்சிலதுகாலம்(வனத்)

பலரும்பகையாளியாய்ப் பிறந்தோமே-இந்தப்
பாரெல்லாம்விட்டுத் துறந்தோமே
கொங்கலர்மாலைமகுட- மன்னவருக்கும்
குறையுஞ்சிலதுகாலம் நிலையுஞ்சிலதுகாலம்(வனத்)

மன்னவர்க்கிதுமெத்த தொல்லையோ-இந்த
வருத்தப்பட்டபேர்க ளில்லையோ
இன்னமினைத்துய ரொன்றுவ தென்னமதி
என்னைத்துக்குமாயவனிரண்டு பாதமேகதி(வனத்)

# ஆது துகிலுரிதல்.

விருத்தம்-இ-ம்-முகாரி

தரியாராய்பாண்டவாளரும் வனத்தினிற்சென்றுதானும்
அரியதோர்பனிரண்டாண்டும் அக்கியாதவாசஞ்செய்துந்
திரியுறுதிகளைக்கொன்று துரோபதைசமேதராக
மருவியதாமாசன் மகுடாபிஷேகங்கொண்டார்

ஆசிரிய விருத்தம்.

காளத்திகங்கமதி தலையிற்சூடுந்
 தற்பரனும்செல்வத்தி நாதர்வாழி
மாளாததுரோபதையின் தற்புக்காக
 மலரடியில்வ[illegible] விலாசம்வாழி
மீளா[illegible]யை
 மெய்நடுங்கப் போர்க்களத்தில் வென்றுவாழி
நீ[illegible]துயரகற்றி பஞ்சவர்க்கு
 [illegible]லாவாசளித்த நெடுமால்வாழி
கார்வாழி கதிர்மதியி னுடுக்கள்வாழி
 தற்புடையதுரௌபதையாள் கணவரைந்து
பேர்வாழி பெரியோர்கள் தானும்வாழி
 பேசிடுஞ்சாஸ்திரங்கள்தம் பெருகவாழி
ஊர்வாழி இ[illegible]கைவாழி
 உற்றவாணிவிலாச அச்சுக்கூடம்வாழி
ஏர்வாழிபாகவதர்கள் தானும்வாழி
 இதைப்பதித்த சித்தையர் யென்றும்வாழி

ஸ்ரீமகாபாரதவிலாசம்.

ஆது துகிலுரிதல்

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

முற்றிற்று.